REPRINT

R. V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR (P.O.) MADRAS.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

ஆதிபர்வம்.

(ஸ்ரீவேதவ்யாஸபகவான் வடமொழியில் அருளிச்செய்த
ஸ்ரீ மஹாபாரதத்திற்குச் சரியானது.)

கும்பகோணம் காலேஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர்
மஹாவித்வான்
சதாவதானம், ஸ்ரீ உபய - வே.
தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர்
அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

கும்பகோணம் காலேஜ் தமிழ்பண்டிதர்
ம. வீ. இராமானுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா 6 : தபாலுசார்ஜு வேறு.

MADRAS:
PRINTED AT THE COMMERCIAL PRESS,
TRIPLICANE.
1923

(*All Rights Reserved.*)

THIRUVANMIYUR. MADRAS-41.

ஸ்ரீ :

விஜ்ஞாபனம்.

ஸ்ரீவேதவியாஸ மஹரிஷியினால் அருளிச்செய்யப்பெற்றதும் அளவிடக்கூடாத மஹிமையுள்ளதுமாகிய ஸ்ரீமஹாபாரதமானது ஸகலவேதசாஸ்திர நுட்பங்களையும் நன்ருக விளக்குவது. இஃது உலகத்திலுள்ள அனேக கதைகளுக்கு ஆதாரமானது. இவ்வளவு பெரியதும் அழகுள்ளதுமான கிரந்தம் உலகத்தில் எந்தப்பாஷையிலுமில்லை. இஃது இந்துமதஸம்பந்தமான சரித்திரம், தர்மம், ஞானம் முதலான ஸகலவிஷயங்களுமடங்கிய ஒருபொக்கசம்போன்றது. இது தேசாந்தரங்களிலுள்ள இங்லீஷ்முதலிய பாஷைகளிலும் இந்தியாவில் வழங்கும் அனேகபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கிவருகையில், தமிழ்ப்பாஷையில்மாத்திரம் வடமொழிக்குச்சரியான மொழிபெயர்ப்பு இல்லாமையால் ஸம்ஸ்கிருதபாரதத்தின்விஷயங்களையும் ரஸங்களையும் தமிழ்நாட்டிலுள்ளயாவரும் முழுதும் அறிந்து அனுபவிக்கக்கூடாமலே இருந்தது. சிலபெரியோர்கள் சரியான தமிழ்மொழிபெயர்ப்பு ஒன்று எளியவசனநடையில் இருக்க வேண்டுமென்று விரும்பி அதனைச்செய்யும்படி ஆஜ்ஞாபித்தார்கள். அவர்கள் கட்டளையை மறுத்தற்கஞ்சியும், இந்த இதிஹாஸரத்நத்திலுள்ள அற்புதமான விஷயங்களைத் தமிழ்நாட்டாருக்குப் பயன்படும்படி செய்யவேண்டுமென்கிற ஆவல்மிக்கும், நான் இந்த மொழிபெயர்ப்பைச்செய்வித்து வெளியிட ஆரம்பித்தேன்.

மஹாபாரதம் ஆழ்ந்த கருத்துள்ளதாதலின் அதனைச் சரியாக மொழிபெயர்த்துத் தரத்தக்க பெரிய பண்டிதர்களுடைய ஸஹாயத்தைவிரும்பி, கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதராகிய மஹாவித்வான் ஸ்ரீ உபய வே. சதாவதானம், தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமிகள்முதலிய பல பெரியோர்களிடத்து என் அபிப்பிராயத்தை விஜ்ஞாபனம்செய்தேன். இது லோகோபகாரமான ஸத்காரியமானதால், என்வேண்டுகோளுக்கிணங்கி அவர்கள் அங்கீகரித்தமையால், நான் அதிக ஊக்கத்தோடு இதில் முயற்சிசெய்யத் தொடங்கினேன். அவரவர்கள் மொழிபெயர்க்கும் பர்வங்களை அவரவர்கள் பெயராலேயே வெளியிடுவேன்.

மஹாபாரதத்தின் அர்த்தம் எளிதில் விளங்காததாயும், விளங்கினாலும் மற்றொருபாஷையில் எடுத்துச்சொல்லக் கடினமுள்ளதாயும் இருப்பதனால், அதுவிஷயத்தில், பண்டிதசிகாமணிகளான ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் தமதுபுத்தியையும், சாஸ்திரபரிச்சமத்தை

யும், வியாக்கியானங்களின் ஆராய்ச்சியையும் உபயோகப்படுத்தி, காலேஜ் வேலையுடன் இன்னும் இதரகாரியங்களுமிருக்கையில், சிரமத்தைச் சிறிதும் பாராட்டாமல் இதனை மொழிபெயர்த்துப் பலமுறை ஒப்புநோக்கி உதவிய இந்தப் பேருபகாரத்திற்காக இத்தமிழுலகம் அவர்களுக்கு என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

விஸ்தாரமான முகவுரையொன்று பின்பு வெளியிடப்படுமாதலால், அவசியம் தெரிவித்துக்கொள்ளவேண்டிய சில முக்கியமான விஷயங்களைமாத்திரம் இங்கே விஜ்ஞாபனம்செய்கிறேன்.

பாஷையைக்காட்டிலும் விஷயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்று அறிஞர்பலரும் அடிக்கடி வற்புறுத்தினமையால், அந்தமுறைப்படி ஸம்ஸ்கிருதபாஷையிலுள்ள கருத்துக்களை அமைக்கும்வகையில் தமிழ்நடை சிலஇடங்களில் சிறிதுமாறியிருத்தல் கூடும்; மொழிபெயர்ப்பு மூலத்திலுள்ளபடியே இருக்கவேண்டுமென்பதே முழுநோக்கமாதலால் தமிழ்நடை தன் ஸ்வதந்திரநடையைச் சிறிது விட்டிருக்கவேண்டிவருகிறது. எந்தமொழிபெயர்ப்பும் மூலத்தின் விஷயங்களை விளங்கச்செய்யமாத்திரம் முடியுமேயல்லது பாஷையின் நடையோடு இயற்கையில் அமைந்த ரஸபாவங்களை முழுதும் வெளியிடக்கூடாதென்பது, ஒருபாஷையிலிருந்து மற்றொரு பாஷையில் விஷயங்களை மாற்றிக்கொண்டுவர முயற்சிசெய்கிற யாவர்க்கும் தெரிந்தவிஷயமே; ஆதலால், மொழிபெயர்ப்பாக இருக்குமளவில் இருக்கவேண்டிய குணங்களை மட்டும்பார்த்துக் குற்றங்களை க்ஷமிக்கும்படி விவேகிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

மஹாபாரதம் பண்டைக்காலம்தொடங்கி ஏல்லாமதஸ்தர்களாலும் பிரமாணநூலென்று சிரமேற்கொண்டு கொண்டாடப்படுவதனால், இதில் அந்தஅந்தத்தேசங்களில் நெடுநாளாக அதிகபாடங்களும் பாடபேதங்களுமாகிய பலவேறுபாடுகள் சேர்ந்திருக்கின்றன. கும்பகோணம் மத்வவிலாஸபுத்தகசாலைத் தலைவர்களாகிய பிரம்மஶ்ரீ, டி. ஆர். கிருஷ்ணசாரியரவர்களுடையபதிப்பு அதிகபாடங்களையும் பாடபேதங்களையும்விடாமல் குறிப்புக்களோடும் கூடியதாயிருப்பதனால், அதை அனுஸரித்து இந்தமொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. பலவிதமான பரிச்ரமங்களையெடுத்துக்கொண்டு சோதித்துப் பதிப்பித்து வெளிப்படுத்தியபுஸ்தகத்தை இந்த மொழிபெயர்ப்புக்கு உபயோகித்துக்கொள்ளும்படி அனுமதிசெய்ததற்காக ஶ்ரீமத். கிருஷ்ணசாரியரவர்களுக்கு நான் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பராசரருக்கும் ஸத்தியவதிக்கும் விவாஹம்நடந்ததாகச் சொல்வதுபோன்ற இரண்டோர் இடங்களில்மட்டும் சிலபகுதிகள் எல்லோருக்கும் விரோதமென்று வெளிப்படையாகத் தோன்றுகிறபடியால்

அந்த அதிகபாடம் *மொழிபெயர்க்கப்படவில்லை. அவச்யமான இடங்களில் பாடபேதங்கள் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

வடமொழிப்பதங்களை உபயோகிக்கும்போது ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ இந்த எழுத்துக்களை அப்படியே உபயோகித்திருப்பதோடு வடசொற்கள் இயன்ற அளவு உச்சரிப்புமாறுபடாமலிருக்கும்வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றன. வடசொற்களில் நகரம், இடையில்வரும் போதும், தந்நகரமாகவேயிருத்தல் வேண்டுமோவென்ற ஐயம் சிலருக்கு உண்டாகிறது. முன்னோர் இலக்கியங்களால் அப்படித் துணியப்படாமையாலும், நகரம் ஒற்றுகவந்துள்ள வடசொற்களை மாத்திரம் தந்நகர, எதுகையிலும், உயிர்மெய்யாகவந்துள்ள ஆனகம், தானம், ஆனியம். வன்னி, தனம், அனந்தன், அனந்தம், அனங்கன், ஜானகி, மூனி, ஞானம், யானம், வனம், மனுமுதலிய வடசொற்களை றன்னகர எதுகையிலும் அமைத்து நிகண்டுகள் கூறுதலாலும், அஃது இடையில் உயிர்மெய்யெழுத்தாக வரும்போது றன்னகரமாக வழங்கிவந்ததென்றேதெரிகிறது ; ஆயினும், சிலவிடத்து வடமொழி ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ முதலிய எழுத்துக்களை அப்படியே உபயோகிப்பது போல நகரமாகவும் வழங்கப்பெற்றுவருகிறது. ஆதலால், இதில் அந்த இரண்டுவழக்கங்களையும் தழுவி நகரமாகவும் னகரமாகவும் உபயோகித்திருக்கிறேன்.

பெண்களும் பாலர்களும் எளிதில் படித்துணரத்தக்கதாயிருக்க வேண்டுமென்பது கருத்தாதலால், விளங்குதற்பொருட்டுச் சிறசில விடங்களில் உலகவழக்குச்சொற்களை அமைத்தும், முழுவதும் சந்திவிதிப்படி சொற்களைச்சேர்க்காமலும் இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மூலத்திலில்லாதசொறகள் சிலவிடத்துத் தொடர்ச்சிக்காக வருவிக்கப்பட்டுள்ளன. அந்தச்சொற்களுக்கு இருபுறத்தும் ( ) இம்மாதிரியான அடையாளங்கள் செய்யப்பட்டுள்ளன.

முன்பு, பிரகடன்பத்திரிகையில் இரண்டுமாதிரியான காகிதத்தில் பதிப்பிப்பதாகத் தெரிவித்திருந்தேன் ; இப்பால், சில ஸௌகர்யங்களை உத்தேசித்து ஒரேமாதிரியான காகிதத்தில் பதிப்பித்திருக்கிறேன். அங்கீகரிக்கும்படி அறிஞர்களைப் பிரார்த்திக்கிறேன்.

திருவாவடுதுறை ஆதீனத்து மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ **அம்பலவாண தேசிகர்வர்கள்,** நான் இளமைதொடங்கிக் கவலையின்றித் தமிழைக்கற்கும்படி வேண்டிய உதவிகளைச்செய்து என்னை நெடுகாளாக ஆதரித்துவருவதுபோலவே, இந்தவிஷயத்திலும் எனக்கு மனத்தளர்ச்சி உண்டாகாவண்ணம் அடிக்கடிவிசாரித்து வேண்டிய

* பின்பு இது மொழிபெயர்த்தல சோக்கப்பட்டுவிட்டது.

உதவிகளைச்செய்து உத்ஸாஹப்படித்திவருகிற பரமோபகாரத்திற்கு யான்செய்யும் கைம்மாறு என்ன இருக்கிறது? இப்பரமோபகாரிகளுடைய தண்ணளியும் பெருந்தகைமையும் மறக்கற்பாலனவல்ல.

" கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னுற்றுங் கொல்லோ வுலகு "

என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியமாக விளங்கும் இப்பெருந்தகையாளர்களதுபுகழ் உலகெங்கும் பரவியிருத்தலின் நான்சொல்லுவது எங்ஙனம்?

சென்னைப் பிரஸிடென்ஸிகாலேஜ் தமிழ்ப்பண்டிதரும், மஹாமஹோபாத்யாயருமாகிய உத்தமதானபுரம் பிரம்மஸ்ரீ, வே. சாமிநாதையரவர்கள், இவ்வரியகிரந்தம் தமிழில் வரவேண்டுமென்பதையே பயனுக்கருதிச் செய்யும் உதவி என்னால் மறக்கற்பாலதன்று. இப்பெருங்காரியத்திற்கு முதலிற் கையொப்பஞ்செய்து பொருளுதவிசெய்ய முன்வந்தவர்களும் அவர்களே.

தமது சிரமத்தைச் சிறிதும் பாராட்டாமல் இது ஸம்பந்தமான அச்சுக்கூடவேலைகளை ஒப்புக்கொண்டு சலிப்பின்றிப் பார்த்து அன்புடன் உதவிசெய்துவருபவர்கள், மயிலாப்பூர் - பி. சுப்பிரமணியம். ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய ம-ா-ா-ஸ்ரீ, இ. வை. அனந்தராமையரவர்கள். இங்ஙன்றியை நான் ஒருபொழுதும் மறவேன்.

பலர்சேர்ந்து நெடுநாளுழைத்து நிறைவேற்றக்கூடிய இந்த அரியகாரியத்திற்குத் துணையாகநின்று உதவும் வித்வான்கள், பிரபுக்கள்முதலிய கனவான்களுக்கு என்னுடைய வந்தனங்களை எப்பொழுதும் ஸமர்ப்பிக்கின்றேன். அவர்கள்பெயரை முகவுரையில் என்வந்தனத்துடன் தெரிவிப்பேன்.

இதிற் காணப்படுங் குற்றங்களை விவேகிகள் எழுத்து மூலமாக எனக்குத் தெரிவிப்பார்களாலால் அதைப் பரமோபகாரமாக நினைத்து நன்றியறிவுடன் ஏற்றுத் தனியே பதிப்பித்துப் புஸ்தகத்துடன் வெளியிட வித்தனை இருக்கிறேன்.

தொடங்கிய இப்பெருங்காரியத்தை நிறைவேற்றுவிக்கும்படி எல்லாம்வல்ல ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

ம. வீ. இராமானுஜாசாரியன்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

வனபர்வம்.

(இரண்டாம்பாகம்.)

திருச்சிராபுரம்

செண்ட் ஜோஸப் காலெஜ் ஸம்ஸ்கிருத தலைமைப்பண்டிதர்,

மஹாவித்வான், ஸாரஸ்வதஸாரஜ்ஞர், கவிசிகாமணி,

ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீ நிவாஸாசார்யர்

அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

பரோடா திவான், ஸ்ரீமான், ராவ் பஹதூர்,

V. T. கிருஷ்ணமாசாரியர் C. I. E. அவர்களுடைய

பேருதவியைக்கொண்டு,

கும்பகோணம் காலெஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர்

மணலூர், வீரவல்லி, இராமானுஜாசார்யரால்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா 4—0—0. சுபாத் கூலி வேறு.

1932

(All Rights Reserved)

ஸ்ரீ :

முகவுரை.

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழுஎன் மனனே.

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனும் ஸர்வசக்தனும் ஸர்வாந்தர்யாமியும் ஆச்ரிதகல்பகதருவான ஸர்வேச்வரனுடைய பரமகிருபையினால் ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியாயிற்றென்கிற பரம ஸந்தோஷத்தை ஸ்ரீமஹாபாரதகாலக்ஷேபகாலமாகிய பெரியோர் கணக்குப் பதினெண்டியுடன் தெரிவிக்கிறேன்.

இந்த மஹாபாரதமொழிபெயர்ப்பு ஸம்பந்தமாகத் தெரிவிக்கவேண்டிய சிலவிஷயங்களை முன்னெளிவந்த பர்வங்களின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். மஹாபாரத முழுதிற்கும் அறிகரணவிளக்கமும் மற்ற ஆராய்ச்சிக்குறிப்புக்களும் சித்திரம் வெளியிடுவேன். அந்தப்பஞ்சகத்தில் மற்றும் தெரிவிக்கக்கூடிய விஷயங்களைத் தெரிவித்துக்கொள்வேன். ஸ்ரீ மஹாபாரதத்தை வெளியிடத் தொடங்கியதுமுதல் இதுவரையில் நடந்தகிழ்ச்சிகளையும் இந்த வஸ்துவைப்பற்றிய விவரங்களையும் அவசியம் தெரிவிக்கவேண்டிய மற்றும் சிலவிஷயங்களையும்மாத்திரம் இங்கே ஒருவாறு சுருக்கமாகத் தெரிவிப்பேன்.

நான் கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டித வகை இருந்தபோது பள்ளிக்கூடத்திற்குப் போய்வருகிற காலம் தவிர மற்றவேளைகளில் அவகாசம் நேரும்போதெல்லாம் மஹாவித்வான், ப்ரம்மஶ்ரீ, மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி, திராவிடவித்யா பூஷணம், வே. சாமிநாதையரவர்கள்ஸமீபத்திலிருந்து புஸ்தகங்களைப் படித்துக்கொண்டும் செவிக்கினிய செஞ்சொல் அமிர்தவர்ஷமாகிய அவர்களுடைய அரியஸம்பாஷணங்களைக் கேட்டுக்கொண்டும் இனிது பொழுதுபோக்கிக் கொண்டிருந்தேன். அந்தக்காலங்களில், ஐயரவர்கள், ஸம்ஸ்கிருதத்தில்சிறந்த பண்டிதர்கள்பலரை அடிக்கடி ஸந்தித்து ஸல்லாபஞ் செய்வதுண்டு. அவர்கள் மஹாபாரதத்திலுள்ள சில சிறந்த அரியவிஷயங்களைச் சொல்லக்கேட்டபிறகு, ஐயரவர்கள், 'வில்லிபுத்தூராழ்வார் ஒப்புயர்வற்ற சிறந்த மஹாகவி. அவர் வடமொழி மஹாபாரதத்திலுள்ள விஷயங்களையெல்லாம் விடாமல் பாடியிருந்தால் மிகநன்றாயிருந்திருக்கும்' என்று பலமுறை சொல்வதுண்டு. மஹாபாரதத்தில் மிகப் பிரஸித்திபெற்ற மஹாவித்வான், மத்வசாஸ்திர ஸம்பூர்ணர், பாரதம் சாமாசார்யரவர்கள் ஒருஸமயம் இவ்வூரில் மஹாபாரதப் பிரஸங்கம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தப்பிரஸங்கத்தைக் கேட்ட சிலர் மஹாபாரதத்தைத் தமிழில்மொழிபெயர்க்கவேண்டுமென்று விரும்பித் தம் கருத்தை ஶ்ரீமத் ஐயரவர்களிடம் தெரிவித்தார்கள். மஹாபாரதம் முழுதும் மொழிபெயர்க்கக்கூடாவிட்டாலும் சாந்திபர்வ அநுசாஸனபர்வங்களையாவது மொழிபெயர்க்கவேண்டுமென்றும் அதனை ஐயரவர்களே மேற்கொண்டு செய்யவேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். ஐயரவர்களுக்குத் தமிழிலுள்ள சங்கநூல்களிலும் மற்றச் சிறந்த காவ்யங்களிலும் பலவகைப்பிரபந்தங்களிலும் உள்ளசுவை வேறெந்நூலை மேற்கொண்டுசெய்ய இடந்தரவில்லை. ஆனாலும், ஐயரவர்களைக் கொண்டே செய்விக்கவேண்டுமென்று சிலகனவான்கள் ஆவல் கொண்டிருந்தார்கள். அந்தக்காலத்தில் கும்பகோணம் காலேஜில் கணிதபோதகாசிரியராயிருந்த ஶ்ரீமான் R. சக்கரவர்த்தி ஐயங்காரவர்கள் பாரதம் சாமாசார்யரவர்களைக்கொண்டு சாந்திபர்வ அநுசாஸனபர்வங்களையாவது மொழிபெயர்க்கச்செய்து ஐயரவர்களைக்கொண்டு திருத்தி வெளியிடவேண்டுமென்று விரும்பி, ஒருவருக்கு மாதச்சம்பளங்கொடுத்து, சாமாசார்யரவர்கள் சொல்லு

கிறதை எழுதும்படி ஏற்பாடுசெய்தார்கள். அப்படி எழுதியவர்கள் இப்போது திருவையாற்று ஸம்ஸ்கிருதகாலேஜில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருக்கும் ஸ்ரீ. உ. S. ஸந்தானமையங்கார்வர்கள். அப்படி எழுதியதில், சாந்திபர்வம் மாத்திரம் முடிந்தது. பிறகு, என்னகாரணத்தினலோ நின்றுபோயிற்று. சிலவருஷங்களின்பின், 1903-ம் வருஷக்கடைசியில், ஸ்ரீமத் ஐயரவர்கள், சென்னை, பிரஸிடென்ஸி காலேஜிற்கு மாற்றலாகி அங்கே சென்றார்கள்.

பிறகு, ஒருஸமயம் நான் சில நண்பர்களோடு வார்த்தைசொல்லிக்கொண்டிருக்கையில், சிலர், 'பெண்பாலாரும் சிறுபிள்ளைகளும் படிக்கக்கூடிய நல்ல வரன்நூல்கள் தமிழில் இல்லை' என்றும், 'மஹாபாரதத்திலிருந்து சில சில உபாக்யானங்களை மொழிபெயர்த்து வெளியிட்டால் நலமாயிருக்கும்' என்றும் சொன்னார்கள். மற்றும் சிலர், 'மஹாபாரதத்திற்கே நேரான மொழிபெயர்ப்பு இல்லாமையால் அதனையே செய்யலாம்' என்று சொன்னதோடு அதனை நானே மேற்கொண்டு செய்யவேண்டுமென்றும் வற்புறுத்திச் சொன்னார்கள். ஒருவித ஸைகர்யமும் இல்லாத நான் இந்தப் பெருங் கார்யத்தை எப்படிச் செய்வதென்று பயந்து அந்த வேலையை மேற்கொள்ளத் துணியவில்லை. அத்வைதஸித்தி, ப்ரம்மாநந்தீயம் முதலிய அரிய கிரந்தங்களைத் தக்க பண்டிதர்களைக் கொண்டு சோதித்து அச்சிட்டு வெளியிட்டவர்களும் அதற்காகவே தம்முடைய செல்வம் முழுவதையும் செலவு செய்தவர்களுமாகிய ப்ரம்மஸ்ரீ, கோனேரிராஜபுரம் ஸாம்பசிவ ஐயரவர்கள் அந்த ஸமயம் அங்கே வந்தார்கள். அவர்கள் நாங்கள் வார்த்தைசொல்லிக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்டு மஹாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்படாதது பெருங் குறையேயென்றும், அதனை நான் உடனே தொடங்கி நடத்தவேண்டுமென்றும் நிர்ப்பந்தித்துச் சொன்னார்கள்.

நான், இளமைமுதல், பெரியோர்கள் செய்த காவியங்களைக் காட்டிலும் அவர்களுடைய சரித்திரங்களை மிகுதியாகப் படிப்பேன். அவர்கள் மிக முயன்று பெரிய காரியங்களை நிறைவேற்றினார்களென்றும், அதனால், உலகத்துக்குப் பயனுண்டாயிற்றென்றும் படிக்கும்போதெல்லாம், நானும் ஏதாவது உலகத்துக்கு உபயோகமான காரியத்தைச் செய்யவேண்டுமென்னும் விருப்பம் என் மனத்தில் அடிக்கடி உண்டாகும். நண்பர்கள் இந்த மஹர்

பாரத மொழிபெயர்ப்பை மேற்கொண்டு செய்யும்படி தூண்டிய வுடன், இத்தனைச் செய்யலாமென்னும் விருப்பம் என் மனத்தில் உண்டாயிற்று; இதைச்செய்வதிலுள்ள ஶ்ரமங்களை நினைத்துத் துணிவு பிறக்கவுமில்லை. இப்படி மனம் குழம்பிக்கொண்டிருந்தது. 'காதலித்து ஒன்று உற்றூர்மூன் றோன்று உறுமுதல்' என்றபடி, எப்படியிருந்தாலும் மேற்கொண்டு செய்வதென்னுந் துணிபே வென்றது.

பிறகு, சென்னையில், ஶ்ரீமத் ஐயரவர்களுக்கு எழுதினேன். அவர்கள் இதனை உடனே தொடங்கிச் செய்யவேண்டுமென்றும், இதை வெளிப்படுவதைக் காட்டிலும் தமிழுக்குச் செய்யக்கூடிய பேருதவியும் புண்ணியமுமான காரியம் இல்லையென்றும் எழுதிய தோடு மணியார்டர் மூலமாக ரூ. 30 அனுப்பியும் அனுக்ரகஞ் செய்தார்கள். இவர்கள் எனக்குப் பல நன்மைகளைச் செய்து வருவதோடு பின்னும் பல தடவைகளில் பொருளுதவி செய்திருக் கிறார்கள். இவர்கள் எனக்குப் பல நல்ல நூல்களைப் பாடம் சொல் லியும் பல நல்லுபதேசங்களைச் செய்தும் என்னை நல்வழிப்படுத்தி னார்கள். என்னிடத்தில் ஏதாவது நன்மையிருக்குமானால், அது இவர்களால் கிடைத்ததே.

உடனே, இதைச் செய்வதென்றே நிச்சயித்து, நான் எண்ணி யதை, ஸதாசார ஸம்பன்னர்களும் ஸத் தர்மபரிபாலகர்களும் அத்வைத வித்யாபாரங்கதர்களுமான ப்ரம்மஶ்ரீ Prof. K. ஸுந் தரராமையர், M. A., அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள், 'நீ இதனை நிறைவேற்றுவாய்' என்று அனுக்ரகஞ் செய்தார்கள். அவர்கள், சில ஸஞ்சிகைகள் வெளிவருதற்குள் ரூ. 200 கொடுத்து உதவினார்கள். பிறகு, ஸஞ்சிகைகள் வெளிவருந்தோறும் ஸஞ் சிகை ஒன்றுக்கு ரூ. 10 வீதம் கொடுத்து ஆதரித்து வருகிறார்கள். நான், 'முன்னமே அதிகம் செய்துவிட்டமையால் இனி இந்த ஶ்ரமம் வைத்துக்கொள்ளவேண்டாம்' என்று பலமுறைதடுத்தும், அவர்கள், 'மஹாபாரதமாயிருப்பதோடு தாங்கள் செய்வதாகவும் இருக்கையில், நான் செய்யவேண்டியவிதம் வேறு; நான் சிறிதே கொடுக்கிறேன். தாங்கள் மறுக்கக்கூடாது' என்று நிர்ப்பந்தித் துக்கொடுத்து உதவிவருகிறார்கள். என்னிடத்திலுள்ள அன்பி னாலும் ஶ்ரீமஹாபாரதத்திலுள்ள பேரபிமானத்தினாலும் அவர் கள் செய்துவருகிற உதவிகள் பல. அவர்களைப்பற்றிச் சாந்தி பர்வம் இரண்டாம்பாக முகவுரையிலும் உத்யோகபர்வமுகவுரை

யிலும் தெரிவித்திருக்கிறேன். இந்த இரண்டுமஹாபுருஷர்களும் ஜபயஜ்ஞாதி உபாஸனங்களால் கடவுளை வழிபட்டு வித்திபெற்றவர்களாதலாலும், இவர்கள், ஜபகாலங்களில் ஸ்ரீ மஹாபாரதம் பூர்த்தியாகவேண்டுமென்று பிரார்த்தனை செய்துவருகிறார்களாதலாலும், இவர்களுடைய அனுக்ரகமே இந்த அரியபெரிய நற்காரியத்தை முற்றுப்பெறச்செய்தது.

பிறகு, யாரைக்கொண்டு எப்படி மொழிபெயர்ப்பதென்று ஆலோசித்தேன். ஸ்ரீ மஹாபாரதம் மிகப்பெரியதும் மிகக்கடினமான பல அரிய விஷயங்களடங்கியதுமாயிருத்தலாலும், ஒரு முறை படித்துமுடிப்பதற்கே பலவருஷங்களாகுமாதலாலும், மஹாபாரதம் முழுதையும் படித்து நன்கு தெரிந்துகொள்வோர்கள் மிகச்சிலரே உண்டு. மஹாபாரதம் மிகக்கடினமாகச் செய்யப்பட்டதற்குக் காரணத்தை ஆதிபர்வத்தில் கக-வது மூதலியபக்கங்களில் காண்க. மஹாபாரதத்தை, மத்வசாஸ்த்ரஸம்பூர்ணர், மஹாவித்வான், பாரதம் சாமாசார்யரவர்களும், மத்வசாஸ்த்ரஸம்பூர்ணர், மஹாவித்வான், பாரதஹிம்ஹம், கா. பெ. ராமசந்திராசார்யரவர்களுமே சொல்லவல்லவர்களென்றும், அவர்களில், ஸ்ரீமான், சாமாசார்யரவர்கள் அந்தச்சமயம் உள்ளூரில் இல்லாமையாலும் அடிக்கடி உபந்யாஸங்களுக்காக வெளியூர்களுக்குப் போய்வந்துகொண்டிருந்தமையாலும் அவர்கள் மூன் ஒரு முறை மொழிபெயர்க்கத் தொடங்கி முற்றுப்பெறாமல் நின்றுபோனதால் திரும்ப மொழிபெயர்த்தலை மேற்கொள்ளுதற்கு ஸம்மதிப்பார்களோ என்று ஸந்தேகமாயிருந்தமையாலும், ஸ்ரீமத் ராமசந்திராசார்யரவர்களையே பிரார்த்திப்பதென்று நிச்சயித்து அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் என்னுடைய வேண்டுகோளைப் பரமப்ரீதியுடன் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், தாம் வழக்கமாகப் புராணம் சொல்லுவதை நிறுத்தமுடியாதென்றும் ஒழிந்தநேரங்களில் சொல்லத் தடையில்லையென்றும் சொன்னார்கள். அப்படியே, முதலில் நளோபாக்யானத்தைப் பரீக்ஷார்த்தமாக மொழிபெயர்க்கத் தொடங்கினேன். காலை நேரங்களில் சிறிது அவகாசமே கிடைத்தமையால் ஒரு நாளைக்கு ஏழு எட்டு ஸ்லோகங்களே நடந்தன. அவர்கள், அப்படிச் சிறிதுசிறிதாக நடந்தால் மஹாபாரதத்தைப் பலவருஷங்களிலும் பூர்த்திசெய்யமுடியாதென்றும், தமக்கு அதைக் காட்டிலும் அதிக அவகாசமில்லையாதலால் தம்முடைய தமையனரும்

திவான்பஹதூர், ஸ்ரீமான், R. ரகுநாதராயர் C. S. I. அவர்களுடைய கோபாலவிலாஸ புஸ்தகசாலைத்தலைவருமான மத்வசாஸ்திரஸம்பூர்ணர், ஸ்ரீமான், அ. வேங்கடேசாசார்யரவர்களுக்கு மஹாபாரதத்தில் மிக்க பரிசயமிருப்பதோடு அவகாசமுமிருப்பதால் அவர்களைக்கொண்டு விரைவாக நடத்தலாமென்றும் சொல்லி அவர்களுக்குச் சிபார்சும் செய்தார்கள். வேங்கடேசாசாரியரவர்கள் இந்தவேலையைப் பரம த்ருப்தியோடு ஏற்றுக்கொண்டு உடனே செய்யத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்குப் போதுமான அவகாசமிருந்தமையால் அவர்கள்சொல்லும்போதெல்லாம் கூட இருந்து எழுதும்படி ஒருகுமாஸ்தாவை நியமித்து எழுதச்செய்தேன். அவர்கள் விராடபர்வத்தையும் உத்யோகபர்வத்தையும் மொழிபெயர்த்தார்கள். இது எழுதத் தொடங்கிய சிலநாட்களுக்குள், அப்பொழுது கும்பகோணம் காலேஜில் ஸம்ஸ்கிருதபண்டிதராயிருந்த மஹாவித்வான், ஸ்ரீ. உ. வே. சதாவதானம், தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்யரவர்களை ஸந்தித்து மஹாபாரதமொழிபெயர்ப்புத் தொடங்கப்பெற்று நடந்துவருதலைத் தெரிவித்தபோது, அவர்கள் இந்தவேலையைச் செய்துகொடுப்பதில் தமக்கு விருப்பமிருப்பதாகவும் சிலபர்வங்களை மொழிபெயர்த்துக் கொடுப்பதாகவும் பேரன்புடன் சொன்னார்கள். ஆதிபர்வம், ஸபாபர்வம், வனபர்வம், அநுசாஸனபர்வம் இந்த நான்குபர்வங்களையும் கீதாபாஷ்யத்தையும் மொழிபெயர்த்துக்கொடுப்பதாக ஓர் உடன்பாட்டின்மேல் ஒப்புக்கொண்டு உடனே எழுதத்தொடங்கினார்கள். அவர்களுடன் கூடவே இருந்து எழுதும்படிக்கும் ஒருகுமாஸ்தாவை அமர்த்திக் கொடுத்தேன். அப்படியே வேலை நடந்துவந்தது. அப்பொழுது அச்சுப் புஸ்தகமாக இருந்த எல்லாப்பதிப்புக்களையும் வைத்துக்கொண்டு எது எதில் எது எது சிறந்திருக்கிறதோ அது அதிலிருந்து அதை அதை எடுத்துக்கொள்வதென்றும் அவஸ்யமான இடங்களில் ஏட்டுப்புஸ்தகங்களிலுள்ள பாட பேதங்களையும் சேர்த்துக் கொள்வதென்றும் நிச்சயித்து அந்தப்படி மொழிபெயர்த்தோம்.

1874-75-வது உண்டான பஞ்சத்தில் செங்கற்பட்டு ஜில்லா கரிச்சங்காலிலுள்ள ஒரு செல்வவானிடம் பல ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் வந்து அண்டினார்களென்றும் அந்தப் பிரபு அந்தப் பண்டிதர்களைக்கொண்டு மஹாபாரதத்தை மொழிபெயர்க்கச் செய்து ஏட்டுப்பிரதியாக எழுதிவைத்திருக்கிறரென்றும் கேட்

டேன். அது உபயோகமாயிருந்தால் அதையே திருத்தி அச்சிடலாமென்று ஆதிபர்வத்தை வருவித்துப் பார்த்தேன். அது தக்க பண்டிதர்களால் ஸ்ரமப்பட்டுச் செய்யப்பட்டதாயினும் நாங்கள் செய்ய உத்தேசித்திருந்த முறைப்படி இல்லாமையால் அதைக் கொடுத்தவர்களிடம் திருப்பி அனுப்பிவிட்டேன்.

இந்த மஹாபாரதப்பதிப்பு வெளியிடுவதாக ஸமாசாரபத்திரிகைகளின்மூலம் பிரசுரம் செய்தவுடன், சிலர் எந்தப்பதிப்பை அனுஸரித்து மொழிபெயர்க்கப்படுகிறதென்று எழுதிக் கேட்டார்கள். நாங்கள் செய்துவருகிற முறையைத் தெரிவித்தபொழுது, அவர்கள், 'இப்பொழுது வெளிவந்துள்ள வடமொழி மஹாபாரதங்களெல்லாம் ஒன்றுக்கொன்று பல வேறுபாடுகள் உடையனவாயிருக்கின்றன. எல்லாவற்றையும் கலந்து நீங்கள் மொழிபெயர்ப்பீர்களானால் அது ஒரு மூலபுஸ்தகத்துக்கும் ஒத்ததாயிராதே. நீங்கள் பல புஸ்தகங்களையும் பார்த்து நிச்சயிக்கிற பாடப்படி வடமொழி மூலத்தையும் பதிப்பித்து மொழிபெயர்ப்பையும் வெளியிட்டால் உபயோகமாயிருக்கும்; அப்படியில்லாவிட்டால் மஹாபாரத கதையை ஒருவாறு தெரிவித்ததாகுமேயன்றி ஒன்றன் நேரான மொழிபெயர்ப்பு ஆகாது' என்று எழுதினார்கள். அதைப்பார்த்தபோது மனம் சிறிது கலங்கியது. பிறகு, தக்கவர்களுடன் ஆலோசித்ததில், கும்பகோணம் மத்வவிலாஸ புஸ்தகசாலைத் தலைவர்களாகிய ஸ்ரீமான் T. R. க்ருஷ்ணசார்யரவர்களுடைய பதிப்புத் தென்தேசத்துப் பாடத்தையும் தழுவியிருத்தலால் அதனையே மூல க்ரந்தமாக வைத்துக்கொண்டு மொழிபெயர்ப்பதென்பது நிச்சயமாயிற்று. அதன்மேல், T. R. க்ருஷ்ணசார்யரவர்களைக் கண்டு கேட்டேன். அவர்கள் பேரன்புடன் அனுமதியளித்தார்கள். அதனை ஆதிபர்வமுகவுரையில் தெரிவித்திருக்கிறேன்.

இந்தமாதிரி நிச்சயிப்பதற்கு முன்னமே, வேங்கடேசசாரியரவர்கள் விராடபர்வமும் உத்யோகபர்வமும், ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் ஆதிபர்வத்தில் பெரும்பாகமும் மொழிபெயர்த்துவிட்டார்கள். T. R. க்ருஷ்ணசார்யரவர்கள் பதிப்புப்படி மொழிபெயர்க்க வேண்டுமென்று நிச்சயித்த பிறகு, முன்செய்த மொழிபெயர்ப்பு உபயோகப்படாமல் திரும்பச் செய்ய நேர்ந்தது.

இந்த ஸமயத்தில் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிட உத்தேசித்திருப்பதை ஸ்ரீமான், திவான்பஹதூர்,

R. ரகுநாதராயர் C. S. I. அவர்களிடம் தெரிவித்தபொழுது, அவர்கள், 'இந்தக்காரியம் ஸாதர்ரணமானதன்று; பெரிய ஸாஹஸமான்து. இது ஒருர்ராஜகரத்தில் மேற்கொண்டு நடத்தப் படவேண்டியகாரியம்' என்றுசொல்ல, நான், 'சிலநண்பர்கள் வேண்டிய உதவிகளைச் செய்வதாகவும் அவஸ்யம் நடத்தவேண்டு மென்றும் வற்புறுத்துகிறார்கள்' என்றும்,'இதுவரை ரூபா ஆயிரத் துக்குமேல் செலவாயிற்று' என்றும் தெரிவித்தபோது, அவர்கள், 'எல்லாரும் சொல்வார்கள். காரியம் வரும்பொழுது ஒருவரும் நெருங்கமாட்டார்கள். இதுவரையில் செலவாயிருக்கிற நஷ்டத் தோடு போகட்டும். மேலும், அதிகஸ்ரமத்தை அடைய்வேண் டாம்' என்று தடுத்தார்கள். இதே ஸமயத்தில் கும்பகோணம் காலேஜில் எனக்குமுன் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர்களும் பல வருஷங்களில் யூனிவர்ஸிடித் தமிழ்ப்பாட புஸ்தகங்களுக்கெல்லாம் உரை எழுதிவெளியிட்டு அதனல் பெரும்புகழையும் மிக்கபொரு ளையும் அடைந்தவர்களும் புஸ்தகப்பிரசாரவேலையில் பிறப்பி னலேயே திறமைவாய்ந்தவர்களும் என்னிடத்து மிக்க அன் புடையவர்களுமான ஸ்ரீ. உ. வை. மு. சடகோபராமானுஜா சாரியரவர்கள்,'இது நம்மைப்போன்றவர்கள் செய்யக்கூடிய் காரிய மன்று; பலபண்டிதர்கள்சேர்ந்து பலவருஷங்களில் செய்யக் கூடிய பெருங்கார்யம். நாம் நமதுகல்வியறிவையும் பரிஸ்ரமத்தை யும்கொண்டு செய்யக்கூடியகாரியத்தைமாத்திரம் செய்யலாமே யன்றி இப்படிப்பட்ட பெருங்கார்யத்தை மேற்கொள்ளவே கூடாது' என்று என்னிடம் மூன்றுமுறைவந்து வற்புறுத்திச் சொல்லித் தடுத்தார்கள். எனது யோகக்ஷேமத்தில் பெரிதும் பொறுப்புள்ளவர்களும் என்னுடைய அம்மானுமான மணலூர் ஸ்ரீ. உ. முடும்பை. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்ஸ்வாமிகள், இது ஸாதாரணமாகச்செய்யக்கூடிய காரியமன்றென்றும் மிக்கபொருட் செலவுள்ளதென்றும் ஸ்ரமமானதென்றும் பலரும் சொல்லக் கேட்டு மிக்கவலியுற்று இந்தக்காரியத்தைச் செய்யவேண்டா மென்று என்னிடம் குறிப்பாகச் சொன்னார்கள். நான் இந்த வேலையை விடாமல் மேன்மேலும் செய்துகொண்டேயிருந்தமை யால், என்னுடைய தமக்கையார்வார்த்தையை நான் தட்ட மாட்டேனென்று நிணைத்து அவர்களிடம்சொல்லி எனக்குச் சொல்லச்செய்தார்கள். அப்படியே, அவர்களும் நிரம்ப வற் புறுத்திச்சொன்னார்கள். இவர்களெல்லாம் சொல்லச்சொல்ல,

'இதனை எப்படியாவது செய்துவிடவேண்டும்'என்னும் எண்ணமே என்மனத்தில் வேரூன்றியது. 'காரியம் உத்தமோத்தமமானதென்று எல்லாரும் சொல்லுகிறார்கள். யாராவது ஒருவர் ப்ரமமெடுத்துக்கொண்டுதானே நல்லகாரியம் நிறைவேறவேண்டும். நல்லகாரியத்தை மேற்கொண்டுசெய்து அதனால் ப்ரமமேற்பட்டாலும் அறிவுடையோர் அவமதிக்கமாட்டார்கள். யார் என்ன தடைசெய்தாலும், என்ன ப்ரமமுண்டானாலும் இதனை விடாமற் செய்கிறது' என்றும், 'நான்செய்வது நல்லகாரியமாயிருந்து கடவுளுக்கும் திருவுள்ளமானால் எப்படியும் இனிது நிறைவேறும்' என்றும் என்னுள் நிச்சயித்துக்கொண்டு ஊக்கத்துடன் காரியத்தை நடத்திவந்தேன்.

முதலில் மொழிபெயர்த்திருந்த சிலபர்வங்கள் திரும்ப மொழிபெயர்க்க நேர்ந்தமையால், நிச்சயித்திருந்தபடி, அப்பொழுதே ஸஞ்ஜிகை அச்சிடத் தொடங்கக்கூடவில்லை. சிலஸஞ்ஜிகைகளுக்குக் கையெழுத்துப்பிரதி தயாரானவுடன் அச்சிடத் தொடங்கினேன். பலமாதங்கள் ப்ரமப்பட்டு ஸித்தம்செய்த கையெழுத்துப்பிரதி சிலவாரங்களிலேயே அச்சிடப்பட்டுவிட்டது. பிறகு, அப்போதப்போது மொழிபெயர்த்து உடனுடன் சோதித்து அச்சிடநேர்ந்தது. ஆதிபர்வத்தில் சில ஸஞ்ஜிகைகள் வெளிவந்தன. இதற்குள் மஹாபாரதமொழிபெயர்ப்புவேலை நடப்பது தெரிந்த சில பெரியோர்கள், 'இது முற்றுப்பெறுதகாரியம்; சாந்திபர்வமும் அநுசாஸனபர்வமும் வரும்பொழுது இதனுடைய ப்ரமம் தெரியும்; அங்கேவந்தவுடன் நின்றுபோகும்' என்று சொல்வதாகக் கேட்டேன். Prof. K. ஸுந்தரராம ஐயரவர்கள் வேலை எப்படிநடக்கிறதென்பதைப்பற்றி விசாரிக்கும்போதெல்லாம்,'மஹாபாரதத்தில் சாந்திபர்வ அநுசாஸனபர்வங்கள் மொழிபெயர்க்கப்பட்டபிறகுதான் மஹாபாரதம் மொழிபெயர்க்கப்பட்டதாக எண்ணலாம்'என்று கவலையோடு சொல்வார்கள். என்னுடைய ஏஜண்டு திருவனந்தபுரம் போனபொழுது அங்கே ஒருதக்கனவான், 'ஐயங்கார் ஆலோசியாமல் பெருங்காரியத்தைத் தொடங்கிவிட்டார். சாந்திபர்வம் வந்தவுடன் நிறுத்திவிடுவார்' என்று சொன்னார்களாம்.

இவற்றுக்குமுன்னாலேயே, முதல்ஸஞ்ஜிகை அச்சிடுவதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம்செய்து வேலைதொடங்கியவுடன், மஹா

பாரதப்பதிப்புவிஷயத்தை ஸமாசாரபத்திரிகைகளால் தெரிந்து, பாலவநத்தம் ஜமீன்தார்களும் மதுரைத்தமிழ்ச்சங்கஸ்தாபகர்களும் தமிழ்ப்பாஷையையும் தமிழ்ப்பண்டிதர்களையும் மிக ஆதரித்தவர்களுமான ஸ்ரீமான், பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள், முன்னம் செந்தமிழ்ப்பத்திராசிரியரும் இப்பொழுது சென்னைத் தமிழ்லெக்விகன் ஆபீவில் பிரதமதமிழ்ப்பண்டிதராயிருப்பவர்களுமான ஸ்ரீமான், மு. ராகவையங்காரவர்களைக்கொண்டு ஒரு லிகிதம் எனக்கு எழுதுவித்தார்கள். அதில், 'இங்கேயுள்ள சில கனவான்கள், பிரதாபசந்திர ராயினுடைய இங்கிலிஷ்மொழி பெயர்ப்பிலிருந்து மஹாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இவ்விடம் தமிழ்ச்சங்கத்தில் வெளியிட உத்தேசித்திருக்கிறார்கள். ஒரேவேலையை இருவர்செய்வதைக்காட்டிலும் தாங்கள் வேறு ஏதாவது நல்லவேலையை எடுத்துக்கொண்டுசெய்தல் நலமாகும். இந்தவிஷயத்தை ஸாமியவர்கள் தங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்கள்' என்றும், அவர்கள் இன்னதினத்தில் இன்னவண்டியில் சென்னைக்குப்போகிறார்கள். அவர்களைக் கும்பகோணம் ஸ்டேஷனில் அந்தவண்டியில் ஸந்திக்க என்றும் எழுதியிருந்தது. நான் உடனே, அவர்களுக்கு, 'இங்கிலிஷில் அரபிக்கதை (Arabian Nights) முதலிய ஸாதாரணமான கட்டுக்கதைகளுக்கும் ஒவ்வொரு கம்பெனியிலும் பலபல பதிப்புக்கள் உள்ளன. மஹாபாரதத்துக்குப் பங்காளிபாஷையில் தனித்தனியே மூன்றுமொழிபெயர்ப்புக்கள் உள்ளன. ஆதலால், தமிழில் இரண்டுமொழிபெயர்ப்பு இருப்பது அதிகம் ஆகாது. இதனையும் சங்கப்பதிப்பாகவேகருதி ஆதரிக்கவேண்டுமென்று பிரபு அவர்கள் ஸமூகத்தில் தெரிவிக்கவேண்டும்' என்று எழுதினேன்.

இரண்டுமூன்று ஸஞ்சிகைகள் வெளிவந்தபிறகு, சென்னை எக்ஸிக்யூடிவ் கௌன்ஸிலில் மெம்பரும் மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ், வேங்கடரமணவைத்யசாலை முதலிய பலதர்மஸ்தாபனங்களை ஏற்படுத்தித் தேசத்திற்குப் பேருதவிசெய்து பெரும்புகழ்படைத்தவர்களுமான ஸ்ரீமான், V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் திருவிடைமருதூரில் வந்திருந்தபோது, அவர்களுக்கு, அவர்களுடைய ஸம்பந்தியும் எனக்குப் பரம ஆப்தர்களுமான ஸ்ரீமான் பச்சையப்பமுதலியார்தெரு ராமஸ்வாமி ஐயரவர்கள் மூலமாகத் தெரிவித்தேன். அவர்கள், 'இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பு முன்னமே பலர்தொடங்கி நடைபெறுமல்போயிற்று. இதில்

எனக்கு நம்பிக்கையில்லை. க0, கஉ-ஸஞ்சிகைகளாவது வெளி வந்தால்தான் நம்பலாம்' என்று சொன்னார்கள்.

வலங்கைமான் ஜோஸ்யம் கோவிந்த செட்டியார் எழுதிக் கொடுத்த ஆரூடத்தைப்பற்றி உத்யோகபர்வம் முகவுரையிலும் இந்தவனபர்வம் முதற்பாகமுகவுரையிலும் தெரிவித்திருக்கிறேன். தாம் சொல்வனவற்றையெல்லாம் நம்பும்படி எனக்கும் என்னுடைய நண்பர் பலருக்கும் அவர் பலமுறை ஆரூடம் சொன்னதுண்டு. அவர் சிலஸமயங்களில் என்வீட்டிற்கு வந்து வார்த்தை சொல்லிப் போவர். நான் மஹாபாரதத்தை வெளியிடத் தொடங்கிச் சிலவருஷங்களுக்குப் பின் அவர் ஒருமுறை என்னிடம் வந்திருந்தார். அவரைப்பார்த்து, 'ஓர் ஆரூடம் சொல்ல வேண்டும்' என்று கேட்டேன். அவர் ஒரு காகிதத்தில் சில விஷயத்தை எழுதி என்னிடம்கொடுத்தார். அதைப்படித்துப் பார்த்தவுடன், என் கவலை முன்னிலும் பலமடங்கு அதிகமாயிற்று. அதில் எழுதியிருந்ததை வெளியிற்சொன்னால்,முன்னமே பாரதவேலையை மேற்கொள்ள வேண்டாமென்று சொல்லிய என்னுடைய வீட்டிலுள்ளவர்களும் மற்ற ஆப்தர்களும் வேலையை மேலே நடத்தவே கூடாது என்று நிர்ப்பந்தித்து நிறுத்திவிடுவார்கள். ஆதலால், அதனை அப்பொழுது வெளியிடாமல் ஒருகாகிதஉறையில் வைத்து அரக்கு முத்திரையிட்டு, அதன்மேல், 'வலங்கைமான் கோவிந்த செட்டியாரவர்கள் ஆரூடம்; இதனை ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியான பிறகுதான் திறந்து பார்க்கவேண்டும்' என்று எழுதி ஜாக்ரதையாக வைத்திருந்தேன். வனபர்வம் இரண்டாம் பாகம் கடைசிப் பக்கம் பதிப்பு ஆகிவிட்டமையால், சென்ற டிஸம்பர்மீ 24வ வியாழக்கிழமை மாலை, பிரம்மஸ்ரீ Prof K. ஸுந்தரராம ஐயரவர்கள் கிருகத்தில் அவர்களும் கும்பகோணம் அட்வொகேட் ஸ்ரீமான் M. K. வைத்யநாத ஐயரவர்களும் அட்வொகேட்டும் கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியர்ஸ்வாமிகள் மடத்து ஏஜண்டுமான ஸ்ரீமான், K. குப்புஸ்வாமி ஐயரவர்களுமாகிய தக்கோர்கள் முன்னிலையில், அரக்கு முத்திரையிட்ட அந்தக் காகித உறையைப் பிரித்துப்பார்த்ததில், 'பாரதம் தமிழ்செய்யக் கேட்கிறது. வருஷம் மூணு செல்லு. இதில் கவலை அதிகம். முடிவாகிற முன்னிட்டு விஷ்ணுதரிசனம் கிடைத்து * * * * *. அதிலிருந்து சிலது பாக்கி நின்றுவிடும். அநேக பிரபுக்கள் ஒத்தாசை நேசம் கிடைக்கும் * * * * *' என்று எழுதியிருந்தது. இதில்

எழுதாதுவிடப்பட்டவை என் வருங்கால நிகழ்ச்சியைப்பற்றியதும் என்குடும்பஸம்பந்தமானதுமாகையால், அவற்றை இங்கே வெளியிடவில்லை. இப்படி எழுதியிருந்ததனால், முன்பு இதைப் பார்த்த போது என்மனத்தில் ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியாகாதென்ற எண்ணமே உண்டாயிற்றுனும், 'இதுவரையில் நடக்கும்; இங்கே நிற்கும்' என்று தெரியாமையால், 'உறுதி பயப்ப கடைபோகா வேனும், இறுவரை காறும் முயல்ப' என்றபடி நடந்தவரையில் நடத்தலாமென்றுகருதி நடத்திக்கொண்டேவந்தேன். ஆதியில், திவான் பஹதூர், ரகுநாதராயர் C. S. I. அவர்களும் ஸ்ரீமான், வை. மு. சடகோபராமானுஜாசார்யரவர்களும் பலகாரணங்காட்டித் தடுத்தார்கள். பிறகு, என் அம்மானும் தமக்கையாரும் தடுத்தார்கள். ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களும் மற்றும்பலரும், 'இது முற்றுப்பெறாது' என்று சொல்லியிருந்தார்கள். அவற்றோடு செட்டியாருடைய ஆரூடமும் சேர்ந்து என்மனத்திற்கு இன்னகவலையை உண்டாக்கியிருக்குமென்பதை அறிஞர்கள் ஊகிக்க வேண்டும். கோவிந்தசெட்டியார் எழுதிக்கொடுத்த ஆரூடத்தை என்னோடு இடைவிடாமல் பழகிக்கொண்டிருப்பவர்களுக்கும் சொல்லாமல் உ-வருஷகாலம் மனத்தில் வைத்துக்கொண்டிருந்தது ப்ரமமாகவே இருந்தது. சரீரத்திற்கு ஏதாவது சிறிது அஸௌகர்யம் உண்டாகும்போதெல்லாம் செட்டியார் ஆரூடப்படி மஹாபாரதவேலை நின்றுபோகுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டே பலவருஷங்கள் சென்றன. ஒருவேலையைச் செய்யத் தொடங்கியவர் அந்தவேலையை, 'முடிப்பேன்' என்று மனவுறுதியுடனிருந்தால் அந்தமனவுறுதியே (Will Power) அந்தக்கார்யத்தை முடிக்குமென்று சொல்லுகிறார்கள். இங்கே கார்யம் நிறைவேறுதென்று நினைத்துக்கொண்டே செயற்கரிய இந்தப் பெருங்கார்யம் பூர்த்தியானது ஓர் ஆச்சர்யமன்றே? அப்படி நினைத்துக்கொண்டிருக்கையிலும், 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலவின்றித், தாழாது உளுற்று பவர்' 'அல்லனபோல், ஆவனவும் உண்டு சில' 'உலையா முயற்சி களைகணு ஊழின், வலிசிந்தும் வன்மையும் உண்டே' என்னும் பெரியோர்வாக்குக்களை அடிக்கடி நினைத்துக்கொண்டு, 'கோவிந்தசெட்டியார் சொல்லியபடி நின்று விடாமல் இந்தநற்காரியம் கடவுளருளால் இனிது நிறைவேறுமாம்; எந்தக்காரணத்தாலும் நம்முடையமுயற்சியைத் தளரவிடலாகாது' என்று எண்ணிக்கொண்டே வேலைசெய்துவந்தேன்.

கடவுளருளால் முற்றுப்பெற்றுவிட்டது. இதனால், ஒருவன் எவ்வளவு சக்தியற்றவனனனும் ஸஹாயமில்லாதவனனனும் எடுத்துக்கொண்டகாரியத்தில் ஊன்றிநின்று கடவுளைநம்பி உண்மையாக முயல்வானனால் பெருங்காரியத்தையும் முடிக்கவல்லவனனவான்என்பது உறுதிப்படுகிறது.

ஆனனலும், இவற்றையெல்லாம் கேட்டபோது,எனக்கும் அதற்குள் இந்தக்காரியத்திலுள்ள பல்வகையான ஶ்ரமங்கள் அனுபவத்துக்கு வந்துவிட்டமையால், 'இந்தக்காரியத்தை ஏன் எடுத்துக்கொண்டோம்? இது எப்படி பூர்த்தியாகும்?' என்றகவலையும் உண்டாயிற்று. சிலஸஞ்சிகைகள் பூர்த்தியாகிவெளிவந்ததைப் பார்த்த பெரியோர்கள் மொழிபெயர்ப்பு மிகநன்றாக அமைந்திருக்கிறதென்று பெரிதும்பாராட்டியது என்காதில்விழுந்தது. அதுவாடியபயிருக்கு மழைபெய்ததுபோல் ஆயிற்று. நாளடைவில் ஆதிபர்வமும் ஸபாபர்வமும் பூர்த்தியாகி வெளிவந்தன. அவை வெளிவருவதற்குஆன காலஅளவையும் அதுவரைஉண்டான பொருட்செலவையும் பார்த்தபோது பாக்கியுள்ள உத்தேசம் நாற்பது ஸஞ்சிகைவரையில் வெளியிடுதற்கு எவ்வளவு காலமும் பொருட்செலவும் ஏற்படுமோ என்று என்மனத்தில் ஆலோசனை உண்டாகி, 'சாந்திபர்வ அனுசாஸனபர்வங்களை வெளியிட்டுவிடுவோம். மற்றப் பர்வங்களைக் கூடுமானல் பிறகு வெளியிடலாம்' என்று நிச்சயித்தேன்.

மஹா பாரத மொழிபெயர்ப்பு விஷயமாக முதலில் ஆலோசித்தபொழுதே, ஶ்ரீமான், சக்கரவர்த்தி ஐயங்காரவர்களுடைய முயற்சியினல் பாரதம் சாமாசாரியரவர்கள் மொழிபெயர்த்த சாந்திபர்வத்தையே நான் உபயோகித்துக் கொள்ளலாமென்று நினைத்தேன். உடனே, சக்கரவர்த்திஐயங்காரவர்களைக் கேட்டதில் அந்தமொழிபெயர்ப்புப்பிரதி தம்மிடமில்லையென்றும், ஆசாரியரவர்களிடமே கேட்கவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். ஆசாரியரவர்கள் அப்பொழுது சென்னையிலிருந்தமையால் அவர்களிடம் சில தக்கவர்களைக்கொண்டு கேட்கச்சொன்னபோது, ஆசாரியரவர்கள், 'இப்பொழுதுதானே ஆரம்பிக்கப்போகிறார்கள். சாந்திபர்வம் வெளியிடும்படியான ஸந்தர்ப்பம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம்' என்று சொன்னர்கள். பிறகு, சிலநாட்களுக்கெல்லாம் சில அன்பர்களுடைய தூண்டுதலின்மேல் அதனைத் தாமேவெளியிடுவதாக விளம்பரம் செய்துவிட்டார்கள். அப்

படியே சிலநாளில் இரண்டுபுத்தகமாக வெளியிடவும்செய்தார்கள். ஆதலால், அந்த மொழிபெயர்ப்பை நான் உபயோகித்துக்கொள்ளக் கூடாமற்போயிற்று. அதன்மேல், ‘மஹாவித்வான், ப்ரம்ம ஸ்ரீ, மஹாமஹோபாத்யாய, வேதாந்தகேஸரி, பைங்காநாடு, கணபதி சாஸ்திரிகளவர்களிடம் சாந்திபர்வத்தை மொழி பெயர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்கள் எனக்குப் பரம ஆப்தர்களானதாலும் பரமகுணசாலிகளானதாலும் பெருவிருப்புடன் இந்தவேலையை உடனே செய்யத்தொடங்கினர்கள். அவர்கள் சொல்லியதைக் கேட்டு எழுதும்படி ஒருகுமாஸ்தாவை அமர்த்திக்கொடுத்தேன். அவர்கள் அங்ஙனமே மொழி பெயர்த்து வந்தார்கள். அவர்கள் விரைவில் செய்துகொடுத்து விடுவதாக உறுதி கூறினமையாலும் அப்பொழுது நடந்துவந்த மாதிரியில் விரைவாக முடிந்துவிடுமென்று தோன்றினமையாலும் ஸபாபர்வம் ஆனவுடன் சாந்திபர்வத்தையே அச்சிட்டுவெளியிடத் தொடங்கினேன். ஏழாவது ஸஞ்சிகையில் ஸபாபர்வத்துடன் சாந்திபர்வத்தில் சிலபக்கங்களும் வெளிவந்தன. அவ்வளவே அதுவரையில் அவர்கள் செய்துகொடுத்திருந்தது. அந்தஸமயத்தில் அவர்கள் உபந்யாஸங்களுக்காக அடிக்கடி வெளியூர்களுக்குப் போகநேர்ந்தது. மொழிபெயர்ப்புவேலை விரைவாக நடைபெறவில்லை. குறித்தகாலத்தில் ஸஞ்சிகைகள் வெளிவரக்கூடாமற் போயிற்று. ஆதலால், வெளியில்ஸஞ்சாரம்செய்துகொண்டிருந்த காலத்திலும் இந்தமொழிபெயர்ப்புவேலையைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டபடி அவர்களும் இயன்றவரை சிறிதுசிறிதாகச் செய்தனுப்பினர்கள். அவர்கள் தாம்செய்த மொழிபெயர்ப்புவேலைக்காக என்னிடத்தில் பிரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்கவேயில்லை. ஆனாலும், மற்றவர்களுக்குப் போலவே அவர்களுக்கும் தொகை சேர்ப்பித்துக்கொண்டிருந்தேன். நான் அதனைச் சேர்ப்பிக்கும்போது, அவர்கள், ‘தங்களுக்கு எத்தனையோ செலவிருக்குமாதலால் இந்தச்ரமம் வைத்துக்கொள்ளவேண்டாமே. இந்தமொழிபெயர்ப்பை ஒப்புக்கொண்டதனால் நான் மஹாபாரதத்தைத் தொடர்ச்சியாக ஊன்றிப் பார்ப்பதற்கு ஸந்தர்ப்பம்வாய்த்தது, மனத்துக்குப் பரமஸந்தோஷமாக இருக்கிறது. அதுவே எனக்குப் பரமபிரயோஜனமாகும். மேற்கொண்டு தாங்கள் இந்தத்தொகைகொடுப்பது கரும்புதின்னக்கூலிபோலிருக்கிறது’ என்று பரமத்ருப்தியுடன்

சொல்லி மறுப்பார்கள். நான், 'அங்கீகரிக்கவே வேண்டும்' என்று பலமுறை நிர்ப்பந்தித்துச்சொல்லிக் கொடுத்துவருவேன். அவர்கள் மோக்ஷதர்மத்தை மொழிபெயர்த்துக்கொண்டிருந்த போது, அவர்களுக்குச் சரீரத்தில் அஸௌக்யம் உண்டாகத் தொடங்கியது. பிறகு, துறவறம்பூண்டு சிலநாளிருந்து லிதி அடைந்தார்கள். மஹாமேதாவிகளும் சிறந்தபண்டிதர்களும் பரம குணசாலிகளுமான அவர்களுடையபிரிவு எனக்கு மிக்கவருத்தத்தை விளைவித்தது. அதுவரையில் அவர்கள்செய்துகொடுத்திருந்த சாந்திபர்வம் 240-அத்யாயங்களும் அச்சிடப்பட்டன.

சாந்திபர்வம் மோக்ஷதர்மத்தில் மேலுள்ளபாகத்தையாரைக் கொண்டு மொழிபெயர்த்து வெளியிடுவதென்று ஆலோசித்துக் கொண்டிருந்தேன். அந்தஸமயம் அனுசாஸனபர்வத்தை வெளியிடலாமென்று நினைத்தபோது அதன்மொழிபெயர்ப்புப் பூர்த்தியாகவில்லை. அதுவரையில் உண்டான அனுபவத்தைக்கொண்டு பர்வம்பூர்த்தியாகிக் கைக்குவராமுன்னம் அதனை அச்சிடத் தொடங்கினால் மிக்ககஷ்டநஷ்டங்கள் உண்டாகுமென்று தெரிந்தமையால் அதனைத் தொடங்கவில்லை. யுத்தபஞ்சகத்தைத் தொடங்கலாமென்றாலோ பீஷ்மபர்வம் கைக்குவராமல் துரோணபர்வம் மட்டுமே வந்திருந்தது. ஆனதால், அதனையும் தொடங்கக்கூடவில்லை. விராடபர்வ உத்யோகபர்வங்களை வெளியிடலாமென்று பார்த்தேன். அவை நீலகண்டவியாக்யானத்தோடுகூடிய பம்பாய்ப் பதிப்புப்படி மொழிபெயர்க்கப்பட்டிருந்தன; கிருஷ்ணசார்யர்பதிப்புப்படி புதிதாக எழுதவேண்டியிருந்தன. ஆதலால், சிலகாலம் ஸஞ்சிகைகள் வெளிவராமல் காலதாமதமாயிற்று. பிறகு, வேங்கடேசாசாரியரவர்கள் செய்த விராடபர்வத்தைத் கிருஷ்ணசார்யரவர்கள் பதிப்புப்படி திரும்ப மொழிபெயர்க்கச் செய்து, அதனை, திரிசிரபுரம் ஸெண்ட் ஜோஸப் காலேஜ் பிரதம ஸம்ஸ்கிருத பண்டிதரும் யுத்தபஞ்சகத்தை மொழிபெயர்த்துக் கொடுத்தவர்களுமான மஹாவித்வான், ஸாரஸ்வதஸார்ஜ்ஞர், கவிசிகாமணி, ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களைக் கொண்டு திருத்தச்செய்து வெளியிட்டேன். அதற்குள், அநுசாஸனபர்வம் விற்றமாயிற்று. அதனை வெளியிட்டேன். இதற்கிடையில், கும்பகோணம் அத்வைதஸபாபண்டிதராயிருந்தவர்களும் இப்பொழுது சென்னை மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ்ப்ரின்ஸிபாலாயிருப்பவர்களுமான வேதாந்த விபூஷணம்,

மஹோபதேசகர், சாஸ்திரரத்நாகரம், பிரம்மஶ்ரீ - மஹாமஹோபாத்யாயர், கருங்குளம் - கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள், நான் கேட்டுக்கொண்டபடி சாந்திபர்வம் மோக்ஷதர்மத்தில் பாக்கியுள்ளபாகத்தை மிகவிரைவாக மொழிபெயர்த்துக் கொடுத்தார்கள். முன்மொழிபெயர்த்த உத்யோகபர்வம் உபயோகப்படாமையால் திரும்ப மொழிபெயர்க்கநேர்ந்தது. அதனை, திருவிய ஹார், பிரம்மஶ்ரீ, மஹாமஹோபாத்யாய நீலமேகசாஸ்திரிகளவர்கள் தாம் செய்துகொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். அவர்களுக்கும் ஒருகுமாஸ்தாவை அமர்த்திக்கொடுத்தேன். சாஸ்திரிகளவர்கள் ஒருவருஷத்தில் கடி-அத்யாயம் எழுதிக்கொடுத்துச் சிலகாலத்துக்குப்பின் பரமபதமடைந்தார்கள். பிறகு, ஶ்ரீமான், கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகளவர்களிடமே கேட்டுக்கொண்டேன். அவர்கள் தமக்கிருந்த பலவேலைகளோடு ப்ரமம் பாராமல் அதனையும் மொழிபெயர்த்து உதவினர்கள். இவர்களைப்பற்றிச் சாந்திபர்வம் இரண்டாம்பாக முகவுரையிலும் உத்யோகபர்வ முகவுரையிலும் தெரிவித்திருக்கிறேன். இந்தமஹாபாரதத்தை மொழிபெயர்த்துக்கொடுத்த ஸம்ஸ்கிருதபண்டிதர்களுள் எனக்குச் சிறிதும் கவலையில்லாமலும் ப்ரமம்கொடாமலும் விரைவில் செய்து உதவியவர்கள் இவர்களே. இப்படியே ஆஶ்வமேதிகபர்வமும் முதலில் மொழிபெயர்த்ததையே இரண்டாமுறை மொழிபெயர்க்கும்படி நேர்ந்தது. இப்படியாகச் சாந்திபர்வம் மோக்ஷதர்மம் அச்சிடப்பெற்று 1915வது ஜூன்மாதக் கடைசியில் பூர்த்தியாயிற்று. அதன்கடைசி ஸஞ்சிகையில் பீஷ்மபர்வத்தின் சிலபக்கங்கள் வெளிவந்திருந்தன.

அந்தஸமயம் ஐரோப்பிய மஹாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. காகிதவிலையும் மற்றச்சாமான்களின் விலையும் மிக அதிகமாயின. இரண்டரை அணாவுக்குவாங்கினகாகிதம் ஒரு ரூபாய்க்கதிகம் கொடுத்து வாங்கநேர்ந்தது. அதற்கும் காகிதம் கிடைக்கவில்லை. ஆகையால், சிலவருஷங்கள் வேலையை நடத்த இயலவில்லை. வேலை நடவாமல் செலவுமாத்திரம் ஆகிக்கொண்டுவந்ததில் முன்னமேஏற்பட்டு வளர்ந்துவந்த ப்ரமம் பலமடங்கு அதிகமாயிற்று. அந்தநிலைமையிலும் மஹாபாரதத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்னும் விருப்பம்மாத்திரம் என் மனத்தைவிட்டகலவில்லை. சிலவருஷங்களில் ஐரோப்பிய யுத்தம் முடிவடைந்தது. பின்பும் காகிதவிலை இறங்கவில்லை; ஆனாலும் திரும்ப அச்சு

வேலையை நடத்தத்தொடங்கினேன். நடத்துவது ஸ்ரமமாகவே இருந்தது. சிலசமயங்களில் மிக்க மனத்தளர்ச்சியுடன் மொழி பெயர்ப்பின் கையெழுத்துப் பிரதியையோ புரூபையோ பார்த்துக்கொண்டிருக்கையில், ஏதாவது அருமையான விஷயத்தைக் கண்டால், 'இப்படிப்பட்ட அரியவிஷயத்தைத் தமிழுலகத்துக்கு எளிதில் கிடைக்கும்படி செய்யக்கூடுமானால், இந்தமாதிரி ஸ்ரமமும் இன்னும் பலமடங்கு ஸ்ரமமும் அடைந்தாலும் நன்றே' என்று மிகமகிழ்ந்து உடன் இருப்பவர்களிடம் சொல்லிக் கவலையை நீக்கிக் கொள்வேன். இப்படியாக, உ-வது ஸஞ்சிகை வரையில் ஸ்ரமப் பட்டு நடத்திவந்தேன். அப்பொழுது, கும்பகோணம்காலேஜி லிருந்து பென்ஷன் பெற்று விலகினேன்.

மேலுநடத்தமுடியாமல் பலபலவிதமாக ஆலோசிக்கையில், சென்னபட்டணம் ராஜதானியாயிருத்தலாலும் அங்கே பலசெல்வ வான்களிருத்தலாலும் அங்கேபோனால் இந்தப்பதிப்புக்கு மிக்க உதவி கிடைக்குமென்றும், அச்சுவேலை அங்கே நடத்தலால் வேலையை விரைவாக நடத்தலாமென்றும் நினைத்து 1921 வது அக்டோபர்மாதத்தில் குடும்பத்துடன் சென்னைக்குப்போய் வசித்துவந்தேன். அங்கேபோய்ச் சிலமாதங்களில் உ-வது ஸஞ்சிகை வெளிவந்தது. அதில் ஒருபாகத்தில் துரோணபர்வம் பூர்த்தியாயிற்று. அங்கேபோய்வசித்ததில் நான் எதிர்பார்த்தபடி அதிகமான உதவிகள் கிடைக்கவில்லை. செலவுமாத்திரம் பல மடங்கு அதிகமாயிற்று. அங்கே அருமருந்துபோலிருந்த இரண்டொரு பரமோபகாரிகளுடைய பேருதவியால் காரியங்களை ஒருவாறு நடத்திக்கொண்டுவந்தேன். அப்படி உபகாரம் செய்தவர்களுள் சென்னை அட்வொகேட்டும் சிலகாலம் ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்தவர்களும் வித்வான்களைப் பெரிதும் ஆதரிப்பவர்களும் பரம ரஸிகர்களுமான ஸ்ரீமான், V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களும், கொழும்பு, ஸ்ரீமான், Sir P. ராமநாதம் K. C., C. M. G., M. L. C. அவர்களும் முக்கியமானவர்கள்.

அங்கிருந்த இரண்டு வருஷத்தில், உ, ஊ, ஈ, ஏ ஆகிய ச ஸஞ்சிகைகள் வெளிவந்தன. அதே ஸமயத்தில் பழைய ஸஞ்சிகைகளில் பல இரண்டாமுறை பதிப்பிப்பதும் அவசியமாயிற்று. கடைசியாக, 1923 வது ஏப்ரில்மாதத்தில் இனி நிர்வகித்து நடத்தமுடியாதென்ற நிச்சயம் ஏற்பட்டது. அதன்மேல் நடத்துவதில்லையென்று என்மனத்தில் நிச்சயித்துவிட்டேன். வேலைநடவாமல்

அதிகச்செலவுள்ள இடத்தில் இருப்பதைக் காட்டிலும் சொந்த ஊராகிய மணலூருக்கு வந்துவிடலாமென்று நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தேன்.

அந்தஸமயத்தில், ராவ்பஹதூர், ஸ்ரீமான், V. T. கிருஷ்ண மாசாரியரவர்கள் C. I. E., விஜயநகரம் ஸம்ஸ்தானத்தில் திவா ணியிருந்து விலகி, சிலநாள் லீவுஎடுத்துக்கொண்டு, சென்னை மயி லாப்பூரில் வந்திருந்தார்கள். அவர்களுக்குச் சேர்ப்பிக்கவேண் டிய கர்ணபர்வத்தை நேரில் கொடுத்துவரலாமென்று போனேன். அவர்கள் மஹாபாரதமொழிபெயர்ப்பைப்பற்றி அன்புடன் விசா ரித்து அதன் சிறப்பைப்பற்றிப் பலபடப் பாராட்டி, ஸஞ்சிகைகள் காலதாமதமாக வருவதில் படிப்பவர்களுக்கு ஆவல் குறைவுபடு கிறதென்றும் தொடர்ச்சியாகப்படிக்கும்படி விரைவில் வெளியிட வேண்டுமென்றும் நிரம்பச் சொன்னார்கள். நான் மேலே நடத்த முடியாமல் நிறுத்திவிட்டதை விவரமாகத் தெரிவித்தேன். அப் பொழுது, ஈக-வது ஸஞ்சிகை வெளிவந்திருந்தது. அவர்கள் கேட்டு, 'தாங்கள் ப்ரமப்பட்டு இதுவரையில் நடத்திவந்திருக்கிறீர் கள். பெரும்பாகம் நடந்துவிட்டது. இனி நடக்கவேண்டிய பாகம் கொஞ்சமே. தாங்கள்நிறுத்திவிட்டால், நின்றுபோனதே ஆகும். வேறு ஒருவரும் மேற்போட்டுக்கொண்டு செய்யமாட் டார்கள். என்னுடைய ஸ்நேகிதர்களிடம் இதைப்பற்றி ஆலோ சிப்பேன்' என்றுசொல்லி எனக்கிருந்த மனத்தளர்ச்சியை நீக்கி ஊக்கமளித்தார்கள். பிறகு, அவர்களுடைய முக்கியமான ஸ்நே கிதர்களிடம் சொல்லிச் சிலதொகை சேகரித்துக் கொடுத்தார்கள். அந்தவிஷயத்தைச் சல்யபர்வமுகவுரையில் விவரமாகத் தெரிவித் திருக்கிறேன்.

அவர்கள் அதுமுதல் தொடர்ச்சியாக மிக்க உதவிசெய்து ஆத ரித்துவருகிறார்கள். அவர்களுடைய பேருதவியே பின் வெளிவந்த பர்வங்களெல்லாம் வெளிவருவதற்கு முக்ய காரணம். அவர்கள் நேரிலும் தம்நண்பர்களைக்கொண்டும் பொருளுதவி செய்துவந்தது மல்லாமல், நிர்ப்பந்தமான சிலஸமயங்களில் பாங்குகளில் எனக்காக மேலொப்பம் போட்டுக் கடன்வாங்கிக் கொடுத்தும் உதவியிருக் கிறார்கள். இவர்களுக்கு இந்த மஹாபாரத மொழிபெயர்ப்புவிஷ யத்திலுள்ள அபிமானத்தை அளவிட்டுச்சொல்ல முடியாது. ஸ்ரீ மஹாபாரதத்தைத் தலைக்கட்டி வைப்பதென்று கங்கணம் கட்டிக் கொண்டு நடத்திவருகிறார்கள். முதலிலும் இடையிலும் கடையி

லும் ஸ்ரீகிருஷ்ணசரித்திரத்தையே சொல்வதான ஸ்ரீமஹாபாரத கைங்கர்யத்தை நடத்திவருகிற பெரும்புண்யமே, ஸ்ரீகண்ணபிரானுடைய ராஜதானியாகிய துவாரகையைத் தன்னகத்துக் கொண்ட பரோடா ராஜ்யத்தின் தலைமைஸ்தானத்தை இவர்களுக்கு அளித்திருக்கிறதென்பதை முன்னமே தெரிவித்திருக்கிறேன். அஃது உண்மையென்பதை மீண்டும் தெரிவிக்கிறேன். இவர்களைப்பற்றி ஆஶ்வமேதிகபர்வ முகவுரையிலும் உத்யோகபர்வ முகவுரையிலும் விராடபர்வம் மூன்றாம்பதிப்பு முகவுரையிலும் விவரமாகத் தெரிவித்திருக்கிறேன்.

மற்றும் சில கனவான்களும் இந்தப் பாரதத்தைப்பற்றிக் கவனிக்கத் தொடங்கினார்கள். அவர்களுள், ஸ்ரீமான் Sir M. CT. முத்தைய செட்டியாரவர்களும், ஸ்ரீமான் திவான்பஹதூர், A. M. M. முருகப்ப செட்டியாரவர்களும் முதன்மையானவர்கள். அந்த இரண்டு கனவான்களும் பல தடவைகளில் ரூ. 5000 வரையில் சேகரித்துக்கொடுத்து உதவினார்கள். முன் வெளிவந்த பர்வங்கள் பலவற்றில் சில சில ஸஞ்சிகைகள் இல்லாமையால் கேட்பவர்களுக்கு அந்தப் பர்வங்கள் கொடுக்கக்கூடவில்லை. ஆதலால், பழைய ஸஞ்சிகைகள் பல இரண்டாமுறை பதிப்பிப்பது அவசியமாயிருந்தது. புதிய ஸஞ்சிகையோடு பழைய ஸஞ்சிகை பலவும் அச்சிட நேர்ந்தமையால், அந்தத் தொகையும் போதாமல் பொருள்முட்டுப்பாடு அதிகமாகவே இருந்தது. இப்படியாகக் கிடைத்த உதவிகளெல்லாம் அப்போதப்போது செலவாயின.

முன் தெரிவித்தபடி, 1923ஆ ஜூன்மீ, நான் என்சொந்த ஊராகிய மணலூருக்கே வந்து 1928-ஆ மார்ச்சுமீ வரையில் அங்கு வஸித்தேன். அந்தக் காலத்தில் ௩௨, ௩௩, ௩௪, ௩௫, ௩௬ ஆகிய ௫ ஸஞ்சிகைகள் வெளிவந்தன. அவற்றோடு பழைய ஸஞ்சிகைபலவற்றின் இரண்டாம் பதிப்பு வேலையும் நடந்துவந்தது. 1928 ஆ மார்ச்சுமீ திரும்பச் சென்னை மயிலாப்பூருக்குப்போய் அங்கே 1929-ஆ ஸெப்டம்பர்மீ வரையில் இருந்தேன். இதனை உத்யோகபர்வமுகவுரையில் தெரிவித்திருக்கிறேன். அந்தக் காலத்தில் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமபாஷ்யமும் ஸ்ரீ மஹாபாரதத்தில் ௩௭, ௩௮, ௩௯, ௪௦ ஆகிய ௪ ஸஞ்சிகைகளும் வெளிவந்தன. அவை வெளிவருதற்கு வேண்டிய உதவியைச் செய்தவர்களில் முக்யமானவர்கள் ஸ்ரீமான், V. T. கிருஷ்ணமாசாரியரவர்களே.

நான் இந்தமுறை சென்னையிலிருந்தபொழுது, சென்னை அட்வொகேட் ஸ்ரீமான், திவான்பஹதூர், ஆஸ்திகரத்ன, தர்ம ரத்ன, T. R. ராமசந்திரஐயரவர்கள், அட்வொகேட் ஸ்ரீமான், T. R. வேங்கடராமசாஸ்திரிகளவர்கள் C. I. E, சென்னை அட் வொகேட்ஜெனரல் ஸ்ரீமான், Sir அல்லாடி - கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் C.I.E, அட்வொகேட் ஸ்ரீமான், K. பாஷ்யமையங்கா ரவர்கள், P. W. ஸெக்ரெடேரி ஸ்ரீமான், ராவ்பஹதூர், N. கோ பாலஸ்வாமி ஐயங்காரவர்கள், அட்வொகேட், ஸ்ரீமான், K. V. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்கள், அட்வொகேட், ஸ்ரீமான், ராவ்பஹ தூர், S. வரதாசாரியரவர்கள் ஆகிய கனவான்கள் உதவிசெய்தவர் கள். ஸ்ரீமான், T. R. வேங்கடராமசாஸ்திரிகளவர்களும் ஸ்ரீமான், K. V. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்களும் ஸ்ரீமான், K. பாஷ்யமையங் காரவர்களும் தாம்நேரிற்செய்த உதவிகளேயன்றித் தம் நண்பர்கள் பலரைக்கொண்டும் பலஉதவிகள் கிடைக்கச்செய்தார்கள். அப் பொழுது மயிலாப்பூரிலும் வேறிடங்களிலுமுள்ள சிலகனவான் கள் சேர்ந்து கையெழுத்துச்செய்து இந்தமஹாபாரதத்தின் உத விக்காக ஓர் அப்பீல் வெளியிட்டார்கள். அதில், முன்னமே பலஸமயங்களில் தம்மாலியன்ற உதவியைச்செய்துவந்தவரும் Excise Inspector உம் எனதுநண்பருமான ம-ர-ர-ஸ்ரீ P. நடேச ஐயரவர்கள்தவிர வேறு ஒருவரும் ஒருதவியும் செய்யவில்லை. இப்படியே, முன்னம், 1914 வருத்தில், ஓர் அப்பீல், ஸமாசார பத்திரிகைகள் மூலமாகவும், தனித்தனியாகவும் பிரசுரம்செய்தேன். அதனை, ஸ்ரீமான், H. Le Fanu துரையவர்களும், கொழும்பு, ஸ்ரீமான், Sir P. ராமநாதம் அவர்களுமே பார்த்ததாகத் தெரி கிறது. சென்னை எக்ஸைஸ் அண்டு பப்ளிக்ஹெல்த் மந்திரியாயிருந் தவர்களும் அட்வொகேட்டுமான ஸ்ரீமான், S. முத்தையமுதலியா ரவர்கள் இந்தமஹாபாரதப்பதிப்புத் தொடங்கியதுமுதல் கை யொப்பம்செய்து ஆதரித்துவருவதுமல்லாமல், நான் சென்னை மயிலாப்பூரில் போய் வஸித்தபோது, ஸ்ரீமஹாபாரதப்பதிப்பு விஷயத்தை விவரமாகக்கேட்டு, மாதம் ரூ. 20 வீதம் கொடுப்பதா கத் தாமேசொல்லி கள-மாதத்திற்கு அதிகம் கொடித்துஉதவினர் கள். பிறகு, அந்தஊர்வாஸம் எனக்கும் என்வீட்டிலுள்ளவர் களுக்கும் சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாமையாலும் வேறு சிலகாரணங்களாலும் திரும்பமணலூருக்கே 1929வது ஸெப்டெம் பர்மீ வந்தேன். அங்கே, சக, சஉ, சங ஆகிய ங ஸஞ்சிகைகள்

வெளிவந்து சசவது ஸஞ்சிகை வெளிவரவேண்டிய ஸமயமாயிருந்தது.

மணலூர், தென்னாட்டில் அத்வைத வித்தைக்கு ஊன்றுகோலாயிருந்தவர்களும் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யர்களுமான ஸ்ரீமத், ஸ்வயம்பிரகாச ஸ்வாமிகள், ஸ்ரீமத், நாராயணானந்த ஸ்வாமிகள் முதலிய பலபெரியோர்கள் வஸித்த கம்ஸபுரமென்கிற கஞ்சனூரைச் சேர்ந்தது; வடநூற்கடலே நிலைகண்டுணர்ந்த பல பெரியோர்கள் நிரம்பியிருந்தது. வேதவேதாங்கங்களில் கரைகண்டவர்களும் சதுச்சாஸ்திரபண்டிதர்களும் ஸதாசாரஸம்பன்னர்களும் மன்னர்கோவில் ராஜஶாஸ்திரிகள் என்று பிரஸித்திபெற்றவர்களுமான பிரம்மஶ்ரீ மஹாமஹோபாத்யாய தியாகராஜ தீக்ஷிதரவர்கள் அவ்வூரில்வந்து ஸ்ரீமத் நாராயணானந்தஸ்வாமிகளிடம் வேதாந்தபாடம் கேட்டார்களென்றால் அதற்கு இதைக்காட்டிலும் சிறந்தபெருமை என்ன இருக்கிறது? வடமொழியில் சிறந்தகவியும் வேங்கடாத்வரி என்று பிரஸித்திபெற்றவர்களுமான வ்ருத்தகவி - வேங்கடபதி சாஸ்திரிகளும், வடமொழிவ்யாகரணஸூத்ரங்கள் ஒவ்வொன்றுக்கும் உதாரணங்களே மகாகவிப்ரயோகங்களிலிருந்து அறுபது வருஷகாலம் இரவுபகல் ஓய்வில்லாமல் உழைத்துத் தேடியெடுத்து * எழுதித்தொகுத்தவரும் என்னுடைய மாதுலரும் சாமண்ணு ஐயங்கார் என்று பிரஸித்தருமான ஸ்ரீமான் வீரராகவ ஐயங்கார்ஸ்வாமிகளும் முதலிய பல சிறந்த பண்டிதர்களும் என்னுடைய மூன்னோர்களும் வஸித்த இடம். ஆகையால், அவ்வூரிலிருந்து என்னாலியன்ற நல்ல காரியங்களைச் செய்துகொண்டு பொழுதுபோக்கவிரும்பினேன். அவ்வூர், வாஸத்திற்கு நன்றாயிருந்தாலும், இந்தஸமயம் ஸகவாஸத்திற்குச் சிறிதும் நன்றாயில்லை. இப்பொழுதிருக்கிற நிலைமையில் இன்னும் பலவருஷங்களுக்கு ஒழுங்குக்குவருமென்று தோன்றவுமில்லை. நல்லஸகவாஸமும் நல்லபொழுதுபோக்கும் வேண்டுமானால் அந்த ஊரிலில்லாமல் வேறுஊரில்போய் வஸிக்கவேண்டுமென்பது நிச்சயமாக ஏற்பட்டுவிட்டபடியாலும், இந்தக் கும்பகோணம் நான் பலவருஷங்கள் வஸித்ததும் சிறந்த பல பண்டிதர்களும் தக்கோர்களும் நிரம்பியதுமான இடமாதலாலும், இங்கு வஸிக்கவிரும்பி வந்திருக்கிறேன். ஸ்ரீமஹாபாரதம், முத

* இது இப்பொழுது சென்னை கவர்ன்மெண்ட் கையெழுத்துப் புஸ்தகசாலையிலிருக்கிறது.

லில்தொடங்கப்பெற்ற இடமாகிய இவ்வூரிலேயேவந்து பூர்த்தியாக வேண்டுமென்பது எம்பெருமானுடைய திருவுள்ளம்போலும். இப்தமாகப்போன திவ்யப்ரபந்தத்தை வெளியிட்டருளிய ஸ்ரீ ஆராவமுத ஆழ்வானே இந்தப்பெரியகிரந்தத்தையும் பூர்த்தியடையச்செய்து வெளியிட்டருளினான்.

வனபர்வம் பருவவரிசையில் மூன்றுவதும் அளவில் இரண்டாவதுமானது. மஹாபாரதமுழுதிலும் அடங்கியிருக்கிற நூறு உபபர்வங்களில் இந்தவனபர்வத்தில் இருபத்தொரு உபபர்வங்கள் அடங்கியுள்ளன. அவற்றுள், இதன்முதல்புஸ்தகத்தில் ஆறும், இதில் ஜடாஸுரவதபர்வம், யக்ஷயுத்தபர்வம், நிவாதகவசயுத்தபர்வம், ஆஜகரபர்வம், மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம், த்ரௌபதீஸத்யபாமாஸம்வாதபர்வம், கோஷயாத்ராபர்வம், ம்ருகஸ்வப்நோத்பவபர்வம், வ்ரீஹித்ரௌணிகபர்வம், த்ரௌபதீஹரணபர்வம், ஜயத்ரதவிமோக்ஷணபர்வம், ராமோபாக்யானபர்வம், பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம், குண்டலாஹரணபர்வம், ஆரணேயபர்வம் ஆகிய பதினைந்தும் உள்ளன. இந்தப் பர்வத்தின் கதைச்சுருக்கத்தை ஆதிபர்வம் சகவது முதலிய பக்கங்களில் பார்க்க.

மஹாசூரர்களும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களுமான பாண்டவர்கள் வேறுவேலையில்லாமல் வனத்தில் பன்னிரண்டுவருஷம் வஸித்தமையாலும், அவர்களுக்குப் பலஉபாக்யானங்களையும் தேவர்கள் ரிஷிகள் முதலியவர்களின் சரித்திரங்களையும் வேண்டியஅளவுசொல்வதற்குத் தகுதிவாய்ந்த மஹான்களாகிய பல ரிஷிகள் இருந்தமையாலும், இந்த வனபர்வம் பாண்டவர்கள் வனத்தில் வஸித்தகாலத்து நிகழ்ச்சிகளைக் கூறுதலாலும், மற்றப் பர்வங்களைக்காட்டிலும் இந்தப் பர்வத்திலடங்கிய அற்புத சரித்திரங்கள் மிகப்பல. இதில், பலகிளைக்கதைகள் இருத்தலினாலேயே, ஆதிபர்வத்தில் அனுக்ரமணிகாத்யாயத்தில் ஸ்ரீமஹாபாரதத்தை ஒரு விருக்ஷமாக உருவகம் செய்திருக்கிற இடத்தில் இந்தவனபர்வத்தை மரத்தின் சிறு கிளைகளாக வருணித்திருக்கிறார். ஒரு மரத்திற்கு அதிககிளைகளிருப்பதே அதிகபுஷ்பங்களும் பழங்களும் உண்டாவதற்குக் காரணமாகும். ஒருமரம் எவ்வளவுபருமனும் உயரமுமுள்ளதானாலும் அதில் கிளைகளில்லாவிட்டால் அழகழிந்து மொட்டைமரமென்றே சொல்லப்படும். ஆதலால், ஒரு மரத்திற்குச் சிறுகிளைகளே அழகுக்கும் பெரும்பயனுக்கும் காரண

மானவையென்பது நன்கு விளங்கும். இந்த வனபர்வமும் அநேக புண்யசரித்திரங்களையும் புண்யதீர்த்த க்ஷேத்ரமகிமைகளையும் தன்னிடத்துக்கொண்டு மஹாபாரதத்திற்கு அழகையும் புண்யமாகிய பயனையும் அளித்தலால், இது மஹாபாரதமென்கிற விருக்ஷத்துக்குச் சிறுகிளைகளென்பது மிகப்பொருத்தமானதே.

இதில்வந்துள்ள பலசரித்ரங்களும் நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு தர்மத்தையோ நீதியையோ விளக்குவனவாகவே அமைந்துள்ளன. அவற்றுள், மாதிரிக்காகச் சில இங்கே கூறுவேன். பாண்டவர்கள் நாடிழந்து வறுமையுற்றகாலத்தும் நல்வழியினின்று தவறுமையால் நல்லோர்கள் செல்வமற்றபோதும் நல்வழியினின்று தவறார் என்பதும், யுதிஷ்டிரர் சூரியனை உபாஸித்து வரங்கேட்டபோது இழந்தராஜ்யம் கிடைக்கவேண்டுமென்றுவது செல்வம் வேண்டுமென்றுவது கேளாமல் அந்தணர்களைக்காப்பாற்ற உபாயம் வேண்டினராதலால் பெரியோர் தர்மத்துக்காகக் கடவுளரை உபாஸிப்பரேயன்றித் தமது காமபோகங்களுக்காக உபாஸியாரென்பதும், நன்மையைச் சொன்ன விதுரரைத் திருதராஷ்டிரன் சினந்து துரத்தியதனால் மூர்க்கர்களுக்கு உபதேசிப்பவர் தீங்குறுவரென்பதும், திருதராஷ்டிரன் துரியோதனனிடம் பற்றுவைத்துத் தீமையடைந்ததனால் புத்ரனுயிருந்தாலும் துஷ்டனிடம் பற்றுவைப்பது இம்மை மறுமைகளைக் கெடுக்குமென்பதும், அர்ஜுனனுக்குச் சம்பு பிரத்யக்ஷமானதால் வாஸுதேவ பக்தர்களுக்கு அரிய காரியமும் எளிதில் கைகூடுமென்பதும், அர்ஜுனன் அபேதமாகத் துதித்தலால் ஹரியும் சிவனும் அபேதம் என்பதும், யுதிஷ்டிரர் நளசரித்திரத்தைக் கேட்டதனால் துக்கமுள்ளவன் அதிக துக்கமுள்ளவனைப்பற்றிக் கேட்பதால் துக்கசமனம் ஏற்படுமென்பதும், பகீரத சரித்திரத்தால் நல்லோர்களுக்குத் தவமும் செல்வமும் சரீராதிகளும் பரோபகாரத்துக்கே ஆமென்பதும், ஜமதக்னி கதையால் கோபமுள்ளவன் மனிஷிமக்கள் முதலியோரையும் கொல்வனென்பதும், ஜந்தூபாக்யானத்தால் யாகாதிகளைச் செய்விப்பவன் தவறுசெய்தால் அந்தப் பாவம் அவனையே அடையுமென்பதும், சிபியின் கதையால் தன் சரீரத்தைக் கொடுத்தாவது சரணமடைந்தவனைக் காக்கவேண்டுமென்பதும், அஷ்டாவக்ரர் கதையால் சிறுவனுனலும் அறிவுடையவன் மதிக்கத்தக்கவனென்பதும், யுதிஷ்டிரர் மஹிப்பாம்பை வென்றதனால் சரீரபலத்தைக்காட்டிலும் ஞானபலமே சிறந்தது என்பதும், இந்திரத்யும்

னன் கதையால் உலகத்தில் கீர்த்தியுள்ளவரையில் ஸ்வர்க்க வாஸம் உண்டென்பதும், பதிவ்ரதா மாஹாத்மியத்தால் ஸகல யாகங்களின் பயனையும் தருவது பதிசுஶ்ரூஷை என்பதும், தர்மவ்யாதோபாக்யானத்தால் தர்மத்துக்கு ஜாதி காரணமன்றி ஆர்ஜவம் (=உள்ளும்புறமும் ஒத்திருத்தல்) முதலியகுணங்களே காரணமென்பதும், ஸப்தரிஷிகள் குற்றமற்றமனிஷிகளை விலக்கியதால் லோகாபவாதத்துக்கு அஞ்சவேண்டுமென்பதும், கோஷயாத்ரைக்கதையால் கெடுவான் கேடுநினைப்பானென்பதும், பாண்டவர்கள் துரியோதனனைக் கந்தர்வர்களிடமிருந்து விடுவித்ததனால் நல்லோர்கள் தம்மைவருத்தியவர்களுக்கும் நன்மையே செய்வரென்பதும், துர்வாஸர் துர்யோதனனுடையசேர்க்கையால் பாண்டவர்களுக்குத் தீங்குசெய்ய இணங்கியதால் துஷ்டர்களுடையசேர்க்கையால் ஸாதுக்களும் அஸாதுக்களாவரென்பதும், கண்ணன் திரௌபதியினுடைய வேண்டுகோளுக்கிரங்கி விரைந்துவந்தமையால் அவருடைய கருணையும், அவர் சிறியகீரையை உண்டு திருப்தியடைய எல்லாவுலகமும் திருப்தியடைந்ததால் அவர் ஸர்வாந்தர்யாமியென்பதும், வ்ரீஹித்ரௌணிகத்தால் நல்வழியில்தேடியபொருளை நல்லபாத்திரத்தில் திருப்தியோடு கொடுப்பது சிறிதானாலும் பெரும்பயனளிக்குமென்பதும், ஜயத்ரதன் சரித்திரத்தால் பிறர்மனைவியை விரும்புவது தீமையை உண்டாக்குமென்பதும், ஸாவித்ரியின்கதையால் பதிவ்ரதைகள் இரண்டுகுலத்துக்கும் நன்மையையே உண்டுபண்ணுவரென்பதும், யக்ஷயுதிஷ்டிர ஸம்வாதத்தால் ஸகலதர்மங்களின் நுட்பமும் வெளியாகின்றன. இப்படியே, ஸ்ரீமஹாபாரதமுழுமையிலுமுள்ள சரித்திரநிகழ்ச்சிகளும் கிளைக்கதைகளும் ஏதாவது ஒருநீதியையோ தர்மத்தையோ தெரிவிப்பனவாகவே அமைந்துள்ளன என்பதைப் பலபெரியோர்கள் எடுத்துக் காட்டிப் பலநூல்கள் இயற்றியுள்ளனர்.

ஸ்ரீமஹாபாரதத்தைப்பற்றியும், அதனால், நமது த்ராவிட பாஷைகளும் வேறு பாஷைகளும் அடைந்திருக்கிற நன்மைகளைப் பற்றியும் எனது யூனிவெர்ஸிடி உபந்யாஸங்களில் விவரமாகத் தெரிவித்திருக்கிறேன். ஸ்ரீமஹாபாரதஸம்பந்தமான மற்ற விவரங்களை அங்கே கண்டுகொள்க.

மஹாபாரதத்தை மொழிபெயர்த்துக்கொடுத்த பண்டிதர்களைப்பற்றி முன்னரே தெரிவித்திருக்கிறேன். அவரவர்கள்

மொழிபெயர்த்துக்கொடுத்த பர்வங்களை அவரவர்கள்பேரால் வெளியிட்டிருக்கிறேன். இந்த வனபர்வத்தைச் செய்துகொடுப்பதாக ஒப்புக்கொண்ட ஸ்ரீ. உ. சதாவதானம், T. E. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் இதனைச் செய்துகொடாமலே பரமபதமடைந்தார்கள். ஆதலால், இந்தப்பர்வம் வேறுஒருவரைக்கொண்டு மொழிபெயர்க்கவேண்டியதாயிற்று. வியாகரண வேதாந்த சாஸ்திர பாரங்கதரும் பாகவத பகவத்கீதோபந்யாஸகரும் சோதிடமந்திர சாஸ்திர வித்வானும் ஆர்யமத ஸம்வர்த்தனீ பத்ராதிபருமான பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகளவர்கள், ஸ்ரீமஹாபாரதம் பிரவிஸ்தமான சிறந்த கிரந்தமாதலால் இதில் ஏதாவது சில பாகத்தைத் தாம் மொழிபெயர்க்கவேண்டுமென்னும் விருப்பத்தை ப்ரம்மஸ்ரீ Prof. K. ஸுந்தரராமஐயரவர்கள்மூலம் தெரிவித்து, இந்தவனபர்வத்தைத் தாம் மொழிபெயர்த்துத்தருவதாக ஒப்புக்கொண்டு விரைவாகவே செய்துகொடுத்துவிட்டார்கள். அதற்கு முன்னதாகவே யுத்தபர்வங்களின் பதிப்புவேலை தொடங்கியிருந்தேன். அவைகளைச் செய்துமுடித்தேன். அவற்றுக்குப் பின்னுள்ள சாந்திபர்வ அநுசாஸன பர்வங்கள் முன்னமே வெளிவந்துவிட்டன. மேலே, அந்த்யபஞ்சகமென்று சொல்லப்படுகிற ஆச்வமேதிகமுதலிய ஐந்துசிறுபர்வங்களையும் வெளியிட்டுவிட்டால் பூர்த்தியானபர்வங்களின் எண் அதிகமாகுமென்றுநினைத்து அவைகளை வெளியிட்டேன். பிறகு, வனபர்வமும் உத்யோகபர்வமுமே பாக்கியிருந்தன. அளவில் சிறியதாகிய உத்யோகபர்வத்தை முதலில்வெளியிட்டுவிட்டு இந்த வனபர்வத்தை எடுத்துக்கொண்டேன்.

ஒவ்வொருபர்வத்தையும் மொழிபெயர்த்த பண்டிதர்கள், மொழிபெயர்த்தபிறகு, மூலத்தோடு ஒப்பிட்டுப்பார்த்துக் கொடுப்பதும், அதனை வேறு இரண்டு பண்டிதர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதும், அவர்களால் குறிக்கப்படுகிற ஸந்தேகங்களை, மொழிபெயர்த்தவர்கள் மறுபடியும் பார்த்துத் திருத்திக்கொடுப்பதும், பிறகு, நான் ஒருபண்டிதரை வைத்துக்கொண்டு மூலஸ்லோகத்தின்கருத்து வேறுபடாமலிருக்கிறதா என்றுபார்த்து இயன்றவரை திருத்தியும் அவசியமானகுறிப்புக்களை எழுதியும் அச்சிட்டுவெளியிடுவதும் வழக்கம். புதிய ஸஞ்சிகைவேலையோடு பழையஸஞ்சிகைகள் பலவற்றின் இரண்டாம்பதிப்புவேலையும் சேர்ந்து நடந்துவந்தமையாலும், போதுமான உதவிகள் கிடைக்

காமையாலும், வலங்கைமான் கோவிந்த செட்டியார் எழுதிக் கொடுத்த ஆரூடத்தினால் பாக்கியுள்ளபர்வங்கள் வெளிவரா வோ என்று எனக்கே அடிக்கடி ஸந்தேகம் உண்டானமை யாலும், வனபர்வத்தை முன்னமே ஒப்பிட்டுப்பார்க்கத் தொடங்கவில்லை. உத்யோகபர்வம் ஆனவுடன், வனபர்வத்தை எடுத்துப் பார்க்கத்தொடங்கினேன். நடேசசாஸ்திரிகளவர்கள் அந்தஸமயம் செயற்கரிய பெருங்கார்யமாகிய ப்ரம்மஸூத்ரம் சங்கரபாஷ்யத்தை மொழிபெயர்த்து வெளியிடத் தொடங்கியிருந் தார்கள். அதனால், அவர்களுக்குச் சிறிதும் அவகாசம் கிடைப்ப தில்லை. ஆதலால், அவர்கள் வனபர்வமொழிபெயர்ப்பை மூலத் தோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்திக்கொடுக்கக்கூடவில்லை. அவர் கள் மொழிபெயர்த்ததை வேறொருவரைக்கொண்டு திருத்தச்செய் வதும் முறையாயில்லை. பின்பு, அவர்களோடு கலந்து ஆலோசித்த தில், அவர்கள், தமக்குள்ள பலவேலைகளால் இதனை அதிகம் கவ னிக்க அவகாசமில்லாமையாலும் இந்தப்பெருங்கார்யமும் சீக்கி ரம் பூர்த்தியாவது அவசியமாதலாலும் வேறு யாரைக்கொண்டா வது மொழிபெயர்த்துக்கொள்ளும்படி அனுமதி அளித்தார்கள். மஹாபாரதத்தில் பல பர்வங்களை மொழிபெயர்த்துக் கொடுத்தவர் களான ஸ்ரீ. உ. T. V. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் என்வேண்டு கோளுக்கிணங்கி எனது அத்யாயத்துக்கு மேலுள்ள பாகத்தை விரைவில் மொழிபெயர்த்துக்கொடுத்து உதவினார்கள். இந்த விவரங்களை இந்தப்பர்வம் முதற்பாகத்தின் முகவுரையில் தெரி வித்திருக்கிறேன். இவர்களுடைய பெருமையையும் மஹாபாரத மொழிபெயர்ப்பில் இவர்களுக்குள்ள உத்ஸாகத்தையும் முன் இவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று வெளிவந்துள்ள பர்வங்க ளின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன்.

இந்தவனபர்வம் பலமாதங்களின்முன்னமே வெளிவந்திருக்க வேண்டும். இந்த மஹாபாரதமொழிபெயர்ப்பாகிய அரியபெரிய நற்காரியத்தின் ச்ரமத்துக்கும் பெருமைக்கும் தக்கபடி போது மான அளவு உதவிகள் கிடைத்திருந்தால், இந்தமஹாபாரதமொழி பெயர்ப்பு முழுதுமே பலவருஷங்களுக்கு முன்னமே முற்றுப் பெற்றிருக்கலாம். தொடங்கப்பெற்று இருபத்தைந்து வருஷத் துக்குப்பிறகாவது பூர்த்தியானது எல்லாம்வல்லகடவுளது பரம கிருபையே. முதல்ஸஞ்சிகை 1908ஆவது ஆகஸ்டு மீ 21உ வெளி வந்தது. அதற்குச் சிலவருஷங்கள்முன்னமே மொழிபெயர்ப்பு

வேலை தொடங்கப்பெற்றது. கலியுகம் பிறந்தவுடன் பாண்டவர்கள் மஹாப்ரஸ்தானம் சென்றுர்களென்றும் அர்ஜுனனுக்குப் பேரனை பரிக்ஷித்தின்மகன் ஜனமேஜயனுடைய யாகத்தில் மஹாபாரதம் சொல்லப்பட்டதென்றும் தெரிதலால், இது ஏறக்குறைய ஐயாயிரம்வருஷத்துக்குமுன் எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்வளவு நீண்டகாலத்துக்குப்பிறகே, இந்தப் பெரிய இதிஹாஸம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நிறைவேறவேண்டுமென்பது ஸர் வஜ்ஞனை எம்பெருமானுடைய திருவுள்ளம்போலும்.

பெரியகிரந்தங்களை வெளியிடுவதில் பலவருஷங்களாவது இயல்பே. வடமொழிமஹாபாரதத்தைத் தெலுங்குபாஷையில் மொழிபெயர்த்தவர்கள் மூவராவர். அவர்களுள் நன்னயபட்டரென்பவர், ஆதிபர்வமும் ஸபாபர்வமும் வனபர்வத்தில் மூன்றில் இரண்டுபாகமும், அதாவது நகுஷன்கதை முடியவும் பாடினர். சிலநூற்றாண்டுகளுக்குப்பிறகு, திக்கன ஸோமயாஜியார் என்பவர் விராடபர்வமுதல் மஹாபாரதம் கடைசிவரையில் இயற்றினர். அதன் பிறகு, ஒருநூற்றாண்டுக்குப்பின், எர்ரா ப்ரகடா என்ற பண்டிதர் மூன்று இருவரும் செய்யாதுவிட்ட வனபர்வப்பகுதியைப் பாடிமுடித்தனர். தமிழில் கம்பர் வில்லிபுத்தூராழ்வார் முதலானவர்களைப்போன்ற மஹாகவிகளும் பெரிய அரசர்களாலே ஆதரிக்கப்பெற்றவர்களும் மிக்கசெல்வவான்களுமான மஹாபண்டிதர்களாலே செய்யப்பட்டும், காகித விலை அச்சுக்கூலி முதலிய செலவுகளில்லாமலிருந்தும், அது பலரால் பலநூற்றாண்டுகளில் நிறைவேறியது. அப்படியே, இங்கிலீஷிலும் சில பெரியநூல்கள் பலபல வருஷங்களில் பூர்த்தியாயின. (Gibbon) கிப்பன் என்பவருடைய Decline and Fall of Roman Empire என்னும்புஸ்தகம் 3800 பக்கங்களுக்கு உட்பட்டது. அது, உச வருஷத்தில் பூர்த்தியாயிற்று. (Carlyle) கார்லைல் என்பவர்செய்த History of the French Revolution என்பது 800 பக்கங்களையுடையது. அது, ச வருஷத்தில் முடிந்தது. அவரால் செய்யப்பட்ட Frederick the Great என்பது 3000 பக்கங்கள்கொண்டது. அது கசை வருஷங்களில் பூர்த்தியாயிற்று. (Herbert Spencer) ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவருடைய Principles of Sociology என்பது 1669 பக்கங்கொண்டது. அது ககூ வருஷங்களில் பூர்த்தியாயிற்று. (Chapman) சாப்மன் என்பவருடைய Iliad மொழிபெயர்ப்பு 16,000 வரிகளையுடையது; Odyssey மொழிபெயர்ப்பு

12,000 வரிகளையுடையது. அவை இரண்டும் சேர்ந்து, அவரால் கசு வருஷங்களில் மொழிபெயர்க்கப்பட்டுப் பூர்த்தியாயின். (Alexander Pope) அலெக்ஸாண்டர்போப் என்பவர் தாம்செய்த Iliad மொழிபெயர்ப்பை அ-வருஷங்களில் பூர்த்திசெய்தார். (Dante) டாண்டி என்பவருடைய Divina Comedia என்பது 13,900 வரிகளையுடையது. அதனை (Carey) காரி என்பவர் கூ வருஷங்களில் மொழிபெயர்த்து வெளியிட்டார். Plato's Dialogues என்பது 1000 பக்கங்களுக்கு உட்பட்டது. அதனை (Jowett) ஜோவெட் என்பவர் கo வருஷங்களில் மொழிபெயர்த்து வெளியிட்டார். மஹாபாரதத்தின் இங்கிலிஷ்மொழிபெயர்ப்பை முக்யமாகவைத்துக்கொண்டு (Dr. S. Sorensen PH. D) டாக்டர் S. ஸொரென்ஸென் எழுதிய Index, 807 பக்கங்களையுடையது. அது 1880 வது எழுதத்தொடங்கப்பெற்றது; 1902 வது அச்சிடத் தொடங்கி 1925 வது ஜனவரிமாதம் பூர்த்தியாயிற்று. ஆகவே, மூதலிலிருந்து கடைசிவரையில் சஉவருஷங்களில் பூர்த்தியாயிற்று என்று தெரிகிறது. மஹாபாரதமூலமோ 2,00,000 வரிகளையுடையது. நமது தமிழ் மொழிபெயர்ப்போ 9000 பக்கங்களுக்கு அதிகம் கொண்டது. முன்னே கூறியபுஸ்தகங்களோடு நமது மஹாபாரதத்தை ஒப்பிட்டுப்பார்த்தால், இது எத்தனைப் பெரியது என்பது நன்கு விளங்கும். இங்கிலிஷில் பிரதாபசந்திரராய் வெளியிட்ட மஹாபாரத மொழிபெயர்ப்பு கஉ வருஷத்தில் முடிந்ததென்று தெரிகிறது. அவருக்கு, மூதலில் ப்ரமமிருந்தாலும் அது இங்கிலிஷாயிருந்தமையால் உலகமுழுதிலும் ஆதரவிருந்தது. கீழ்த்திசைப்பாஷாநிபுணர்களான (Monier Williams) மானியர்வில்லியம்ஸ் முதலிய ஐரோப்பியப்புலவர்கள் பலர் அதுவிஷயமாக ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். அதன்மேல், Secretary of State கவனித்தார்கள். அவர்கள் கவனித்தார்கள் என்று தெரிந்தவுடன், இந்தியா கவர்ன்மெண்டார் ஆதரித்தார்கள். உடனே, நமதுதேசமன்னர்கள் தாராளமாக உதவிபுரிய முன்வந்தார்கள். இங்கிலிஷ் பாஷையில் மொழிபெயர்ப்பதும் எளிதானது. மொழிபெயர்த்துக் கொடுத்தவரும் மஹாபண்டிதரான கேஸரி மோஹனகாங்கூலி என்னும் ஒருவரே. இவருக்குக் கவர்ன்மெண்டில் பென்ஷன் கொடுத்தார்களென்று தெரிகிறது. இவ்வளவு ஸௌகரியங்களெல்லாம் அமைந்திருந்தும், கஉ வருஷத்திற்குப் பிறகுதான் அது நிறைவேறியது. Rev. Dr G. U. போப்அவர்கள் தொகுத்து

வைத்திருந்த தமிழ் லெக்ஷிகனைச் சென்னை யூனிவர்ஸிடியார் கஅ வருஷங்களுக்குமுன் தொடங்கி ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டு வருகிறார்கள். அதற்குச் சென்னை கவர்ன்மெண்டார் பல லக்ஷங் கள் பொருளுதவி செய்திருக்கிறார்கள். அதில் இதுவரை 2576 பக் கங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பூர்த்தியாக மூன்று வருஷமா வது செல்லும். புனாவில் 'Bhandarkar Oriental Research Institute' என்று டாக்டர் பந்தர்க்கார் பெயரால் அமைக்கப்பட் டுள்ள கீழ்நாட்டுப் பாஷா ஆராய்ச்சிக் கழகத்தாரால் வடமொழி மஹாபாரத மூலம் வெளியிடப்பட்டுவருகிறது. அது 1919ஆம் தொடங்கப்பெற்றது. தொடங்கும்பொழுதே அதற்கு லக்ஷக் கணக்காகப் பொருளுதவி கிடைத்தது. பிறகு, பம்பாய் கவர்ன் மெண்டாரும் சென்னை கவர்ன்மெண்டாரும் இந்தியா கவர்ன் மெண்டாரும் சுதேச மன்னர்கள் பலரும் வருஷவாரியில் ஆயிரக் கணக்காகப் பொருளுதவி செய்து வருகிறார்கள். மற்றும் பல பிரபுக்களும் நன்கொடை அளித்திருக்கிறார்கள். சிறந்த பல பண் டிதர்கள் சேர்ந்து ஆராய்ச்சிசெய்து வெளியிடுகிறார்கள். அதில் ஆதிபர்வத்தில் பகவதபர்வம் முடிய அதாவது முக்கால்பங்குக் கும் குறைவாகவே நடந்திருக்கிறது. ஆதிபர்வமே பூர்த்தியாக இன் னும் சில வருஷங்கள் செல்லும். மஹாபாரதம் முழுதும் எவ் வளவு காலத்தில் பூர்த்தியாகுமென்று நிச்சயிக்கக்கூடவில்லை. ஆத லால், ப்ரமஸாத்யமான பெருங்காரியங்களில் தாமதம் ஏற்படு வது இயற்கையே. தொடங்கிய காரியம் இடையில் நின்றுபோகா மல் பூர்த்தியாவதில் திருப்தியடையவேண்டும். தகுதியுடைய பெரியோர்கள் செய்யவேண்டிய ஒருபெரியவேலையை எல்லா விதத் தாலும் அசக்தனான ஒருவன் செய்வதில் ப்ரமம் அதிகமேயாகும். எப்படியோ, இவ்வளவு நீண்டகாலத்திலாவது இந்த மஹாபாரதம் பூர்த்தியாகும்படி செய்தது கடவுளுடைய பரம கிருபையே.

'யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி நதன்யத்ர' (=இங்கே உள்ளதே மற்ற நூல்களில் உள்ளது. இதில்லாதது வேறென்றிலு மில்லை) என்று வேதவியாஸபகவானே சொல்லி யிருப்பாரானால், இதன் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? வடமொழியில் வல்லவர்களான நமது தேசத்திலுள்ள மஹாபண்டி தர்களும் ஐரோப்பியப் புலவர்களுமாகிய அனைவரும் ஒருமுகமாக மஹாபாரதத்தைப் பலபடப் புகழ்ந்து பாராட்டுகிறார்கள். ஐரோப்

பியப்புலவர்கள் மஹாபாரதத்தின் பெருமைக்குத் தங்கள் தேசத்திலுள்ள பெரிய இதிஹாஸங்களாகக் கொண்டாடப்படுகிற நூல்களும் ஒருவிதத்திலும் ஒப்பாகா என்று வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மஹாபாரதம் எங்கே? நான் எங்கே? வட்மொழி தென்மொழிகளில் மிக்க பாண்டித்யமும் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பைச் செய்ய எல்லாவிதத்தாலும் தகுதியுமுடையவர்களான பெரியோர்கள் பலர் இருக்க, எல்லாம் வல்ல கடவுள், ஒருவிதத்தாலும் தகுதியில்லாத என்னைக்கொண்டு இந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றிக் கொண்டது, அவனுடைய அகடித கடநா ஸாமர்த்தியமும், 'எம் பிரான் அருள் மேவில் ஒரு தூரும்பும் படைத்தழிக்கும் அகிலாண்டத் தொகுதியையே' என்னும் உண்மையும் விளங்குதற்குப் போலும்.

மஹாபாரத மொழிபெயர்ப்பில் கடைசியாக வெளிவந்த இந்த வனபர்வத்தின் கடைசிப்பக்கம் அச்சிட்டு முடிந்தவுடன், எனக்கு உண்டான களிப்பின் மிகுதிக்கு ஓர் எல்லையில்லை. அசோக வனத்தில் துயரக்கடலில் மூழ்கியிருந்த பிராட்டிக்குப் பெருமாளுடைய மோதிரம் கண்டபோது உண்டான மகிழ்ச்சி இதற்கு ஒரு வாறு ஒப்பாகலாம். பலவகைத் துன்பங்களை அடைந்து திருப்பாற் கடல் கடைந்த தேவர்கள் அமிர்தம் உண்டானதைக் கண்டபோது அடைந்த தன்மையை அடைந்தேன். எல்லாம் வல்ல கடவுள் உரு-வருஷகாலமாக என்னை அளவில்லாத துன்பத்திற்கு ஆளாக்கினாலும், இந்தப்பெருங் கார்யத்தை என்னைக்கொண்டே நடத்தி நிறைவேற்றியது, அவனுடைய அவ்யாஜமான பெருங் கருணையே. அந்தக் கருணையை மிகப் பாராட்டுகிறேன்; அவனுடைய திருவடிகளில் திரும்பவும் திரும்பவும் பலமுறை வணங்குகிறேன்.

ஸ்ரீமஹாபாரதத்தில் அரிய பல விஷயங்களும் எளிதில் பொருள்விளங்காத கடினமான பலஸ்லோகங்களுமிருத்தலாலும், அவற்றுக்கு விளக்கமான வியாக்யானங்கள் இல்லாமையாலும், அவற்றைப் பல தக்கபண்டிதர்களிடம் கேட்டுத் தெரிந்து நிச்சயிப்பது அவஸ்யமாயிருந்தது. அந்தவகையில் உதவிசெய்த மஹா வித்வான்கள் பலர்.

ஸ்ருதிஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸங்களிலும் பூர்வோத்தர மீமாம்ஸாதிசாஸ்திரங்களிலும் பாரங்கதர்களான திருவியலூர், பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய ராமஸுப்ரம்மண்யசாஸ்திரிக

ளவர்கள் எனக்குப் பல அரியவிஷயங்களைத் தெரிவித்தவர்கள்; ஸ்ரீமஹாபாரதத்தில் எனக்குண்டான பலஸந்தேகங்களையும் தெளிவித்தவர்கள். அவர்களிடம் கேட்டவற்றையும் அவர்கள் சொல்லியவற்றையும் விவரமாக எழுதுவதானால் மிகவிரியுமாதலால் இங்கே விவரிக்கவில்லை.

மஹாவித்வான், மத்வசாஸ்த்ர ஸம்பூர்ணர், பாரதவிம்மம், கா. பெ. ராமசந்திராசார்யரவர்கள் நான் மஹாபாரதம்தொடங்கியதுமுதல் அதில் எனக்குஉண்டாகும் ஸந்தேகங்களையெல்லாம் போக்கிப் பேருதவி செய்துவருகிறார்கள். இவர்கள் பாரதத்தைப் பலமுறை படித்தவர்கள். பதினெரு முறை முழுமையும் படித்து உபந்யஸித்துப் பட்டாபிஷேகம் செய்திருக்கிறார்களென்பது நிச்சயமாகத்தெரிகிறது. பாகவதத்தை எழுபது தடவைக்கு அதிகம் பிரஸங்கம் செய்திருக்கிறார்கள். அவற்றுள், நாற்பது தடவைகளில் ஏழு நாளில் படித்து முடித்தலாகிய ஸப்தாஹ முறையில் தாமே படித்து அர்த்தமும் சொல்லியிருக்கிறார்கள். ராமாயணம், விஷ்ணுபுராணம், ஹரிவம்சம் இவைகளில் ஒவ்வொன்றையும் பத்துப்பத்து முறைகளுக்குக் குறையாமல் பிரஸங்கம் செய்திருக்கிறார்கள். இவைகளை இத்தனைமுறை பிரஸங்கம் செய்திருக்கிறார்களென்றால் தாம் தனியே சிலசில முறையாவது படித்திருக்கவேண்டுமென்பது நிச்சயம். இவர்களைப்போல இதிஹாஸ புராணங்களில் ஸந்தேகமறச் சொல்ல வல்லவர்களை நான் பார்த்ததில்லை. ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்புவிஷயமாக இவர்கள் ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பாராமலும் ப்ரமத்தைச் சிறிதும் பாராமலும் செய்துவருகிற பேருதவிகளை ஆர்ஷமேதிக பர்வமுகவுரையிலும் இந்த வனபர்வம் முதற்பாகமுகவுரையிலும் தெரிவித்திருக்கிறேன். இவர்களுக்கு நான் செய்யும் கைம்மாறு என்ன இருக்கிறது? 'கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித், தம்மால் இயலுதவி தாம் செய்வர்' என்பதற்கு இவர்களே இலக்கியம்.

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜில் ஸம்ஸ்கிருதபண்டிதராயிருந்த மஹாவித்வான் ஸ்ரீ. உ விசாகபட்டணம் பரவஸ்து, V. பட்டநாதஸ்வாமிகளவர்கள் இங்கு இருந்தபோது என்னைவிட்டு ஒரு நிமிஷமும் பிரியாமல் என்னோடு பழகிக்கொண்டிருந்தார்கள். சாந்திபர்வம் மோக்ஷதர்மத்தையும் அநுசாஸனபர்வத்தையும் ஒப்பிட்டுத்திருத்தியபோது அவர்களுடைய உதவி மிகஅதிகம்.

அநுசாஸனபர்வத்தில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமஉரையை முழுதும் அவர்களே ஒப்பிட்டுச் சோதித்து உதவினர்கள்.

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜில் இப்பொழுது ஸம்ஸ்கிருதபண்டிதராயிருக்கிற மஹாவித்வான், அபிநவபட்ட பாணர், ஸ்ரீ. உ. R. V. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகளவர்கள் எனக்கு இந்தமொழிபெயர்ப்புவிஷயத்தில் பேருதவிசெய்துவருப வர்கள். அப்போதப்போது அங்கங்கே உண்டான ஸந்தேகங்களை நிவிர்த்திசெய்ததுமல்லாமல் ஆஸ்வமேதிக முதலிய ஐந்துபர்வங் களையும் மூலத்தோடு ஒப்பிட்டுப்பார்த்துத் திருத்திக்கொடுத்தார் கள். இவர்களைப்பற்றி ஆஸ்வமேதிகபர்வ முகவுரையில் தெரிவித் திருக்கிறேன்.

கும்பகோணம் நேடிவ்ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருததலைமைப்பண் டிதர் மஹாவித்வான் ஸ்ரீமான், ஆலங்குடி, ஸுந்தரேசசாஸ்திரி களவர்கள் பல சாஸ்திரங்களைத் தக்கபெரியோர்களிடம் முறை யாகப் பாடங்கேட்டவர்கள்; சாஸ்திரங்களிலும் இதிஹாஸபுரா ணங்களிலும் மிக்க பரிஸ்ரமமுடையவர்கள்; இளமைமுதல் எனக் குச் சிறந்த நண்பர்கள். இந்தமஹாபாரதம் தொடங்கியதுமுதல் இதுவரையில் பல பர்வங்களை ஒப்புநோக்கிப் பரிசோதித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

குமாரமங்கலம் ஸ்ரீ. உ. நரஸிம்மாசாரியஸ்வாமிகளவர்கள் காவ்யநாடகங்களிலும் வ்யாகரண தர்க்க சாஸ்திரங்களிலும் சிறந்த பாண்டித்யமுடையவர்கள்; மொழிபெயர்ப்பை மூலத் தோடு ஒப்பிடும்பொழுது விஷயங்களை ஆழ்ந்து நுணுகிப் பார்ப்பார்கள். ஸ்ரீமஹாபாரதத்தில் விராடபர்வமும், பீஷ்மபர்வ முதலிய யுத்தபர்வங்கள் ஐந்தும், ஸ்திரீபர்வமும், சாந்திபர்வ மும், ஆஸ்வமேதிகமுதலிய ஐந்துபர்வங்களும் இவர்கள் ஒப் பிட்டுச் சோதித்துக்கொடுத்தவை.

பெருகவாழ்ந்தான் ஸ்ரீ உ. ராமபத்ராசாரியஸ்வாமிகளவர் களும், திருவியலூர்ப் பாடசாலையிலும் துகிலிப்பாடசாலையிலும் ஸம்ஸ்கிருத பண்டிதராயிருந்த தேரழுந்தூர் பிரம்மஸ்ரீ-வேதம், ஸுப்ரம்மண்ய சாஸ்திரிகளவர்களும், சென்னை மயிலாப்பூர் P, S. ஹைஸ்கூல்(Religious Teacher) வேப்பத்தூர் ஸ்ரீமான், ஸீதா ராமசாஸ்திரிகளவர்களும், சென்னை அடையாற்றில் லைப்ரேரியனாக இருந்த திருவியலூர் ஸ்ரீமான் வே. வேங்கடராம சாஸ்திரிகளவர் களும், திருவல்லிக்கேணி, Messrs. K. R. சாஸ்திரிகம்பெனி சொந்

தக்காரரும் வடமொழிஸூதஸம்ஹிதையைப் பதிப்பித்தவருமான ஸ்ரீமான், K. குப்புஸ்வாமிசாஸ்திரிகளவர்களும், திருக்கோடிகாவல், ஸ்ரீமான் ராமஸ்வாமிசாஸ்திரிகளவர்களும் இந்த மஹாபாரதத்தில், சிலசில பாகங்களை ஒப்பிட்டு உதவியவர்கள்.

சண்பகபுரம், ஸ்ரீமான் C. N. துரைஸ்வாமி ஐயரவர்கள், ஸ்ரீமஹாபாரதப் பதிப்புவிஷயத்தில் எனக்குப் பல உதவி செய்து வருகிறார்கள். 1909ஆத்தில் ச-வதுஸஞ்சிகை வெளிவரும்போது இவர்கள் என்னிடம் வந்து, அதுமுதல் பெரும்பாலும் என்னை விட்டுப் பிரியாமல் தொடர்ச்சியாக என்னோடுகூட இருந்து மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தல், புரூப்களைப் பார்த்துத் திருத்தல் முதலிய எல்லா உதவிகளையும் செய்துவருகிறார்கள்; தம்பால் ஒப்பிக்கப்படும் வேலைகளை மிகநுணுகி ஊன்றிப் பார்த்து நம்பிக்கைக்கிடமாகச் செய்துவருபவர்கள்; எனக்குக் கண்போலவும் கைபோலவும் உதவுபவர்கள்; ஸ்ரீமஹாபாரதப் பதிப்பு வேலையை மிக்கபொறுப்புடன் பார்ப்பவர்கள். இவர்கள் சிலவருஷம் கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூலிலும் சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ணா ரெஸிடென்ஷியல் ஹைஸ்கூலிலும் தமிழ்ப்பண்டிதராயிருந்தகாலத்தும் ஸ்ரீமஹாபாரத ஸம்பந்தமான வேலைகளை விடாமற்செய்துகொண்டே வந்தார்கள்.

திருவாவடுதுறை ஸ்ரீமான், T. பொன்னுஸாமி ஐயரவர்கள், தமிழ்நாட்டில் பலஜில்லாக்களிலும் திருவனந்தபுரம், பெங்களூர், மைஸூர்முதலிய இடங்களிலும் சென்று பலபிரபுக்களை ஸந்தித்துப் பல கையொப்பங்கள் சேர்த்து உதவியவர்கள். பலஸபைகளில் ஸ்ரீமஹாபாரதத்தின் பெருமையைப்பற்றி மிக்க திறமையோடு எடுத்துச்சொல்லி இந்த மஹாபாரதத்தில் பலருக்கு ஶ்ரத்தை உண்டாகும்படி செய்தவர்கள். இவர்களுடைய திறமையையும் எடுத்துக்கொண்ட கார்யத்திலுள்ள ஊக்கத்தையும்பற்றி வெளியூரிலிருந்து பலகனவான்கள் பாராட்டி எனக்கு எழுதியிருக்கிறார்கள். இவர்கள் வெளியூர்களுக்குப் போகாதபொழுது என்னோடுகூட இருந்து ஆபீஸ்வேலைகளைப் பார்த்தும்வந்தார்கள். இவர்கள் தொடர்ச்சியாக இந்த வேலையிலிருந்திருப்பார்களானால், இந்த மஹாபாரதப்பதிப்புக்கு நலமாகவே இருந்திருக்கும். ஆனால், இவர்களுக்கு வெளியூருக்குப் போய்வருதற்கும் என்னோடுவந்து வஸிப்பதற்கும் இவர்களுடைய குடும்பநிலைமை இடந்தரவில்லை.

பண்டிதர்களுடனிருந்து அவர்கள் சொல்லியதை எழுதுதல், சுத்தப்பிரதி எழுதுதல், ப்ரூப் படித்தல், கடிதம் எழுதுதல், கணக்கு எழுதுதல்முதலான பலவேலைகளை உடனிருந்து செய்தவர்கள்:—

ஸ்ரீமான் R. வேங்கடேச ஐயர் அவர்கள், திருக்கோடிகாவல்.

,, R. நாராயணஐயர் அவர்கள், Head clerk, Advertisement Department, Hindu Office, Madras.

,, K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள், கோமல்.

,, V. ராஜகோபால ஐயங்கார் அவர்கள், கம்பர் விலாஸம், மயிலாப்பூர்.

,, L. வேங்கடராமஐயர் அவர்கள், Messrs. Bombay Co., Madras.

,, D. ராமசந்திர ஐயர் அவர்கள், Manager, Tanjore District Co-operative Central Bank, Kumbakonam.

,, பைங்காநாடு - வைத்யநாத சாஸ்திரிகள் அவர்கள், உதவிப் பண்டிதர், அத்வைத ஸபை, கும்பகோணம்.

வாணுதுறை ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டிதராயிருந்த

,, M. ராஜகோபால ஐயங்கார் அவர்கள், கும்பகோணம்.

,, G. செல்லமையங்கார் அவர்கள், எதிர்க்கோட்டை.

,, தர்க்கம் கிருஷ்ணமாசாரியர் அவர்கள், கந்தர்வகோட்டை.

,, S. குருஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள், Inspector, Devasthanam Office, Kumbakonam.

,, கணேச ஐயர் அவர்கள், காஞ்சீபுரம்.

,, கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்கள், தாராபுரம்.

,, P. R. ரங்கநாதாசாரியர் அவர்கள், c/o Mr. R. Sethu Madhava Rao, Post Office, Raichur.

,, சுப்பிரமணிய ஐயர் அவர்கள், மேலக்காவேரி.

,, ஈக்காடு, ஸ்ரீநிவாஸராகவாசாரியர் அவர்கள், B. A., திருவள்ளூர்.

,, அ. சாமிநாத ஐயர் அவர்கள், கோட்டூர்.

,, சுப்பிரமணிய ஐயர் அவர்கள், திருக்கோடிகாவல்.

,, ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள், கேசவப்பெருமாள் ஸந்நிதி, மயிலாப்பூர்.

,, T. R. ராஜகோபாலாசாரியர் அவர்கள், (சமுக்கை) மானேஜர், நாட்டுக்கோட்டை சத்திரம், மாயூரம்.

ஸ்ரீமான், R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள், Headmaster, Muhamadan Higher Ele. School, Avaniapuram. இவர், குமாரமங்கலம், நரஹிம்மாசாரியரவர்களின் தமையனூர்குமாரர்; இப்பொழுதும் வேண்டிய உதவிகளைச் செய்துவருகிறார்.

திருவாவடுதுறை ஆதீனமும் திருப்பனந்தாள் காசி மடமும் என்னுடைய இளமை முதற்கொண்டு எனக்குச் செய்துவருகிற பேருதவிகள் மிகப் பல; அப்படியே, இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயத்திலும் மிக ஆதரித்து வருகின்றன. இந்த விவரங்களை முன் வெளிவந்த பர்வங்களின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். இப்பொழுதுள்ள திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர்களான மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்களும், திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர்களான மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ சாமிநாத சுவாமிகளவர்களும், என்னிடத்து மிகவும் அன்பு பாராட்டி எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்து ஆதரித்து வருகிறார்கள். இப்பெருந்தகையாளர்களுக்கு, மனமார நினைத்து வாயார வாழ்த்துதலன்றி, நான் வேறு என்ன கைம்மாறு செய்யவல்லேன்? 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என் ஆற்றுங் கொல்லோ உலகு' 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம், பேரறி வாளன் திரு' என்னும் பொய்யாமொழிகள் இவர்களுக்கே பொருந்தும்.

ஸ்ரீமான், Sir. P. S. சிவஸ்வாமி ஐயர் K. C, S. I., C. I E. அவர்களும், ஸ்ரீமான்; Sir. C. P. ராமஸ்வாமி ஐயர் K. C. I. E. அவர்களும், Law Secretariat Under Secretary ஸ்ரீமான் ராவ் பகதூர் C. ராமானுஜாசாரியரவர்களும், மதுரை அட்வொகேட், ஸ்ரீமான், T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களும் ஆரம்பகாலமுதல் அப்போதப்போது இதுவிஷயமாகப் பெரிதும் ஆதரித்தவர்கள்.

ஸ்ரீமான், Sir. P. ராஜகோபாலாசாரியரவர்கள் திருவனந்தபுரத்தில் திவானாயிருந்தகாலத்தும் சென்னை கவர்ன்மெண்டு Law Secretary ஆகவும் Council Member ஆகவும் இருந்தகாலத்தும் அங்கங்கே இருந்து செய்யக்கூடிய உதவிகளைச் செய்ததோடு நன்கொடையளித்தும் ஆதரித்தார்கள்.

கொளும்பு ஸ்ரீமான், The Hon Sir. P. ராமநாதம் K. C, C. M. G., M.L.C. அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்க வருஷோத்ஸவத்தில் அக்ராஸனம் வகிப்பதற்காக ஒரு ஸமயம் ராமநாதபுரம்

வந்திருந்தபோது, என்னுடைய மஹாபாரத பிரகடனபத்திரிகை யைப் பார்த்து எனக்கு எழுதி ரூ 200 நன்கொடையும் அனுப் பினர்கள்; அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டே வந்தார் கள்; பிறகு, 1922-ஹு மைலாப்பூருக்கு வந்திருந்தபோது என் வீட்டிற்கு வந்து வேலை நடப்பதை விசாரித்து, மேற்கொண்டு ரூ 200 நன்கொடையும் அளித்து, மிக அன்பு பாராட்டிச் சென் றார்கள்; என்னைத் தங்கள் தேசத்திற்கு வரவேண்டுமென்றும், வந்தால் தம்முடைய நண்பர்களைக்கொண்டு இதற்கு விசேஷ உதவி கிடைச்கும்படி செய்வதாகவும் வாக்களித்தார்கள். அவர் கள் எனக்குப் பலவிதங்கள் எழுதினதுண்டு. அவைகளில் சில வற்றிலிருந்து சில வாக்கியங்களை இங்கே மாதிரிக்காக எழுது கிறேன்.

Sivanadi, Mount Minakshi, Kodaikanal, 29th May, 1914 :—

'At Ramnad, where I had gone from Colombo to preside at the last anniversary of the Madura Tamil Sangam, I was given a copy of your appeal for help in the completion of the Tamil Translation of the **Maha Bharatam**. Your work is of priceless value to all who speak and read Tamil, and I shall try to interest my Tamil friends in Ceylon, the Straits Settlements and Natal, in your patriotic enterprise. Please send me as many copies of your appeal (both in English and Tamil, with opinions expressed by scholars as regards the accuracy of the translation) as you can spare, for distribution.

* * * * *

I wish you every success, financially and otherwise, in your noble undertaking.'

Colombo, dated 11th October, 1914 :—

'The effects of the war are in the way of Tamil gentlemen readily extending their support to your noble enterprise, just now. But, I fully trust they will contribute later on.

Do not be disheartened. Money *will* come in due time and ave you from financial trouble. With kind regards.'

11-6-1915 :—

'I am glad to hear you have begun Bhishma Parva etc., and wish you success in your good work.'

29-1-17 :—

'Perfection of action, called *Kritha Krithyam* by our sages, which is so necessary for individual and social uplift (Uththaranam), necessitates your completing at least these volumes.

Hoping you are doing well and with best wishes for long life and prosperity to you.'

10-2-19 :—

'I appreciate deeply your noble work.

Praying that you may have health and long life granted to you for the completion of the translation.'

ஸ்ரீமான், R. நாராயண ஐயரவர்கள் M.A. I. C. S. (Retired) Bar-at Law * தஞ்சை டிஸ்ட்ரிக்ட் பேர்டில் இந்த மஹாபாரதத்திற்கு உதவிகிடைக்கும்படி செய்தபொழுது எனக்கு நேரில் பரிசயமேஇல்லை. இதற்கு உதவி செய்யவேண்டுமென்று நான் நேரிலாவது பிறரைக்கொண்டாவது அவர்களைக் கேட்டுக்கொண்டதுமில்லை. 'என்று முகமன் இயம்பாதவர்கண்ணும், சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்' என்பதற்கு உதாரணம் இவர்களே. அதன்பிறகு, மூன்றுவருஷகாலம் சென்றபின் நீலகிரியில் இவர்களை முதல் முறை சந்தித்தேன். அப்பொழுதுதான், இவர்கள் சொந்தத்திற்கு அதுவரை வெளிவந்த மஹாபாரத புஸ்தகங்களை வாங்கிக்கொண்டார்கள். அடுத்த முறை கும்பகோணம் ரயில்வேஸ்டேஷனில் ஸந்தித்தபோது, மஹாபாரதத்தைப் படித்துக்கொண்டிருப்பதாகவும், சட்டபுஸ்தகங்களில் தமக்கு இருந்த சில ஸந்தேகங்கள் இதனால் நீங்கினதாகவும், இந்தப் பாரதம் தமக்குக்கிடைத்தது, Mine of Diamonds(=ஒருரத்னச் சுரங்கம்) கிடைத்ததுபோலிருப்பதாகவும் மிகப்பாராட்டிச் சொன்னார்கள். அதுமுதல் என்னிடத்தில் மிக்க அன்புபாராட்டிப் பலமுறை நன்

* இதன் விவரத்தை, இந்த முகவுரை 42-வது பக்கத்தில் பார்க்க

கொடை அளித்து உதவிவருகிறார்கள். இந்த மஹாபாரதத்தை விரைவில் நடத்தி முடிக்கவேண்டுமென்று பல லிகிதங்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள்.

கும்பகோணம் முன்ஸிபாலிடியிலும் தாலூகாபோர்டிலும் தஞ்சை ஜில்லாபோர்டிலும் எனக்கு அனுகூலம் கிடைக்கும்படி முயன்றவர்களில், ராஜாங்கத்தில் பெரியஉத்யோகங்களை வகித்தும் பென்ஷன் பெற்றுக்கொண்டபிறகு தேசநன்மைக்காக உழைத்தும் கீதாபாஷ்யம்முதலிய பல அரியநூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டும் உலகத்துக்குப் பேருதவி செய்துவருபவர்களான ஸ்ரீமான், திவான்பஹதூர். V. K. ராமானுஜாசார்யரவர்களும், கும்பகோணம் அட்வொகேட் ஸ்ரீமான், T. K. சிவராமஐயர் அவர்களும், அட்வொகேட் ஸ்ரீமான், ராவ்ஸாகிப், C. R. லக்ஷ்மீவராக ஐயங்கார் அவர்களும் முக்கியமானவர்கள்.

ரிடயர்டு கோஆப்பரேடிவ் டிப்டி ரிஜிஸ்ட்ராரும் எனக்குப் பரம ஆப்தர்களுமான ஸ்ரீமான், G. ஸ்ரீநிவாஸராகவாசாரியரவர்களும், திருசிரபுரம் ரிடயர்டு, டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸர் ஸ்ரீமான் K. நடேசஐயர் M. A., L. T. அவர்களும், கோயம்புத்தூர் விவஸாயகாலேஜ் வைஸ் ப்ரின்ஸிபால் ராவ் ஸாஹிப், T. V. ராஜகோபாலாசாரியரவர்களும், மாயூரம் அட்வொகேட், ஸ்ரீமான் G. ஆராவமுத ஐயங்கார் அவர்களும் இந்த மஹாபாரதப்பதிப்பு விஷயமாகத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்து ஆதரித்து வருகிறார்கள்.

இளமைமுதல் எனக்குச் சிறந்த நண்பரும் கும்பகோணம் பெரியதெரு ஜவுளிவியாபாரிகளுமான ஸ்ரீமான் கோட்டூர், C. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களும், ப்ரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய சாமிநாத ஐயரவர்களுடைய அனுஜரும் சென்னை ஜனரல் போஸ்டாபீஸ் வி. பி. க்ளெய்ம்ஸ் டிபார்ட்மெண்டு ஹெட்கிளர்க்கும் எனக்குச் சிறந்த நண்பருமான ஸ்ரீமான், V. சுந்தரம் ஐயரவர்களும் இந்த மஹாபாரதப்பதிப்பு விஷயத்திலும் மற்றும் பல வகையிலும் எனக்குத் தம்மாலியன்ற உதவிகளைச்செய்து ஆதரித்துவருகிறார்கள்.

ஸ்ரீமான், மஹாமஹோபாத்யாய ஐயரவர்களுடைய குமாரரும் சென்னை ஹைகோர்ட்டு ட்ரான்ஸ்லேடரும் எனக்குச் சிறந்த நண்பருமாகிய ஸ்ரீமான், S. கலியாணஸுந்தர ஐயரவர்கள் இள

மைமுதலே என்னிடம் மிக்க அன்புடையவர்கள். நான் இந்த மஹாபாரதப் பதிப்புவேலையைத் தொடங்கியதுமுதல் எனக்குச் சென்னையில் ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் ப்ரமத்தைச் சிறிதும் பாராமல் தாமே பார்த்துவருகிறார்கள். அவர்களால் நான் அடைந்துவரும் உதவிகள் மிகப்பல.

1923ம் வருஷத்தில் நான்நிறுத்திவிட்ட மஹாபாரதப் பதிப்புவேலையைத் திரும்பத் தொடங்கச்செய்து அப்போதப்போது வேண்டிய உதவிகளைப் புரிந்து ஆதரித்து இதனை நடத்திவருகிற ஸ்ரீமான், ராவ்பஹதூர், V. T. கிருஷ்ணமாசார்யர் C. I. E. அவர்களுடைய குமாரர், ஸ்ரீமான், V. K. திருவேங்கடாசார்யர் M.A., B.L., அவர்களும், தமது தந்தையாரைப்போலவே, இந்த மஹாபாரதப்பதிப்பு விஷயத்தில் விசேஷ அபிமானமுடையவர்கள். சென்ற ஜூலைமாஸத்தில், ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியர் அவர்கள் சென்னைக்கு எழுந்தருளியிருந்தஸமயத்தில், நான், அப்பொழுது வெளிவந்திருந்த சந-வது ஸஞ்சிகையை அவர்களிடம் நேரில் சேர்ப்பித்தேன். அவர்கள் மேல்நடக்கவேண்டியவற்றை விவரமாகக்கேட்டு அவற்றுக்குவேண்டிய ஸௌகரியங்களையும் அமைத்துக் கொடுக்கும்படி தம்முடைய குமாரர், ஸ்ரீமான், V. K. திருவேங்கடாசாரியர் M.A.,B.L, அவர்களிடம் தெரிவித்தார்கள். அவர்கள் அந்தப்படியே வேண்டியஸௌகரியங்களை அமைத்துக் கொடுத்தார்கள். அவர்களுடைய பேருதவியாலேயே இந்தவன பர்வம் பூர்த்தியாயிற்று.

ஸ்ரீமான், Sir M. CT. முத்தைய செட்டியாரவர்களுடைய குமாரர் ஸ்ரீமான், M. CT. M. சிதம்பரம் செட்டியாரவர்களும் தமது தந்தையாரைப்போலவே, ஸ்ரீமஹாபாரத விஷயத்தில் மிக்க அபிமானம் வைத்திருக்கிறார்கள். ஸ்ரீமான் முத்தையசெட்டியாரவர்கள், தாம் நேராகவும் தம்நண்பர்களைக்கொண்டும் பெருந்தொகை சேகரித்துக்கொடுத்து உதவியதல்லாமல், சில நிர்ப்பந்தமானஸமயங்களில் தாமே மேலொப்பம்போட்டு இந்தியன்பாங்கில் கடன்வாங்கிக் கொடுத்துமிருந்தார்கள். அதில் கடைசியாகப் பாக்கியிருந்த ரூ. 1000-ஐயும் ஸ்ரீமான், சிதம்பரம்செட்டியாரவர்கள் தாமே கொடுத்துத் தீர்த்து எனக்குப் பேருதவிசெய்தார்கள்.

இந்த மூன்றுகனவான்களும், 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும்', 'மகனுரைக்கும் தந்தை

நலத்தை' என்னும் நீதிமொழிகளுக்கேற்பத் தந்தையர்க்குத்தக்க தநயர்களாக விளங்குகிறார்கள்.

மற்றும் பொருளுதவிசெய்த கனவான்களுடைய பெயர்களை மூன் விராடபர்வம் முதற்பதிப்பு, ஷை மூன்றும்பதிப்பு, பீஷ்மபர்வம், சாந்திபர்வம் இரண்டாம் பாகம், ஆஸ்வமேதிக பர்வம் ஆகிய இவற்றின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். பின்னும் நன்கொடையளித்து ஆதரித்த கனவான்கள்:—

ஸ்ரீமான்	மாட்சிமை தங்கிய ராஜராஜேஸ்வரஸேதுபதி மஹாராஜா அவர்கள், Raja of Ramnad	ரூ.	500
,,	திவான்பஹதூர், ராஜா, ஸர், அண்ணுமலைசெட்டியார் அவர்கள், Raja of Chettinad.	,,	750
,,	மெ. சி. த. வைரவன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை (மூன்கொடுத்த ரூ. 500 தவிர மேற்கொண்டு)	,,	500
,,	திவான் பஹதூர் A.V. PL. சிதம்பரம்செட்டியாரவர்கள், காரைக்குடி	,,	300
,,	M. S. M. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள், காரைக்குடி	,,	400
,,	சிறுவாலைஜமீன்தாரவர்களாகிய P.C. முத்துச் செட்டியாரவர்கள், மதுரை	,,	500
,,	ராஜாபஹதூர், கிருஷ்ணமாசாரிய ரவர்கள், M. L. A., ஹைதராபாத் (மூன்கொடுத்த ரூ. 250 தவிர மேற்கொண்டு)	,,	250
,,	M. A. R. N. ராமநாதம் செட்டியாரவர்கள், தேவகோட்டை	,,	250
,,	AL. SP. PL. சுப்பிரமணியசெட்டியாரவர்கள், தேவகோட்டை	,,	100
,,	AL. AR. அருணுசலசெட்டியாரவர்கள், ஜமீன்தார், தேவகோட்டை	,,	350
,,	PS. AR. AR. அருணுசல செட்டியாரவர்கள், தேவகோட்டை	,,	100
,,	RM. AR. AR. RM. அருணுசலசெட்டியாரவர்கள், தேவகோட்டை	,,	200

ஸ்ரீமான் AL. ST. AL. அழகப்பசெட்டியாரவர்கள், தேவகோட்டை .... ,, 100

,, திவான்பஹதூர் P. ஸோமஸுந்தரம்செட்டியாரவர்கள், தேவகோட்டை .... ,, 100

,, ராவ்பகதூர், M. R. ஸுப்பையசெட்டியாரவர்கள், காரைக்குடி .... ,,1000

,, R. ராம்ஜீ தாஸ் ஐயரவர்கள், கல்கத்தா .... ,, 150

,, ராவ்சாஹிப் N. T. ரங்கஸ்வாமி ரெட்டியாரவர்கள், நரசிங்கன்பேட்டை .... ,, 100

S. A. C. Charities, Madras. For 8 Sets .... ,, 400

இப்பொழுது தூத்துக்குடி Circle Excise Inspector ஆக இருப்பவரும் என்னுடைய நண்பருமான ஸ்ரீமான், P. நடேச ஐயரவர்கள், நான் இந்த மஹாபாரதம் தொடங்கியதுமுதல் அப்போதப்போது தம்மாலியன்ற உதவியைச்செய்தும் செய்வித்தும் வருகிறார்கள். பர்வங்கள் முடிகிறகாலங்களில் கிலநன்கொடை அனுப்பி எனக்கு ஊக்கமளித்துவருகிறார்கள். ஸமீபத்தில் எனக்கு ஒருபாங்கு நிர்ப்பந்தம் நேர்ந்தபொழுது, அவர்களும், அவர்களுக்கும் எனக்கும் நண்பர்களும் இப்பொழுது திருக்காட்டுப்பள்ளி ஸப்ரிஜிஸ்ட்ராராக இருப்பவர்களுமான ஸ்ரீமான், R. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளவர்களும் அந்தநிர்ப்பந்தத்தை நான் கேட்டுக்கொள்ளாமலே விலக்கினர்கள். எனக்கு இந்த நிர்ப்பந்தம் இருக்கிறதென்பதை அவர்களுக்குத்தெரிவித்தவர் எனக்கு மிக்கநண்பரும் இப்பொழுது நாகபட்டணம் ஜாயிண்ட் ரிஜிஸ்ட்ராராக இருப்பவருமான ஸ்ரீமான், G. தாதாசாரியரவர்கள். 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே, இடுக்கண் களைவ தாம் நட்பு' என்னும் பழமொழியை இவர்களிடத்து உண்மையாகக் காண்கிறேன்.

நான் திருவாவடுதுறையில் படிக்கவந்தகாலமுதல் பெரிய மணியகாரர், ம-ரா-ரா-ஸ்ரீ. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்களுடைய குடும்பமும், ம-ரா-ரா-ஸ்ரீ. வீரப்பிள்ளையவர்களுடைய குடும்பமும் எனக்கு விசேஷ ஆதரவைச் செய்துவருபவை. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்களுடைய குமாரர் ம-ரா-ரா-ஸ்ரீ. T. S. ஸேதுராம பிள்ளை B. A. அவர்கள் ரூ. 800-ம், வீரப்பிள்ளையவர்களுடைய தம்பி

யார் ம-ரா-ரா-ஸ்ரீ ஷண்முகம்பிள்ளையவர்கள் ரூ. 600-ம் இந்தமஹா பாரதப்பதிப்புக்காக நன்கொடையளித்து உதவினர்கள்.

இந்தமுறை மணலூரில் வந்து வஸித்தகாலத்தில் அப்போதப்போது எனக்கு வேண்டிய உதவியைச்செய்தவர்கள் பாஸ்கர ராஜபுரம் ரிடயர்ட் எஞ்சினியர், ஸ்ரீமான், V. கோபால ஐயரவர்களும், ஆடுதுறை மளிகை, ஸ்ரீமான், T. S. ராஜம்செட்டியாரவர்களும், ஆடுதுறை ரூரல் டிஸ்பென்ஸரி, டாக்டர், ஸ்ரீமான், K. கோவிந்த ஐயர் L. M. P. அவர்களுமாவர்.

திருவிந்தளூர், ஸ்ரீ பரிமள ரங்கநாதஸ்வாமி ஸந்நிதி கார்ய நிர்வாஹகரும் எனக்குப் பரமபந்துவுமான ராஜாவையங்கார் என்று வழங்குகிற ஸ்ரீ. உ. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும், சென்னை இந்தியன் பப்ளிஷிங் ஹௌஸ் Travelling Agent-உம் எனக்கு இளமைமுதற்கொண்டு சிறந்தநண்பருமான ஸ்ரீமான், V. S. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும் இந்தமஹாபாரதப்பதிப்பு விஷயத்திலும் என் சொந்தக்காரியங்களிலும் தம்மாலியன்ற உதவிகளை யெல்லாம் சலிப்பின்றிச்செய்து உதவிவருகிறார்கள்.

சில ஐரோப்பிய கனவான்களும் இதுவிஷயத்தில் மிக்க அன்புடன் ஆதரித்தார்கள். அவர்கள் செய்த உதவிகளை இங்கே சுருக்கமாகத் தெரிவிக்கிறேன். 1915-வருஷத்தில் இவ்விடம் காலெஜ் ப்ரின்ஸ்பாலாக இருந்தவர்களும் இப்பொழுது சென்னை பிரஸிடென்ஸி காலெஜ் ப்ரின்ஸ்பாலாக இருப்பவர்களுமான ஸ்ரீமான், R. M. Statham துரை M.A., C.I.E. அவர்கள், நான் இந்த மஹாபாரதப்பதிப்புவேலையை நடத்துதற்குப் போதிய உதவியில்லாமல் ச்ரமப்படுகிறேன் என்பதைத் தெரிந்துகொண்டு, அப்பொழுது இந்த ஜில்லா கலெக்டராயிருந்த ஸ்ரீமான், R. B. Wood துரை அவர்களிடம் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததாகவும் அவர்கள் சந்திரம் ஐவேஜியிலிருந்து இதற்கு ஏதாவது உதவிசெய்யலாமென்று அபிப்பிராயப்பட்டதாகவும் என்னிடம் சொன்னார்கள். அதன்மேல், நான் ஜில்லாபோர்டுக்கு விண்ணப்பம் செய்துகொண்டேன். கலெக்டர் துரையவர்கள் இதுவிஷயத்தில் போதுமான பொருளுதவிசெய்தல் அவசியமென்று மிகப் பொறுத்து எழுதினர்கள். அந்தவிஷயம் மீட்டிங்குக்குவந்த பொழுது அக்ராசனம்வகித்த ஸ்ரீமான், R. நாராயண ஐயரவர்கள் I.C.S., இதைப்பற்றி மிகப்பாராட்டி வார்த்தைசொன்னார்கள்.

அதன்மேல், பாக்கியுள்ள ஸஞ்சிகை ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வீதம் நன்கொடையளிக்கவும் புஸ்தகம் 13-பிரதிகள் வாங்கிக் கொள்ளவும் ஜில்லாபோர்டு தீர்மானித்தது. இத்தவிஷயத்தில் என் னுடையமுயற்சி சிறிதுமில்லை. இதற்கு, ஸ்ரீமான், R. M. Statham துரையவர்களே முழுதும் காரணம். இந்தப் பேருதவிக்காகத் தஞ்சை ஜில்லாபோர்டுக்கு நான் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

ஸ்ரீமான் H. Le Fanu I. C. S. (Retired) அவர்கள் இங்கே பல ஜில்லாக்களில் கலெக்டராக இருந்து பின் ரெவின்யூ போர்டில் மெம்பராகவுமிருந்தவர்கள். ஸ்ரீ மஹாபாரதப்பதிப்பு விஷயமாக ஸமாசாரபத்திரிகைகளில் பார்த்தபோது அவர்கள் தாமாக எனக்கு எழுதினர்கள். உடனே, அதுவரையில் வெளிவந் திருந்த புஸ்தகங்களைமாத்திரம் வாங்கிக்கொண்டு மஹாபாரதம் முழுதுக்கும் ஆகக்கூடியதொகையை முன்னதாக அனுப்பிவிட் டார்கள். பிறகு, என்னிடத்தில் அதிக அன்பு பாராட்டி அடிக்கடி லிகிதம் எழுதிக்கொண்டே வந்தார்கள். மாதிரிக்காக அவற்றி லுள்ள சில வாக்கியங்களை இங்கே எழுதுகிறேன்.

Saifabad, Hyderabad (Deccan); dated 18-3-1913 :—

'I am glad to see from the review of the Madras Mail that the *Magnum opus* of translating and publishing the Mahabharata is nearing completion.

* * * *

The General use of Tamil type is very trying to the eyes. It will be a great pity if your great work for which so many are waiting should not be printed in a fount worthy of it.'

31-1-1914 :—'You perhaps may remember that I wrote to you in March last to which letter you replied on 24th do.

I had been waiting till I could get the whole Mahabharata in your edition, but, from a letter of yours which appeared recently in the Madras Mail, I see that the remaining portion may not be published for some time and as you seem to be in some difficulty just now, I write to ask you to send me whatever portions of the Mahabharata are complete, * * * and in the V. P. P. advice, you can charge me for the full edition.

* * * *

It is on account of the binding that I wanted to wait for the complete work, but I see now that your friends must rally round you without further delay.

* * * ,,

11-2-1914 :—'You have my warmest sympathies. The thing had to be done and it was a gift of God that we had such able scholars to do it.

* * * *'

4-3-1914 :—'Many thanks for the Anusasana Parvam. (Your Secretary's handwriting makes me envious) * * * * I am afraid that I shall never have the pleasure of meeting you but we can be and remain friends on paper. * * * * * You have been so badly treated that it is hopeless to look to you fora revised Edition of the Ramayana.

Your countrymen have not yet been educated up to *buying their books*.

* * * *'

29-3-1914:—'* * * *

I think that your fellow country-men who are great talkers but slow to act have treated you very badly. If Government would subscribe for 200 copies, it would help you over the stile.

As it is, you will never add to your troubles by doing for the Ramayana what you have done for the Mahabharata.'

10-10-1914 :—'I have returned from home. Has the Madras Government done anything to help you since I went away in March last? Has any new volume come out since I went away? If so, you might kindly send it to me.'

29-8-1915:—'It is very curious how shy our Indian Nobles are about supporting literary effort. When there is any matter before the public in which their subscription bills obtain publicity or the notice of Government they come forward readily enough.'

20-2-1916 :—'It was not because I forgot you that I did not write, but I was sorry not to have been able to be of any use, which you will see from enclosed, which please return.

I hope you are well and that the magnum opus is getting on as well as can be expected, under the unfavourable circumstances.

I agree with Mr. Stone that it is *your own* people who are to blame for not encouraging your work. There are a dozen men who could draw a cheque for the whole cost without missing the money.

I cannot imagine why Pratap Chandra Roy was helped, except that he is a Babu.

* * * *

20-1-1920 :— * * * *

I suppose the Mahabharata is nearing completion. In a way you will be glad that it must have been, also in a way, a labour of love for which the Dravida country is your debtor. Did Government give you no more help ?

* * * *

நான் கேட்டுக்கொள்ளாமலும் அவர்கள் எனக்குத் தெரிவியாமலும் என்னைப்பற்றி, டைரெக்டர் Mr. Stone துரையவர்களுக்கு எழுதினர்கள் ; தமக்கு Mr. Stone துரையவர்கள் எழுதியலிகிதத்தைப் படித்துப்பார்க்கும்படி எனக்கு அனுப்பினர்கள். அதில் Mr. Stone துரையவர்கள்,

Old College
28-11-15.

Dear Mr. Le Fanu

* * * *

As regards Ramanujachariar, I don't think he has been badly treated over his book and since we adopt the plan of leaving local boards and other school Managers to buy the books they think they need, I am afraid I cannot do anything more for him. If the well-to-do people of the country won't support their own literature what can we do ?

* * * *

என்று எழுதியிருந்தார்கள். இவற்றால், ஸ்ரீ மஹாபாரதத்தில் Le Fanu துரையவர்களுக்கிருந்த பேரன்பு நன்கு விளங்கும். அவர்கள் மஹாபாரதப்பதிப்பை முடித்துப் பார்க்கவேண்டுமென்று மிக்க ஆவலுள்ளவர்களா யிருந்தார்கள். அவர்களுக்கு இதனை முடித்துக்காட்டும்படியான நல்லூழ் எனக்கு இல்லாமற்போயிற்று.

ஸ்ரீமான், Thomas Brown துரையவர்கள், நீலகிரியைச்சேர்ந்த கூனூரில் பெரிய காபி டீத் தோட்டங்களுக்குச் சொந்தக்காரர். அவர்கள் இந்த மஹாபாரத விஷயத்தை Madras Mail இல் பார்த்து எனக்கு எழுதி அதுவரையில் வெளிவந்துள்ள புஸ்தகங்களின் விலைக்கு வாங்கிக்கொண்டதுமல்லாமல், ரூ. 25 நன்கொடையுமளித்தார்கள். கூனூரிலிருந்த இந்துகனவான்களுக்கு இதைப் பற்றிச் சிபார்சுசெய்தார்கள். நான் நீலகிரிக்குப் போயிருந்தபோது, என்னைத் தம்முடைய தோட்டத்திற்குவருவித்து மிக உபசரித்து அனுப்பினர்கள். அவர்கள் இருந்தவரை இந்த மஹாபாரதம் நடைபெறுவதை அடிக்கடிவிசாரித்து எழுதி எனக்கு ஊக்கமளித்துவந்தார்கள். அவர்களுடைய லிகிதங்களில் ஒன்று வருமாறு:—

'*Glendale Cottage, Coonoor*: *30-1-1914*

* * * *

Please send me the 18 volumes now ready and book me for copy of the remaining volumes to be issued, for which I enclose cheque for Rs. 20 for credit against cost. Aside from this, I should be glad to donate Rs. 25.

* * * *

I will call the attention of my Indian friends in Coonoor, to the work and trust that the little station will not be behind others in supporting you.'

Rev-E. M. Macphail துரை C. I. E., C. B. E., M.A., D.D. அவர்கள், மயிலாப்பூர் அட்வொகேட் ஸ்ரீமான் K. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுடன் ஒருஸமயம் வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கையில் இந்த மஹாபாரதப் பதிப்பைப் பற்றிப் பிரஸ்தாவம் வந்ததாம். அப்பொழுது கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் மஹாபாரதப் பதிப்பின் பெருமையையும் ஸ்ரமத்தையும் எடுத்துச் சொல்ல, துரையவர்கள், அவற்றை முழுதும் மனத்தில் வாங்கி அங்கிகரித்து, யூனிவர்ஸிடியிலிருந்து போதுமானபொருளுதவி செய்யவேண்டுமென்று சொன்னர்களாம். அதனை, கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் எனக்குத் தெரிவித்து, யூனிவர்ஸிடிக்கு ஒருவிண்ணப்பம் செய்துகொள்ளும்படி சொன்னர்கள். நான், 'முன்னொருமுறை, ஸ்ரீமான் Sir K. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்

யூனிவர்ஸிடி Vice chancellor ஆக இருந்தபொழுது அவர்களைப் பார்த்தேன். அவர்கள், 'யூனிவர்ஸிடியில் ஏதாவது உதவிகிடைத்ததா?' என்று தாமாகக் கேட்டார்கள். நான், 'இல்லை' என்று சொன்னேன். அவர்கள், 'இதுஸமயம் மனுக்கொடுங்கள். நான் நிச்சயமாக உதவிகிடைக்கும்படி செய்கிறேன்' என்று சொன்னார்கள். அவர்கள் கிரப்பந்தமாகச் சொன்னதன்மேல் யூனிவர்ஸிடிக்கு ஒருமனு எழுதிப்போட்டுவிட்டு, அதுவிஷயத்தை ஐயங்காரவர்களுக்கும் எழுதியிருந்தேன். அவர்கள் 15-7-1922இல் யூனிவர்ஸிடி ஆபீஸிலிருந்து ஓர் உத்தரவு அனுப்பினார்கள். அது வருமாறு:—

'The syndicate regrets that it has no funds available for the purpose of such a grant'.

நான் ஐயங்காரவர்களுக்கு நேரில் எழுதிய லிகிதத்துக்கு, சிலவாரங்கள் கழித்து, 6-8-22 இல், அவர்கள் ஜாகையிலிருந்து,

'Dear Mr. Ramanujachariar,

I beg to acknowledge the receipt of a copy of a letter from you to the Registrar asking for aid of the University to complete the printing and publication of your Translation of the Mahabharatha. It will have the careful consideration of the syndicate.

Yours sincerely,'

என்று எழுதினார்கள். ஆதலால், யூனிவர்ஸிடியில் ஒருதவியும் கிடைக்காது' என்று சொன்னேன்.

ஸ்ரீமான் K. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள், 'அப்படியன்று. Rev. Macphail துரையவர்கள் இந்த விஷயத்தில் மிக்க அனுகூலர்களாக இருக்கிறார்கள். இதற்காக ஒரு பெருந்தொகை கொடுத்து உதவிசெய்யவேண்டுமென்று சொன்னார்கள். ஆதலால், இந்தமுயற்சி வீண்போகாது' என்றும், 'அவசியம் விண்ணப்பம் செய்துகொள்ளுங்கள்' என்றும் வற்புறுத்திச் சொன்னார்கள். பிறகு, நான் ஒருவிண்ணப்பம் செய்துகொண்டேன். அது மீட்டிங்குக்கு வந்தபோது, யூனிவர்ஸிடிமெம்பர்கள் நன்றாக ஆலோசித்து, ரூ. 1000 நன்கொடை கொடுப்பதென்றும் அதனை மஹாபாரதம் பூர்த்தியானபிற்கு கொடுப்பதென்றும் முடிவுசெய்தார்கள். இப்பால், சென்றவருஷத்தில், அவர்கள் அனுமதிசெய்திருக்கிற நன்கொடை இந்த மஹாபாரதத்தின்

பெருமைக்குச் சிறிதும் போதாதென்றும் மேற்கொண்டு அதிக மான உதவிசெய்ய வேண்டுமென்றும் அதனை இந்த மஹாபாரதப் பதிப்பை நடத்துவதற்கு அனுகூலமாகும்படி. இப்பொழுதே கொடுக்க வேண்டுமென்றும் யூனிவர்ஸிடிக்கு மனுச்செய்து கொண்டேன். திரிசிரபுரம் ஸெண்டு ஜோஸப் காலேஜ், Prof. Rev P. Carty S. J. B. Sc., D. D. அவர்கள் இதைப்பற்றி Senate-இல் பிரேரேபனை செய்தார்கள். இந்தியகனவான்கள் பலர் இதனை ஆதரித்துப்பேச, பின்னும் ரூ. 1000 கொடுப்ப தென்றும் அதனை இப்பொழுதேகொடுத்து உதவுவதென்றும் உத்தரவளித்தார்கள். இந்தப்பேருதவி செய்ததற்காக யூனிவர் ஸிடிக்கு நான் மிகவும் நன்றிபாராட்டுகிறேன்.

இன்னமும் பல ஐரோப்பியப்பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக் கூடங்களுக்காகவும் தங்களுடைய சொந்தத்திற்காகவும் தனித் தனி புஸ்தகங்கள் வாங்கிக்கொண்டார்கள். Rev. எல்வின், Rev. ஷேமே, Rev. போவிங்கர், Rev. பார்க்கர், Rev. ஞானப்பிரகா சம், Rev. கன்னிகேசர், Rev. மேரி ஆரோக்யநாதர் முதலான பலபாதிரிமார்கள் ஸ்ரீ மஹாபாரதத்தை மிகவிரும்பி வாங்கிக் கொண்டார்கள். இவர்களுள், Rev. எல்வினும் Rev. ஷேமேயும் Rev. பார்க்கரும் Rev. கன்னிகேசரும் தமக்காகவும் தம்மைச் சேர்ந்தவர் சிலருக்காகவும் சிலபிரதிகள் வாங்கிக்கொண்டார்கள். இவர்களுள் சிலர் அடிக்கடி லிகிதம் எழுதி விசாரிப்பார்கள்.

ஆடுதுறை நோற்கிடங்கு, ஜனப், M. G. முகம்மது அப் துல்லாஸாஹிப் பஹதூர் அவர்கள் பலஸமயங்களில் பொருளுதவி செய்தார்கள். சென்னை தாருல் இஸ்லாம் பத்திராதிபர், ஜனப், B. தாவுத்ஷா ஸாஹிப் பஹதூர் B. A. அவர்கள் இந்த மஹா பாரதம் தொடங்கியகாலத்துத் தாம் கையொப்பம்செய்தும் பல கையொப்பங்கள் சேர்த்துக்கொடுத்தும் உதவினர்கள்.

இதிலிருந்து, இந்தமஹாபாரதப்பதிப்பு அந்தவகையாருக்கு உபயோகப்படக்கூடுமானல் அவர்களால் எவ்வளவு உதவி கிடைத் திருக்குமென்பதையும் அதனல் எனக்கு எவ்வளவு ஸ்ரமம் குறைந்திருக்குமென்பதையும் நான்தெரிவிக்கவேண்டியதில்லையே. இந்தக் கனவான்கள் வேறு மதஸ்தர்களாயிருந்தும், பொது நோக்கத்துடன் கார்யத்தின் ஸ்ரமத்தையும் பெருமையையும் நினைத்து உதவி செய்ததைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

Hindu, Madras Mail, சுதேசமித்திரன் முதலிய பல ஸமாசார பத்திரிகைகள் இதுவிஷயமாக ஆதரித்துவருகின்றன. அவைகளுள், ஹிந்துபத்திரிகையினுடைய உதவி மிகப்பெரிது. அதன் ஆசிரியர், ஸ்ரீமான் A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்களும் சொந்தக்காரர்களாகிய ஸ்ரீமான் K. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களும் ஸ்ரீமான் K. கோபால ஐயங்காரவர்களும் பத்திரிகையில் ஸ்ரீ மஹாபாரதத்தைப்பற்றி அடிக்கடி பாராட்டி விமர்சனங்கள் எழுதுவதும் விளம்பரம் செய்வதுமல்லாமல், நன்கொடையளித்தும் ஆதரித்துவருகின்றனர்.

இந்த மஹாபாரதப் பதிப்புவேலை, முதலில் வைஜயந்தி என்னும் அச்சுக்கூடத்தில் தொடங்கப்பெற்று, பிறகு, பல அச்சுக்கூடங்களில் நடந்துவந்து, கடைசியாக, கேஸரி அச்சுக்கூடத்தில் நிறைவேறியது. இதனை முடித்துக்கொடுக்கும்புண்ணியம் இந்த அச்சுக்கூடத்திற்கே இருந்ததுபோலும். இந்தக் கேஸரி அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீமான், C. ஸுந்தரமையரவர்கள் இந்த வேலையை மிக்க ஸ்ரத்தையுடன் நடத்திக்கொடுத்தார்கள்.

அப்படியே, இந்த மஹாபாரதம் பைண்டு செய்துகொடுத்த பைண்டர்களும் பலர். இப்பொழுது, சில வருஷங்களாக, சென்னை ஜயகரம் கம்பெனி சொந்தக்காரர் ஸ்ரீமான் C. முருகேச முதலியாரவர்கள் புத்தகங்களை நம்பிக்கைக்கிடமாக நன்கு பைண்டு செய்து கொடுத்துவருகிறார்கள்.

மேலேசொல்லியபடி பலவகைகளிலும் உதவிசெய்து ஆதரித்து, ஸ்ரமஸாத்யமும் மிக்கபுண்யத்தைத் தருவதுமான இந்த ஸத்காரியத்தை நிறைவேற்றிய மஹோபகாரிகளுக்கு நான் என்றும் நன்றி பாராட்டக் கடமையுற்றிருக்கிறேன். அவர்களுக்கு ஸ்ரீ கண்ணபிரானுடைய பேரருளால் எல்லாநன்மைகளும் மேன்மேலும் பெருக உண்டாகவேண்டுமென்று பலமுறை பிரார்த்திக்கிறேன்.

எடுத்துக்கொண்ட காரியம் மிகப்பெரிதும் பெரும்பொருட்செலவினால் நிறைவேறக்கூடியதும் பல வருஷங்களில் நடந்துவந்ததுமாகையால், பலகனவான்களுடைய பேருதவி இன்றியமையாததாயிருந்தது. ஆரம்பமுதல் பூர்த்தியாகிறவரையில் மொழிபெயர்ப்புக்காகப் பண்டிதர்களுக்குக் கொடுத்ததும், சில பர்வங்களை இரண்டுமுறை மூன்றுமுறை மொழிபெயர்க்கவும் சோதிக்கவும்நேர்ந்ததனாலுண்டான அதிகச்செலவும், மொழிபெயர்ப்பை

மூலத்தோடு ஒப்பிடுகிற பண்டிதர்களுக்கும் கூட இருந்து உதவி செய்கிற மற்றவர்களுக்கும் கொடுக்கும் மாதவாரிச் சம்பளமும், காகிதவிலையும், அச்சுக்கூலியும், பயிண்டுக்கூலியும், விளம்பரச்செலவும், வெளியூர்களுக்குப்போய் மஹாபாரதத்தைப்பற்றிப்பிரசாரம் செய்து கையொப்பங்களைச் சேர்த்துவந்த ஏஜண்டுகளுக்குச் சம்பளம் படிச்செலவுகளும், வாங்கிய கடனுக்கு வட்டியும் முதலாகப் பலவகைகளிலும் பெருந்தொகை செலவாயிற்று. ஸுமாராகக் கணக்குப் பார்த்ததில், ரூ. 1,35,000-த்துக்குமேல் செலவு தெரிகிறது. இந்த வேலையைத் தொடங்கிச் சில வருஷங்களுக்குள், மொழிபெயர்ப்பு ஹித்தம்செய்வதற்கும் ஆரம்பச்செலவுகளுக்கும் சில ஸஞ்சிகைகள் அச்சிடுவதற்குமாக ரூ. 10,000-த்துக்குமேல் கடன் வாங்கவேண்டிற்று. அதற்கு, ஸுமார் 22 வருஷமாக ஸாதாரணமான வட்டி என்ன ஆயிருக்குமென்பது நான் தெரிவிக்கவேண்டியதில்லை. நான் பெரும்பாலும் பாங்குகளிலேயே கடன்வாங்கி 3 மாதத்துக்கொருமுறை வட்டிகொடுத்து வந்தேன். இதனால், எவ்வளவு வட்டி வளர்ந்திருக்குமென்பது,பொருளை வட்டிக்குக் கொடுத்து வாங்கிப் பெருக்கியிருக்கிறவர்களுக்கும் என்னைப்போலப் பெருந்தொகை கடன்வாங்கிப் பலவருஷங்கள் வட்டி கொடுத்து நஷ்டத்தையடைந்தவர்களுக்குமே தெரியும். இதற்குப் புஸ்தகவிலையினாலும் நன்கொடையினாலும் என்னுடைய இதர வரும்படிகளாலும் ஈடானதுபோக, பாக்கி ரூ. 15,000 என் கைப் பொறுப்போடு இந்த மஹாபாரதம் பூர்த்தியாகியிருக்கிறது. மஹாபாரதப்பதிப்பை மேற்கொண்டது எனக்கு இவ்வளவு ஸ்ரமத்துக்கும் நஷ்டத்துக்கும் காரணமானாலும், அதனால், நான் பெறற்கரும் பேறு பெற்றவனாகவே என்னை நினைக்கிறேன்.

> 'நானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென் ஞாலத்தன்றி
> ஈனந்த வாத நிரயத்து வீழிலென் யானடைந்தேன்
> கோனந்தன் மைந்தனை நான்முகன் தந்தையைக் கோயிலச்சு
> தானந்த னையெனக் காராவமுதை யனந்தனையே'

என்றபாடலை மனத்தினுள் அடிக்கடி நினைத்துப் பெரிதும் இன்புறுகிறேன்.

ஸமாசாரபத்திரிகைகளில் பிரசுரம் செய்ததனாலும் ஏஜண்டுகள் வெளியூர்களுக்குப் போய்ச் சேர்த்ததனாலும் பிறவழியாலும் சேர்ந்த கையொப்பக்காரர்களின் தொகை தொடர்ச்சியாக ஒரே

மாதிரி இல்லை. ஒரு காலத்தில் 800 கையொப்பத்துக்குமேல் சேர்ந்தன. ஆனல், பலர் தொடர்ச்சியாக வாங்கிக்கொள்ளவில்லை ; அதனை முன்னர்த் தெரிவிக்கவுமில்லை. அதனல், ஒவ்வொரு ஸஞ்சிகையும் வெளிவரும்போது தூற்றுக்கணக்கான V. P- கள்,போஸ்டேஜ் நஷ்டத்துடன், திரும்பிவந்துவிட்டன. ஸமீபத்தில் அனுப்பிய சஉ-வது ஸஞ்சிகையைப் பலர் திருப்பியிருக்கிறார்கள். உரு வருஷகாலமாகப் பொறுமையோடு சஈ-வது ஸஞ்சிகைவரையில் வாங்கிவந்தவர்கள், சஉ-வது ஸஞ்சிகையில் திருப்பிவிட்டிருக்கிறார்கள். இந்தக் கடைசி ஸஞ்சிகையாகிய சடு-வது ஸஞ்சிகை அனுப்பும்போது எத்தனை கையொப்பக்காரர்கள் திருப்புவார்களோ தெரியவில்லை. கையொப்பக்காரர்கள் உறுதியாக இல்லாமையினலுண்டாகிற அலைகர்யம் மிக அதிகம். இப்பொழுது ஸஞ்சிகையாக வாங்கிக்கொள்ளுகிற கையொப்பங்கள் 250-க்கு உட்பட்டும், பயிண்டு புஸ்தகமாக வாங்கிக்கொள்ளுகிற கையொப்பங்கள் 250-க்கு உட்பட்டுமே இருக்கின்றன.

இந்த உத்தமோத்தமமான ஸ்காரியத்துக்கு இடையூறு செய்தவர்களும், நான் இந்த மஹாபாரதத்தை ஏதோ ஒரு லாபங் கருதித் தாமதித்துவருகிறேனென்றுசொல்லி இதனை ஆதரிப்பவர்களுடைய மனத்தை வேறுபடுத்த முயன்றவர்களும் சிலர். அவர்களுடைய முயற்சி, இந்தக்கார்யத்தில் அபிமானமுள்ள உபகாரிகளுடையமனத்தை வேறுபடுத்தாவிட்டாலும், அவர்கள் இந்தவிஷயத்தைப்பற்றி என்னைக் கேட்கும்படிசெய்தது. அதற்கு விவரமான ஸமாதானம் இந்த வனபர்வம் முதற்பாகம் முகவுரையில் தெரிவித்திருக்கிறேன்.

இதுமாத்திரமன்றி, தாமேகேட்டுப் புஸ்தகங்களை வாங்கிக்கொண்டு பணங்கொடாமல் என்னையும் என்னுடைய ஏஜண்டுகளையும் பலமுறை அலையவைத்தவர்களும், நன்கொடையளித்தல் முதலிய உபகாரங்களைச்செய்வதாகத் தாமேசொல்லி, பிறகு கேட்டபோது, என்னையும் மஹாபாரதத்தையும் பலபடத் தூஷித்தவர்களுமாகிய சில கனவான்களுமுண்டு. தனித்தனி கையொப்பக்காரர்களல்லாமல், பொதுஸ்தாபனங்களான சில ஜில்லாபோர்டுகளும் தாலூகாபோர்டுகளும் முனிஸிபாலிடிகளும் முழுப்புத்தகமும் வாங்கிக்கொள்ளக் கொடுத்த உத்தரவை மாற்றி இடையிடையே நிறுத்திவிட்டன. மற்றும் பலவகையில் இடையூறுசெய்தவர்களும் உத்தமோத்தமமான இந்தப் பெரியகிரந்தத்தில் அவர்

களின் பெயர்களை வெளியிட விருப்பமில்லாமையால் இங்கே தெரிவிக்கவில்லை. இப்படிச் சிலர் இடையூறு செய்த காலங்களில்,

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர்தீமையும் மேற்கோள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும்கொள்ளார்
கருமமே கண்ணுயினர்'

என்னும் அருமைச் செய்யுளை அடிக்கடி நினைத்து மனத்தைத் தேறுதல் செய்துகொண்டு காரியத்தை விடாமல் செய்துவந்தேன். சிலர் பொறுமை காரணமாகச்செய்த இடையூறுகள் எனக்கு நன்மையாகவே ஆயின. அனுகூலகாலத்தில் நஞ்சும் அமுதமாகுமன்றே? இவ்வளவு அஸைகர்யங்களும் இடையூறுகளும் இருந்தும் இந்தநற்காரியம் நிறைவேறியதனால், ஒருகாரியம் நிறைவேறக்கூடிய நற்காலம் வந்துவிட்டால், கடவுளருளால், எப்படியும் நிறைவேறவே செய்யுமென்பது நன்கு விளங்குகிறது.

இங்கே தெரிவிக்கவேண்டிய மற்றொருவிஷயம் உண்டு. உண்மைகூறுவதில் அச்சமும் லஜ்ஜையும் அடைய வேண்டாவாகையால் அதனையும் இங்கே கூறுகிறேன். வெளி உதவிகள் எவ்வளவிருந்தாலும் மனம் அமைதியாயிராவிடில் ஒரு பெரிய காரியத்தைத் தொடங்கி நிறைவேற்றுவது சிறிதும் இயலாததாம். சிறிதும் கவலையின்றி மனஅமைதியோடு வேலைசெய்யும்படி என்னுடைய மனைவியும் சிரஞ்சீவி குமாரனும் குறிப்பறிந்து நடந்துவருகிறார்கள். அதனாலேயே, நான் இவ்வளவு இடையூறுகளுக்கும் ஸ்ரமங்களுக்குமிடையிலும் குடும்பக் கவலையின்றி இந்தப் பெருங்காரியத்தைச்செய்து நிறைவேற்றுவதற்குச் சக்தியுள்ளவனானேன். என் மனைவி, பெரும்பாலும் பெண்பாலார்க்கு இயற்கையாகச் சொல்லுகிறபடி, விலையுயர்ந்த ஆடையணிகள் வேண்டுமென்றும் எனக்கு ஸ்ரமம் கொடுத்ததில்லை. தன் தந்தையாரால் கிடைத்த நிலத்தின் வரும்படியை இவ்வளவென்று தெரிந்துகொள்ளுதற்கும் விரும்பினதில்லை. அந்த வரும்படியையும் நான் இந்த மஹாபாரதப் பதிப்புக்கே உபயோகமாகும்படி செய்துவருகிறேன். என்னுடைய குமாரன் சிரஞ்சீவி M. R. ராஜகோபாலன், 1921-ஆம் வருஷத் தொடக்கத்திலிருந்து இந்த மஹாபாரதப் பதிப்பில் தான் செய்யக்கூடிய வேலைகளைச் செய்துவருகிறான். அவன் சென்னையில் Messrs லாங்க்மன்ஸ் க்ரீன் கம்பெனியில் ஒரு நல்ல

வேலையிலிருந்தவன்; 1929 ஸெப்டம்பர்மீ நான் மயிலாப்பூரை விட்டு மணலூருக்கு வந்தபோது, என்னுடைய சரீரத்தளர்ச்சியைப் பார்த்து என் ஸமீபத்தில் இருக்கவேண்டுமென்று விரும்பித் தன்னுடைய வேலையை ராஜீநாமா செய்துவிட்டு, என்னோடுகூட வந்துவிட்டான். புஸ்தகப்பதிப்பு ஸம்பந்தமான காரியங்களை எனக்குச் சிறிதும் கவலையில்லாமல் தானே பொறுத்துப் பார்த்துக் கொள்ளுகிறான். நான் இவனுக்குச் செய்திருக்கிற அனுகூலம், இருந்த வேலையை விடச்செய்ததோடு கடன்முதலிய சில அஸௌகரியங்களுக்கும் உள்ளாக்கியிருப்பதே. இந்த இருவரும் நல்ல கார்யத்துக்காகத் தங்கள் ஸௌகர்யங்களை விட்டவர்களாயிருத்தலால், ஸர்வேச்வரன், 'நஹி கல்யாணக்ருத் கஶ்சித் துர்கதிம் தாத கச்ச்தி' என்று தானே சொல்லியதுமல்லாமல், தான் சொல்லியது தவறினாலும் தன் பக்தன் சொன்னதைத் தவறுமல் நிறைவேற்றுவது தன்னுடைய கோட்பாடாதலால், 'வ்ருத்திர்ஜாதீஹி கௌந்தேய நச்யத்யேவ்ருணஸ்ய தி' என்று, மும்மைநெடும்பிறவியினும் பிரியாதுகித் தொண்டு புரிந்துவருகிற பரமபக்தனை அர்ஜுனனைக் கொண்டு உறுதி கூறுவித்துமிருத்தலால், இவர்களுக்கு ஸகல க்ஷேமங்களையும் அளித்துக் காப்பாற்றுவானென்றே நம்புகிறேன்.

இந்த மஹாபாரதமொழிபெயர்ப்பின் வரலாறுமுதலியவை ஆதிபர்வத்தினுடைய முகவுரையிலாவது கடைசிப்பர்வத்தினுடைய முகவுரையிலாவது இருக்கவேண்டும்; ஆனால், ஸஞ்சிகைவரிசையில் இந்த வனபர்வம் கடைசியாக முடிந்தமையாலும், நூல் முற்றுப்பெற்றபிறகே அது நடந்தது முதலிய விவரங்களைத் தெரிவித்தல்கூடுமாதலாலும், இங்கே வைக்கப்பெற்றன.

இப்படி பலவிஷயங்களை இங்கு விவரித்து எழுதியது அநாவசியம் என்று சிலருக்குத் தோன்றலாம். இதுமாத்திரமன்று. மஹாபாரதமும் இந்தமொழிபெயர்ப்புப்பணியுமே அநாவசியமென்று சிலர் சொன்னதுண்டு. அவர்களைக்குறித்து இது எழுதப்பட்டதன்று. அவர்களுக்கு இவற்றின்பெருமை என்னதெரியும்? 'செய்தற்கு அரியதென்றும் முற்றுப்பெறுதென்றும் பலரால் சொல்லப்பட்டதான இப்பெருங்கார்யம் எப்படித்தொடங்கப்பெற்றது; எப்படி நடந்தது; எப்படி முற்றுப்பெற்றது' என்னும் வரலாற்றைத் தெரிந்துகொள்ளுவதில் விருப்பமுடைய அபிமானிகள் சிலர் இருக்கிறார்கள்; தேசம் விசாலமானதால் மற்றும் பலர்

இருப்பார்கள்; காலம் முடிவில்லாததாகையால் இனியும் பலர் உண்டாவார்கள். அவர்களுக்காகவே இது எழுதப்பெற்றது.

பல தக்கோர்கள் இதனை உள்ளபடி நன்குமதிக்கிறார்களென் பதை நானடைந்த ஸ்ரமங்களுக்குப் பரிஹாரமாயிருக்கிறது. பல பெரியோர்கள் எழுதியகடிதங்கள் பலவற்றை அபிப்பிராயபுஸ்தகத்தில் தனியே பதிப்பித்திருக்கிறேன். ஸ்ரீமான், Right Hon'ble V. S. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்கள் P. C. எழுதிய லிகிதம் ஒன்றை மாதிரிக்காக இங்கே தெரிவிக்கிறேன்.

'My Dear Mr. Ramanujacharya,

I am highly honoured by your letter. But, how to answer it is a puzzle.

Your enterprise is great. In the literary world it would be hard to beat. If, being so near completion, it did not actually reach it, the Tamil speaking community would incur great censure. Nor could it escape blame wholly if you found yourself at the end a broken man, dependent on chance for your livelihood. In a world where desert and recompense were justly proportioned, service like yours would be rewarded by an adequate pension and the plaudits of a grateful and admiring public. Your expectations, however, are modest; and I would fain persuade myself they would be fully realised.

Believe me, in genuine appreciation of your courage, piety and self-sacrifice,

Royapetta, Madras,
14—4—29.

Yours very sincerely,
V. S. SRINIVASAN.'

ஸ்ரீமஹாபாரதம் உலகத்தில் மிகப்பெரிதென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதில், நூற்றுக்கணக்கான கிளைக்கதைகள் உள்ளன; தேவர்கள் முனிவர்கள் அரசர்கள் முதலானவர்களுடைய பெயர்கள் ஆயிரக்கணக்காக வந்துள்ளன. ஒரேபெயர் பலருக்கு வழங்குகிறது. ஒருவருடைய சரித்திரம், பல இடத்தில் வந்திருக்கிறது. ஓரிடத்தில் சொல்லியிருப்பதற்கும் மற்றோரிடத்தில் சொல்லியிருப்பதற்கும் சில வேறுபாடுகள்

உள்ளன. இந்தமஹாபாரதமுழுமையும் பலமுறைபடித்தாலும் விஷயங்கள் ஞாபகத்தில்நிற்பது அரிது. இவற்றையெல்லாம் ஒழுங்காக எளிதில் தெரிந்துகொள்ளுவதற்கு அபிதானவிளக்கமும் மற்றும் சிலகுறிப்புக்களும் இருப்பது பெரிதும் உபகாரமாகும். ஆனால், இந்தமஹாபாரதத்தினுடைய அபிதானவிளக்கம் முதலியன வேறு சிலபுஸ்தகங்களில்போலச் சிலநாளில்செய்யக்கூடியவையல்ல. ஒருநூலை மொழிபெயர்ப்பதாயின் சிறிதுசிறிதாக மொழிபெயர்த்துக்கொண்டே வெளியிடலாம். இந்த அபிதான விளக்கம் முதலியவை அகராதிவரிசையில் பதிப்பிக்கப்படவேண்டுமாகையால் முழுதும்செய்து வித்தமாக் வைத்துக்கொண்டுதான் அச்சிடத்தொடங்கவேண்டும். அதற்கு, உ-வருஷம்வரையில் செல்லும். அதற்குத்தக்க பொருளுதவியில்லாமல் அது நிறைவேறுவதன்று. நான் இந்தமஹாபாரதப்பதிப்பை மேற்கொண்டு பலவகை ஸ்ரமங்களை அடைந்ததோடு பொருள் நஷ்டத்தையும் அடைந்துவிட்டமையால், இந்தவேலையை மேற்கொள்ள அசக்தனாக இருக்கிறேன். நமது கவர்ன்மெண்டாரோ ஸர்வகலாசங்கத்தாரோ, அல்லது, தேசாபிமானமும் பாஷாபிமானமும் வாய்ந்த கொடையாளிகளான செல்வவான்களோ அதற்குவேண்டிய பொருளுதவிசெய்து ஆதரிக்க முன்வருவார்களானால் அதேவேலையாக இருந்து விரைவில்செய்து நிறைவேற்ற வித்தனாக இருக்கிறேன். இந்த அபிதானவிளக்கம் முதலியவை மஹாபாரதத்துக்குமாத்திரமல்லாமல், மற்ற இதிஹாஸபுராணங்களைத் தெரிந்துகொள்வதற்கும் மிக உபயோகமானவையென்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். எத்தனையோ மடாதிபதிகளும் சுதேசமன்னர்களும் ஜமீன்தார்களும் பெரிய மிராசுதார்களும் கோடிக்கணக்கான செல்வம் வாய்ந்த வியாபாரிகளும் நிரம்பிய நமது தமிழ் நாட்டிற்கு இது ஒரு பெரிய காரியமன்று. எல்லாம் வல்ல கடவுள் இதனையும் நிறைவேற்றியருளவேண்டும்.

தோன்றுத்துணையா யிருந்து இந்த அரிய பெரிய ஸத் கைங்கர்யத்தை என்னைக்கொண்டு நிறைவேற்றிக்கொண்டதற்காக ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் பலமுறை வணங்குவதோடு, இன்னும் நான் செய்ய எண்ணியிருக்கிற ஸத்கார்யங்களை நடத்தி இனிது நிறைவேற்றியருள வேண்டுமென்றும் பலமுறை பிரார்த்திக்கிறேன்.

வீற்றிருந் தேழுலகும் தனிக்கோல்செல்ல வீவில்சீர்
ஆற்றல்மிக் காளுமம்மானை வெம்மா பிளந்தான் தன்னைப்
போற்றியென்றே கைகளாரத் தொழுது சொல்மாலைகள்
ஏற்றநோற்றேற் கினியென் னகுறை யெழுமையுமே.

என்றும் ஒன்றுகி ஒத்தாருமிக்கார்களும் தன் தனக்கு
இன்றிநின்றானை யெல்லாவுலகும் உடையான் தன்னைக்
குன்றம் ஒன்றால் மழைகாத்தபிரானைச் சொல்மாலைகள்
நன்றுசூட்டும் விதியெய்தினம் என்ன குறைநமக்கே.

என்னெஞ்சத் துள்ளிருந்திங் கிருந்தமிழ்நூ லிவைமொழிந்து
வன்னெஞ்சத் திரணியனை மார்விடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்காப் படைதொட்டான்
நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள்தான் செய்வானே.

பிரியாதாட் செய்யென்று பிறப்பறுத்தா ளறக்கொண்டான்
அரியாகி யிரணியனை யாகங்கீண் டானன்று
பெரியார்க்காட் பட்டக்கால் பெறுதபயன் பெறுமாறு
வரிவாள்வா யரவணைமேல் வாட்டாற்றான் காட்டினனே.

(திருவாய்மொழி)

60, டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்
15—2—1932.

இங்ஙனம்,
மு. வீ. இராமானுஜாசாரியர்.

ஸ்ரீ மஹா பாரதம்

விராடபர்வம்.

தும்பகோணம், கோபாலவிலாஸ் புஸ்தகசாலைத்தலைவர்
மத்வசாஸ்த்ரஸம்பூர்ணர்,
பிரம்மஸ்ரீ அ. வேங்கடேசாசார்யர்
அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

தும்பகோணம் காலேஜ் ரிடையர்ட் தமிழ்ப்பண்டிதர்
ம. வீ. இராமாநுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றது.

நான்காம் பதிப்பு

விலை ரூபா 2—4—0 : கபால்சார்ஜ் ரூபா 0—8—0

PRINTED AT THE KESARI PRINTING WORKS.
G. T. MADRAS.

1933

(All Rights Reserved.)

ஸ்ரீ

விராடபர்வ நான்காம் பதிப்பின் முகவுரை.

இந்த விராடபர்வத்தைப்பற்றித் தெரிவிக்கவேண்டியவற்றை இதன் முதற்பதிப்பு மூன்றும்பதிப்புக்களின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். வனபர்வ இரண்டாம்பாகத்தின் முகவுரையில் ஸ்ரீ மஹாபாரதத் தமிழ்மொழிபெயர்ப்பின் வரலாறுமுழுதும் ஒருவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கே, சில விஷயங்கள் விரிவுஅஞ்சித் தெரிவிக்கப்படவில்லை. இப்பால், அவைகளைத் தெரிவிப்பது அவஸ்யமென்று தோன்றுதலால், அவைகளைமாத்திரம் இங்கே சுருக்கமாகத் தெரிவிக்கிறேன்.

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றிய சில கோள்கைகள்.

வடமொழியில் ஸ்ரீ மஹாபாரதத்திற்குப் பலபதிப்புக்கள் உள்ளன. ஆனால், அவைகளில் ஒன்றுக்கொன்று சில சில இடங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆதலால், ஒருபதிப்பையே பின்பற்றி மொழிபெயர்ப்பது அவஸ்யமாயிற்று. கும்பகோணம் மத்வவிலாஸப் பதிப்புத் தென்தேசப்பாடத்தைத் தழுவியிருத்தலாலும், அதனைப் பின்பற்றி மொழிபெயர்க்கவேண்டுமென்று பல பெரியோர்கள் கூறினமையாலும், நான் அதனையே முதல் நூலாக வைத்துக்கொண்டு அதிலுள்ளபடி நேரே மொழிபெயர்த்திருக்கிறேன். இந்த விவரத்தை ஆதிபர்வமுகவுரையிலும் வனபர்வ இரண்டாம்பாக முகவுரையிலும் தெரிவித்திருக்கிறேன். பொருந்தாத சில அதிகபாடங்களும் பொருள்விளங்காத சில தொடர்களும் கூறியதுகூறலான சிலவாக்கியங்களுமே மொழிபெயர்க்கப்படவில்லை. அப்படிப்பட்ட இடங்களில், பெரும்பாலும், கீழே குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்த மொழிபெயர்ப்பு ஒருமதச்சார்பாக இல்லாமல் எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படி பொதுவாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய முக்யமான கொள்கை. ஒரு மதத்தினருக்கு அனுகூலமாகவோ பிரதிகூலமாகவோ முதல்நூலிலுள்ளதை மாற்று

வதோ விலக்குவதோ இல்லாததைச்சேர்ப்பதோ செய்வதில்லை என்பதும் என்னுடைய விரதம்.

மஹாபாரத மொழிபெயர்ப்பு யாவரும் படித்துத் தெரிந்து கொள்ளும்படி எளியநடையில் இருக்கவேண்டுமென்பதும் என்னுடைய கொள்கை. ஆதலால், யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய சொற்களையன்றிக் கடினமான சொற்களை உபயோகிப்பதேயில்லை; கடினஸந்திகளையும் உபயோகிப்பதில்லை. சாஸ்திர சம்பந்தமான பரிபாஷைகளைத் தமிழில் மொழிபெயர்த்தால் ஸாதாரண ஜனங்களுக்கு அதிக கடினமாகுமேயன்றி எளிதில் பொருள் விளங்காதாகையால், அவைகளை வடசொற்களாகவே உபயோகித்திருப்பதோடு, உச்சரிப்பும் வடமொழிக்கு ஒத்தே இருக்கும்படி எழுதியிருக்கிறேன்.

ஆதிபர்வ முகவுரையில், 'பாஷையைக்காட்டிலும் விஷயத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டுமென்று அறிஞர் பலரும் அடிக்கடி வற்புறுத்தினமையால் அந்த முறைப்படி ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள கருத்துக்களை அமைக்கும்வகையில் தமிழ்நடை சில இடங்களில் சிறிது மாறியிருத்தல்கூடும். மொழிபெயர்ப்பு மூலத்திலுள்ளபடியே இருக்கவேண்டுமென்பதே முழுநோக்கமாதலால், தமிழ்நடை தன் ஸ்வதந்திரநடையைச் சிறிது விட்டிருக்கவேண்டிவருகிறது. எந்தமொழிபெயர்ப்பும் மூலத்தின்விஷயங்களை விளங்கச்செய்யமாத்திரம் முடியுமேயல்லாது பாஷையின்நடையோடு இயற்கையில் அமைந்த ரஸபாவங்களை முழுதும் வெளியிடக்கூடாதென்பது ஒரு பாஷையிலிருந்து மற்றொருபாஷையில் விஷயங்களை மாற்றிக்கொண்டுவர முயற்சிசெய்கிற யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. ஆதலால், மொழிபெயர்ப்பாக இருக்கும் அளவில் இருக்கவேண்டிய குணங்களைமட்டும் பார்த்துக் குற்றங்களை கூமிக்கும்படி விவேகிகளை ப்ரார்த்திக்கிறேன்' என்று எழுதியிருக்கிறேன். அதனையும் இங்கே தெரிவிக்கிறேன்.

ஒரு பண்டிதர் மொழிபெயர்த்ததை வேறு இரண்டு பண்டிதர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதும் அவர்களுக்கு ஏதாவது ஆக்ஷேபமிருந்தால் அந்த இடத்தை முதலில் மொழிபெயர்த்தவர்களுக்கு அனுப்புவதும் வழக்கம். மொழிபெயர்த்தவர்களுக்கும் அந்த ஆக்ஷேபம் 'சரி' என்று தோன்றினால், அவர்கள் அந்தப்படி திருத்துவார்கள். அல்லது, தாம் பொருள் செய்ததே சரி என்று தோன்றினால், அதற்கு ஆதாரம் சொல்லுவார்கள். அந்த முறை

யில் சில இடங்களில் ஸந்தேகம்கேட்டு அனுப்பியபோது, அவர்கள் முதலில் மொழிபெயர்த்ததைத் திருத்தியும் முழுதும் மாற்றியும் எழுதி அனுப்பியிருக்கிறார்கள்; முன்எழுதிய காகிதங்களில் திருத்தச் சாத்தியப்படாத இடங்களில் வேறு புதிதாக எழுதி முன்காகிதங்களில் ஒட்டி அனுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காகிதங்களில் சில ஜாக்ரதையாக வைக்கப்பட்டுள்ளன. வேண்டுவோர் அவைகளை என்னிடம் பார்க்கலாம்.

தமிழ்மொழிபெயர்ப்பைப்பற்றிய சில ஸமாதானங்கள்.

பீஷ்மபர்வத்தில் பகவத்கீதாபர்வம் வெளிவரத்தொடங்கியவுடன், திருவண்ணாமலையிலிருந்து, ஒரு பெரியவர், மொழிபெயர்ப்பு தமது கொள்கைப்படி இல்லாமைபற்றிக் குறைகூறி எழுதியிருந்தார்கள். அவர்களுக்கு நேரே ஸமாதானம் எழுதியதுடன், பீஷ்மபர்வ முகவுரையில், 'கீதையின் மொழிபெயர்ப்பு, மஹாபாரதத்தின் மற்றப் பகுதிகளைப்போலவே, ஒருமதச் சார்பாக இராமல் பொதுவாக இருக்கவேண்டுமென்பதே எனது விருப்பம். ஆயினும், வேதாந்த பாகங்கள் வரும்பொழுது, அங்ஙனம் செய்தல் ஸாத்யப்படவில்லை. மொழிபெயர்ப்பவர்கள் எந்தமதத்தைச் சார்ந்தவர்களோ அந்தமதத்தின் சார்பாகத்தான் மொழிபெயர்ப்பு அமைகிறது. இதனைப் பகவத்கீதையில் மாத்திரமே அன்றி, மற்றப்பருவங்களிலும் வேதாந்தப்பகுதிகள் வருமிடம்தோறும் காணலாம். இந்தமாதிரியான இடங்களில் தங்கள் மதக்கொள்கைக்கு முரணுயிருப்பதாக நினைப்பவர்கள் தங்கள் தங்கள் சமயநூல்களில் வல்ல பண்டிதர்களிடம் கேட்டுத் தெளிந்துகொள்க' என்று எழுதியுமிருந்தேன். அந்தப்பெரியார் உண்மையை அறிந்து ஸமாதானம் அடைந்தார்கள்.

இப்பால், சாந்திபர்வ மோக்ஷதர்மத்தில் சில சுலோகங்களுக்கு நன்கு பொருள்விளக்கப்படவில்லை என்று சிலர் குறைகூறுவதாகக் கேட்டேன். மஹாபாரதம் முழுவதிலுமே எளிதிற் பொருள்விளங்காத கடினசுலோகங்கள் பல உண்டென்பது பிரஸித்தமானது. அதிலும், மோக்ஷதர்மத்தில் கடினமான சுலோகங்கள் மிகஅதிகம் என்பதைப் பண்டிதர்கள் நன்கு அறிவார்கள். மோக்ஷதர்ம மொழிபெயர்ப்புவிஷயமாகப் பெரியோர் பலர் அடைந்த கவலையையும், நான் அடைந்த சிரமத்தையும், அதுபூர்த்தியானதில் அடைந்த ஸந்தோஷத்தையும் சாந்திபர்வ

இரண்டாம்பாக முகவுரையில் விவரமாகத் தெரிவித்திருக்கிறேன். சுலோகத்திலுள்ள சொற்களைக்கொண்டு பொருள் தெரிந்து கொள்ளக்கூடாமல் வியாக்யானத்தைக் கொண்டே பொருள் நிச்சயிக்கக்கூடிய இடங்கள் பல உண்டு. சில சுலோகங்களிலுள்ள சொற்களுக்கு நேரே வியாக்யானம் இராது. அந்தமாதிரி இடங்களில் சுலோகத்திலுள்ள சொற்களுக்குப் பொருத்தமாகப் பொருள் செய்வதற்கு நாங்கள் பட்ட சிரமம் எல்லையில்லாதது. பண்டிதர்கள் மொழிபெயர்த்து எழுதியனுப்பிய கையெழுத்துப் பிரதியை ஒப்புநோக்கித் திருத்தும்போது, தக்க பண்டிதர்கள் சிலரும் நானும் ஒருநாள் முழுதும் மிகச் சிரமப்பட்டுப் பார்த்தும் கையெழுத்துப் பிரதியில் ஒருபக்கங்கூட லித்தம் செய்யமுடியாமல் போனதுண்டு. வியாக்யானத்தைத் தழுவியே மொழிபெயர்த்துவிடலாமென்றால் அது ஒருசார்பு பற்றியதாக இருத்தலால் சில இடங்களில் அதனை முழுதும் பின்பற்றக் கூடவில்லை. அந்தமாதிரி இடங்களில் சுலோகத்துக்குப் பொருள் விளங்காமையாலும், வியாக்கியானம் வேறுவிதமாகப் பொருள் படுதலாலும், நமது மொழிபெயர்ப்பு வியாக்யானத்திற்கு முழுதும் ஒத்தில்லாமையாலும், 'மொழிபெயர்ப்பு விளக்கமாயில்லை' என்று குறைகூறுவோர் கருதினர்கள்போலும். வியாக்யானத்தில் ஒரு சார்புபற்றிச் செய்திருக்கிற இடங்களில் அதனைப் பின்பற்றி மொழிபெயர்க்கவில்லை என்றும் மூலத்திலுள்ளபடி இயன்றவரை நமது மொழிபெயர்ப்பு நேரே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதென்றும்அவர்களுக்கு இங்கே வணக்கமாகத் தெரிவிக்கிறேன்.

சாந்திபர்வத்தை மொழிபெயர்த்து உதவிய மஹா மஹோபாத்யாய வேதாந்தகேஸரி பைங்காநாடு கணபதிசாஸ்திரிகளவர்கள் எழுதிய ஒருலிகிதத்தை இங்கே வெளியிடுகிறேன். அது வருமாறு :—

'கள்ளிக்கோட்டை, 12-10-1910.

நமஸ்காரம். க்ஷேமம்.

ஆபத்தர்மப் பிரகரணம் பூர்த்தியாகி அனுப்பியது வந்திருக்கலாம். விஜயதசமிமுதல் மோக்ஷதர்மம் எழுதத் தொடங்குகிறேன். ஆனால், மோக்ஷதர்மம் கடினமானபாகமாகையால், கொஞ்சம் மெதுவாகவே எழுதவேண்டியதாயிருக்கும். அன்றியும், இதில் மூலத்துக்கும் வியாக்யானத்துக்கும் ரொம்ப வேற்றுமை தோன்றுகிறது. வியாக்யாதா

மிகவும் பிரயாஸப்பட்டு ஒவ்வொரு சுலோகத்தையும் அத்வைதத்துக்கு [1] இழுக்கிறார். அதேவிதம் நான் எழுதுவேனுகில் உலகம் என்னை ஸ்வமத பக்ஷபாதி என்று சொல்லக் கூடும். மூலத்திற்கு உசிதமாய் வெளியாவதும் மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமில்லாததுமாகவே எழுதவேண்டுமென்பது என் கருத்து இவ்விதம் எழுதினால் பல இடங்களில் வியாக்யானம் ஒத்திராது. வியாக்யானத்தையும் பழைய உரை என்று வேறு எழுதினால் வேலை இரட்டிக்கும். இவ்விஷயத்திற்கு என்ன செய்யலாம்? எழுதத்தொடங்குவதற்கு முன்னமேயே தங்கள் அபிப்ராயம் தெரியவேண்டும். அல்லாமலும், மோக்ஷதர்மம் அச்சிடும்போது இந்தப் பத்திரிகையிலுள்ள என் கருத்தையும் வேண்டுமானால் வெளியிடலாம். எல்லாவிஷயத்திற்கும் பதில் எதிர்பார்க்கிறேன்.

நமஸ்காரம்.

தங்கள், ப. கணபதி சாஸ்திரீ.'

அருங்கலை விஞ்ஞதர்களும் பரம ஆஸ்திகர்களும் ஸத்தர்ம பரிபாலகர்களும் ஸதாசார ஸம்பன்னர்களும் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பை மிக ஆதரிப்பவர்களும் எனக்குப் பரம ஆப்தர்களுமான ப்ரம்மஸ்ரீ Prof. K. சுந்தரராம ஐயர் M. A., அவர்கள், "ஸ்ரீமான் கணபதி சாஸ்திரிகளவர்கள், 'நீலகண்டர் அவஸ்யமில்லாத பல இடங்களில் வலிந்து பொருள் செய்திருக்கிறார். இந்த மொழிபெயர்ப்பில் அந்த முறையைப் பின்பற்றவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று என்னிடத்தும் மற்றும் பல ஆப்தர்களிடத்தும் பலமுறை கூறியிருக்கிறார்கள். ஆதிபர்வம் ஸபாபர்வம் அநுசாஸனபர்வமாகிய மூன்று பர்வங்களை மொழிபெயர்த்துதவியவர்களான ஸ்ரீ. உ. சதாவதானம், தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களும், இதே அபிப்ராயம் சொன்னதாகவும் அவர்களே பலமுறை சொல்லியிருக்கிறார்கள்.

மோக்ஷதர்ம மொழிபெயர்ப்பு விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு மாறுபடாமலிருக்கிறதா என்று ஒப்பிட்டுப் பார்க்கும்படி சில ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்களிடம் நான் கேட்டுக்கொண்டபோது, அவர்கள் பார்த்து, இந்த மொழிபெயர்ப்பில் அங்கங்கே வேறுபாடுகளைக் குறிப்பது போதாதென்றும் தனியாகவே மொழிபெயர்க்க வேண்டும் என்றும் சொன்னார்கள். இவற்றால்,

[1] இதன் 28-வது பக்கம் குறிப்பைப் பார்க்க.

பொதுவாக மஹாபாரதமொழிபெயர்ப்புவிஷயத்திலும் சிறப்பாக மோக்ஷதர்ம மொழிபெயர்ப்பு விஷயத்திலும், எங்களுக்கிருந்தசிர மமும் பிறருக்கிருந்த கருத்துவேறுபாடுகளும் நன்கு விளங்கும்.

சாந்திபர்வத்தை மொழிபெயர்த்துஉதவியவர்கள், ப்ரம்மஸ்ரீ வேதாந்தகேஸரி மஹாமஹோபாத்யாய பைங்காநாடு கணபதி சாஸ்திரிகளவர்களும், ப்ரம்மஸ்ரீ வேதாந்தவிபூஷணம் மஹோப தேசகர் சாஸ்திரரத்நாகரம் மஹாமஹோபாத்யாய கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகளவர்களுமே ஆவார்கள். பொதுவாக ஸம்ஸ் கிருதபாஷையிலும் சிறப்பாக வேதாந்தசாஸ்திரத்திலும் இந்த இரண்டு பெரியார்களும் வித்வான்களுடையகூட்டத்தில் எவ்வளவு நன்குமதிக்கப்பட்டவர்களென்பது உலகம் அறியும். அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டதே விளக்கமாக அமையவில்லையாஞல், விஷயம் எளிதில் பொருள்விளங்காத கடினத்தன்மையுடைய தென்று கருதி ஸமாதானம் அடையவேண்டும்.

சாந்திபர்வத்தில் மோக்ஷதர்மத்தைமாத்திரமாவது மூன்று மதங்களிலும் அந்தஅந்தமதநூல்களில் மிக்க பாண்டித்திய முள்ள தக்கவித்வான்களைக்கொண்டு சோதித்து அச்சிட்டு வெளி யிடவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். ஸ்ரீமஹாபாரதம் பொதுவான நூலாதலாலும் மோக்ஷதர்மம் மூன்றுமத வேதாந்த பாஷ்யங்களுக்கும் முக்யஆதாரமாயிருத்தலாலும் அது நன்குதிரு த்தமடைந்துவெளிவருவது இந்துக்களான யாவருக்கும் நன்மை யானது. இது மிக்கபொருட்செலவினாலும் பலநாள் உழைப்பினு லும் நிறைவேறக்கூடிய காரியம். தேசாபிமானமும் மதாபி மானமுமுடைய செல்வவான்கள் மனமுவந்து உதவிபுரிய முன் வருவார்களாஞல் அதுஸம்பந்தமாக நான் செய்யக்கூடிய கைங்கர் யத்தைச்செய்ய விரும்புகிறேன். அல்லது, அவர்களே தக்க பண்டிதர்களைவைத்துக்கொண்டுபார்த்துத் திருத்திக்கொடுத்தால், ஆக்ஷேபமில்லாமல் பொதுவாகவுள்ளவற்றை நூலிலும், ஒரு கொள்கை பற்றியவற்றைக் கீழே குறிப்பிலும் சேர்த்துப்பதிப் பிப்பேன். குறைகூறுவோர் இந்தவிஷயத்தை மனத்திற்கொண்டு உண்மையாக முயற்சிசெய்ய வேண்டுகிறேன்.

மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிடத் தொடங்கியது முதல் அதைப்பற்றிப் பாராட்டிப் புகழ்ந்து எழுதியிருப்பவர் களின்கடிதங்கள் எண்ணிலடங்கா. ஸாதாரணமாக ஸமாசாரங்

கள்எழுதுகிற கடிதங்களிலும், மொழிபெயர்ப்பின் பெருமையையும் இது தமிழுலகத்துக்குப் பெரும்பயன் அளித்தலையும் இதனை வெளியிடுவதிலுள்ள சிரமத்தையும்பற்றிப் பாராட்டி எழுதப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் அச்சிட்டு வெளியிடுவதானால் மஹாபாரத புஸ்தகத்தின் அளவுக்குக் குறையாது. நேரே ஸந்திக்கும்போதும் நான் இல்லாத பல ஸமயங்களிலும் சொல்லுகிற புகழ்மொழிகளுக்கும் அளவே இல்லை. 'மனித முயற்சியில் செய்து முடிக்கக்கூடிய செய்கையன்று' என்று பாராட்டிக்கூறுபவர்கள் பலர். இந்த மொழிபெயர்ப்பின் உதவியைக்கொண்டே தாங்கள் மஹாபாரத ப்ரஸங்கம் செய்துவருவதாகச் சில தக்கபண்டிதர்கள் எழுதியதுமுண்டு. இவற்றையெல்லாம் நானே தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் வெட்கம் அடைகிறேன். இந்த அளவு தெரிவித்துக்கொள்ளும்படி நேர்ந்ததற்குக்கூட மிக வருந்துகிறேன்.

காரணமில்லாமல் அங்கங்கே குறைகூறிக்கொண்டிருப்பவர்களும் சிலர் உண்டு. இவர்கள் சொல்வனவற்றை அங்கங்கே கேட்பவர்கள் நேரில் தெரிந்துகொண்டிருக்கக்கூடும். தங்களுக்கு உண்டான ஸந்தேகமுதலிய காரணங்களால் குறைகூறி எழுதப்பட்ட கடிதங்களும் பல. அவைகளையெல்லாம் முழுதும் தெரிவிப்பது ஸாத்யமில்லை. ஆகையால், மாதிரிக்காக ஒன்றைமாத்திரம் இங்கே தெரிவிக்கிறேன். அது வருமாறு:—

'மகா-ரா-ரா-ஸ்ரீ, வேத மூர்த்திகளாகிய ஸ்ரீமத். உ. வே. ம. வீ. இராமாநுஜாசாரியர்அவர்கள் உபயசரணரவிந்தங்களுக்கு மேலக்குமாரமங்கலம் ர.சு. ரங்கஸாமி ஐயர், மேட்டுப்பாளையம் முத்துரெட்டியார் ஆகிய நாங்கள் இருவரும் அனேககோடிஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துப் பக்திபுரஸ்ஸரத்துடன் தெரிவித்துக்கொண்ட விஞ்ஞாபனம்.

உபயகுசலோபரி.

நாங்களிருவரும் தங்களிடமிருந்து ஆதிபர்வம் பீஷ்மபர்வம் துரோணபர்வம் கர்ணபர்வம் இந்த நான்குபர்வங்களையும் வருவித்து அவைகளிலுள்ள பகவானை நாராயணனுடைய பரத்வத்தைப்பார்த்து மிகுந்த ஆனந்தம் அடைந்தோம். கொஞ்சநாளைக்குமுன், ரெட்டியார் விராடபர்வத்துக்கு எழுதி அச்சமயம் கையிருப்பில் இல்லையென்று தாங்

கள் எழுதியதும் தேவரீர் திருவுள்ளத்திற்கு ஞாபகம் இருக்கும். தவிர, நாங்கள் சாந்திபர்வ அநுசாஸனபர்வங்களையும் மற்றவைகளையும் வருவிக்க உத்தேசித்து, கணிசப்பாக்கம் ஸம்பத்ஸ்வாமிகளிடமிருந்து அநுசாஸன பர்வத்தின் முதல் ஸஞ்சிகையை வாங்கிப் பார்த்ததில், 45 முதல் 50 வரையிலுள்ள அத்யாயங்களில் முன்பின்னுள்ள ஸமஸ்தமான விஷ்ணு பரத்வத்துக்கு நேர்விரோதமாகச் சிவபரத்வமானது விஷ்ணுஸர்வோத்கிருஷ்ட கண்டனமாகக் கிருஷ்ணன் தவம்செய்தார் என்றும் சிவனிடம் புத்ரவரம் பெற்றார் என்றும் உபமன்யுவிடம் உபதேசம் பெற்றார் என்றும் விஷ்ணு சிவனிடம் உற்பவித்தார் என்றும் லிங்கபூஜையாலேயே விஷ்ணு லோகாதிபதி ஆனரென்றும், பிரம்மலோகத்தில் தண்டியால் செய்யப்பட்ட சிவஸஹஸ்ர நாமாதிகளும் அதிவிரிவாக இன்னபடியென்று வாய்விட்டுச் சொல்வதற்கில்லாது மிகுந்த துவேஷத்தைத் தன்னுள் அடக்கியதாக விளங்குகிறது. மொழிபெயர்த்தவரும் அச்சிட்டவர்களுமாகிய ஸ்ரீநிவாஸாசாரியரும் தேவரீரும் ஸம்பிரதாயக்கடல் கடந்த பண்டிதர்களான ஸ்ரீவைஷ்ணவர்களாயிருந்தும் மேற்கண்டவிஷயமான உபமன்யு உபாக்யானத்திற்குத் தகுந்த ஸமாதானமில்லாமல் இருக்கின்றதை யோசிக்குங்கால் எங்கள் மனம் மிகுந்த துயரம் அடைகிறது. உபமன்யு உபாக்யானத்தைச் சிலவித்வான்கள் பிரக்ஷிப்தம் என்று சொல்லிக்கொண்டிருக்க, தாங்கள் அதை அவ்விதம் என்று அறிந்திருந்தும் இப்படி அச்சிட்டதை நோக்குங்கால் எங்களுக்கு விபரீதமாகத் தோன்றுகிறது. அது உண்மையாகில் அந்தப் பர்வத்திலுள்ள விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப்போல சிவஸஹஸ்ரநாமத்துக்குத் திரிமதாசாரியர்களும் ஏன் பாஷ்யம் செய்யவில்லை? ஆரண்யபர்வத்திலுள்ள சிவவிஷயமும் த்ரோணபர்வத்திலுள்ள அஸ்வத்தாமா விஷயமான சிவபரத்வமும் வருவது ஸகஜமே. அவைகளைப்போலில்லாமல் இது விஷ்ணுகண்டனமாயிருப்பது மிக வருந்தற்பாலது. பர்வங்கள்தோறும் சிவனைப் பிரம்மாவின் புத்ரனென்று ஸ்தாபித்திருக்க, இவ்விடம் மட்டும் கண்டனமானதற்குக் காரணம் என்ன? இவைகளை நோக்குங்கால் ஆழ்வாராசாரியர்களான மஹான்களுக்கும் அன்னவர்கள் நூல்களுக்கும்

நேர் விரோதமானதாய் விளங்குகிறது. மேற்கண்ட சரித்திரம் உண்மையிலேயே வியாஸரால் பாரதத்தில் எழுதப்பட்டதா? தங்கள் மொழிபெயர்ப்புக்கு மூலக்கிரந்தமான T. R. கிருஷ்ணசாரியர்பதிப்பும் அவர் கருத்தும் இதை ஏற்றுக்கொள்ளுமா? சதாவதானம் ஸ்ரீநிவாஸாசாரியருக்கும் தங்களுக்கும் இது நிஜமென்று நம்பிக்கையுண்டா? இதற்கு நாளதுவரையிலும் பாரதத்தில் கற்பனை என்பதற்கு ஆதாரமில்லையா? அல்லது, அவ்விதம் கண்டித்து எழுதினால் தற்காலத்திய ஜனங்கள் புஸ்தகம் வாங்கமாட்டார்கள் என்று பேசாது விட்டுவிட்டீர்களா? இது யாது காரணமோ அதைத் தேவரீரே எங்களுக்கு எழுதி ஸம்சயநிவிருத்தி செய்தால் மிகுந்த நன்றியுள்ளவர்களாக இருப்போம். ஆதிபர்வத்திலுள்ள பராசர ஸத்யவதீ விவாஹம் என்பதைத் தகுந்த காரணத்துடன் கண்டித்த பண்டிட் ஸ்ரீநிவாஸாசாரியர் என்ன காரணம் பற்றி இதைக் கண்டிக்கவில்லை? வேதப்ரதிபாத்யமான சக்ரமானது சிவனிடமிருந்து விஷ்ணு அடைந்தார் என்பதைப் பார்க்குங்கால் தப்தசக்ராங்கனத்திற்குக்கூடவன்றோ பழுது வந்துவிட்டது. 'நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்—தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்' என்பதற்குக்கூடப் பங்கம் வந்துவிட்டதே. இப்படிச் சொல்லத்தரமில்லாமல் ஸர்வவிதத்திலும் விஷ்ணுபரத்வ கண்டனமான இந்த இதிஹாஸம் விஷ்ணுபரமான பாரதகதையில் எதற்காக விளங்குகிறது? மேற்கண்ட இந்த விஷயங்களுக்கெல்லாம் தேவரீர் கோபித்துப் பராமுகமாயிராது உங்கள் குழந்தைகள் என்று நினைத்து உடனே பதில் எழுதவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். பாரதம் ஆதிபர்வத்தின் ஆதியில், ஸௌதியானவர், 'அந்த நாராயணன்கதையைச் சொல்லுகிறேன்' என்றும், வில்லிபுத்தூராரும், 'மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்' என்றும் ஒரே வாக்காகச் சொல்லியிருக்க, அப்படிப்பட்ட வைஷ்ணவ கிரந்தத்துக்கு விரோதம் வந்தது வியக்கத்தக்கது. இதில் சொற்குற்றம் முதலிய இருந்தாலும் கோபிக்க வேண்டாம்.

இப்படி, தங்கள்

முத்து ரேட்டியார்.'

அவர்களுக்கு நான் எழுதிய பதில் வருமாறு :—

‘மணலூர், 16—12—1923.

அன்புள்ள ஐயா,

தாங்கள் அன்புடன் எழுதிய நீண்ட லிகிதம் வரப்பெற்றேன். ஸ்ரீ மஹாபாரதம் வேதத்தோடொத்தது. வேதத்தில் ருத்ரபாரம்யம் சொல்லிய இடங்கள் பல உண்டு. பதினெண் புராணங்களில் சிவபரத்வம் சொல்லுகிற புராணங்களே அதிகமானவை. அவைகளுக்கெல்லாம் ஸ்ருதிஸ்மிருதி இதிஹாஸ புராணங்களின் பிராமாண்யதாரதம்மியத்தைக் கொண்டும் புராணங்களில் ஸாத்விக ராஜஸ தாமஸப் பாகுபாட்டைக்கொண்டும், கேள்வி உத்தரங்களின் நயத்தைக் கொண்டும், முன்பின் அமைந்துள்ள சப்தங்களின் ஸ்வாரஸ்யங்களைக்கொண்டும் அர்த்தம் செய்து, பெரியோர்கள் ஒற்றுமைப்படுத்துகிறார்கள். பாரதத்திலும் அப்படியே செய்துகொள்ள வேண்டும். இந்த விஷயங்களைக் கடிதமூலமாக எழுதுவது ஸாத்யமுமில்லை ; எனக்கு அவகாசமுமில்லை.

உபமன்யு உபாக்யானம் ப்ரக்ஷிப்தம் என்பது நம்மவர்களுடைய கொள்கையே. இது வெளிப்படை. ஆனாலும், இது புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டதன்று. நமது பூர்வாசாரியர்சாலத்திற்கு முற்பட்டதே. ஸ்ரீராமாயணத்தில் ஆதித்ய ஹிருதயமும் அப்படியே ப்ரக்ஷிப்தம் என்றுதான் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஸம்ஸ்கிருத புஸ்தகங்களில் இவைகள் சேர்த்தே அச்சிடப்பட்டிருக்கின்றன. நானும் எனக்காக மஹாபாரதத்தை மொழிபெயர்த்துக் கொடுக்க முன்வந்துள்ள வித்வான்களும் ஒரு பதிப்பை மூலமாக வைத்துக்கொண்டு அந்தப் பதிப்பிலுள்ளபடியே மொழிபெயர்த்து வெளியிட நிச்சயித்துக்கொண்டோம். அந்தப் பதிப்பிலுள்ளது விடுபட்டிருந்தாலும் இல்லாதது சேர்ந்திருந்தாலும் நாங்கள் உத்தரவாதியாவோம். மூலத்திலுள்ளதை மொழிபெயர்ப்பதே நாங்கள் இப்பொழுது மேற்கொண்டது. மதஸ்தாபனம் செய்வதன்று. லோகோபகாரமும் சிரமஸாத்யமுமான இந்தக் கைங்கர்யத்தை மேற்கொண்டு பல வருஷங்களாயினமையால் இதனை விரைவில் பூர்த்திசெய்ய வேண்டுமென்பதே என்மனத்தில் ஊன்றி

நிற்கிறது. வேறு ஒன்றிலும் என்மனம் செல்லவில்லை. ஆதலால், தாங்கள், தயைசெய்து, இனி இந்தமாதிரி விஷயங்களை எனக்கு எழுதாமலிருக்க வேண்டுகிறேன். திருவயிந்திரபுரம் முதலான திவ்யதேசங்களில் மஹாவித்வான்கள் பலர் இருக்கிறார்கள். தங்களுக்கு உண்டாகும் ஸந்தேகங்களை அவர்களிடம் கேட்டுத் தெளிந்துகொள்ள விரும்புகிறேன்.

இங்ஙனம்,

அன்பன், ம. வீ. இராமானுஜன்.'

இவற்றால், ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிடத் தொடங்கியதனால், மூலத்திற்கு அர்த்தத்தை நிச்சயித்து மொழி பெயர்ப்பைத் திருத்தலிலும் காரிய நிர்வாஹத்தினுண்டான பொருள்முட்டுப்பாட்டிலும் மற்றும் பலவகையிலும் அடைந்த பலவகைத் துன்பங்கள் தவிர, நான் எத்தனைபேருக்கு எத்தனை விதமாகச் சமாதானம் சொல்லவேண்டியவனாக இருந்தேனென்பதையும், அதனால் என்மனம் எவ்வளவு கவலையும் துன்பமும் அடைந்திருக்குமென்பதையும் அறிவுடையோர் நன்கு ஊகிக்க வேண்டும். இவ்வளவு சிரமத்தைக்கொடுத்தபிறகாவது இந்த அரியபெரிய நற்காரியத்தை நிறைவேற்றியருளியதற்காக எல்லாம் வல்ல ஸர்வேச்வரனுடைய அவ்யாஜமான பெருங்கருணைத்திறத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்; அவனுடைய திருவடித்தாமரைகளை எப்பொழுதும் சிந்தித்து வந்திக்கின்றேன்.

மஹாபாரத ஸம்பந்தமாகச் சில ஸமாதானங்கள்.

மஹாபாரதத்தைபற்றிச் சிலர் விஷயத்தைஆராயாமல் குறைகூறுவர். அவர்கள், (1) மஹாபாரதத்தைப் படிக்கலாகாதென்றும், (2) படித்தால் கலகம் உண்டாகுமென்றும் (3) வீட்டில் படிக்கலாகாதென்றும், (4) முதலிலிருந்து முறையே தொடர்ச்சியாகப் படிக்கலாகாதென்றும் ஆதாரமில்லாமல் வாய்க்குவந்தவாறு கூறி மஹாபாதகத்திற்குக் காரணமாவர்.

(1) ஸ்ரீ வேதவியாஸ பகவானே ஹிந்துக்களாகிய நமக்கு ஸகலஞானத்தையும் அளித்தவர்; வேதத்தை வகுத்தவர்; பதினெண்புராணங்களையும் தொகுத்தவர்; திருமால் திருப்பாற்கடல் கடைந்து அம்ருதம் எடுத்து உதவியதுபோல வேதமாகிய கடல் கடைந்து பிரம்மஸூத்ரமாகிய அமிருதத்தை எடுத்துக்கொடுத்

துப் பேருதவிபுரிந்தவர். பரமரிஷிகளும் புராணங்களும் அவரை ஸாக்ஷாத் பகவானே என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். அவரே மஹாபாரதத்தையும் இயற்றியவர். மற்றவைகளையெல்லாம் செய்ததைக்காட்டிலும் மஹாபாரதத்தைச் செய்ததற்காகவே, அவரை, 'க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும் | கோஹ்யந்யோ ஹுவி மைத்ரேய மஹாபாரத க்ருஹ்ணவேத்| = ஓ! மைத்ரேயரே! கிருஷ்ணத்வைபாயனரான வியாஸரை ப்ரபுவான நாராயணரென்றே தெரிந்துகொள்ளும்: ஏனெனில், நாராயணரைத்தவிர இவ்வுலகில் வேறுயாவர் ஸ்ரீமஹாபாரதத்தைச் செய்யவல்லவராவார்?' என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். பத்துப் புராணங்களுக்கு அதிகமானவை வியாஸரையும் மஹாபாரதத்தையும் பாராட்டிப் புகழ்கின்றன. இன்றியமையாத தந்தை தாயார்களுக்கும் பித்ருக்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளையும் செய்யவேண்டாத ஸந்யாஸிகளும் வியாஸரைப் பூஜை செய்கிறார்களென்றால் அவர் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா? சாஸ்திரங்களை நம்புகிறவர்களெல்லாரும் அவர் சொல்லுவனவற்றையெல்லாம் நம்பவேவேண்டும். அவர், மஹாபாரதத்தின் பெருமையையும் அதனை ஒவ்வொரு வீட்டிலும் படிக்கவேண்டுமென்பதையும் அதனைப்படித்தலாலும் கேட்டலாலும் உண்டாகும் பல நன்மைகளையும் மஹாபாரதத்தின் முதலிலும் கடையிலும் விஸ்தாரமாகக் கூறியிருப்பதோடு, ஒவ்வொரு பர்வத்தின் முடிவிலும் பலபல உபாக்யானங்களின் முடிவிலும் அதை அதைப் படித்தல் கேட்டல்களினாலுண்டாகும் பயன்களையும் அங்கங்கே சிறப்பாகக் கூறியிருக்கிறார். இவற்றிற்கு ஆதாரம் மஹாபாரதத்தில் தொட்ட தொட்ட இடந்தோறும் காணலாம். அவர் சொல்லியிருப்பவை எல்லாம் நம்மை மோசம்செய்து நம்மிடமிருந்து ஒன்றைப் பெறுதற்காக அன்று. நாம் ஞானத்தை அடைந்து கடைத்தேற வேண்டுமென்னும் பெருங்கருணையினாலேயே. 'மஹாபாரதத்தைப் படிக்கவேண்டுமென்று ஸர்வஜ்ஞரும் பகவானுடைய அவதாரமென்று சொல்லப்படுகிறவருமான ஸ்ரீவியாஸர் சொல்லியதை நம்புவதா, யாரோ சிலர் சொல்லுவதை நம்புவதா' என்று அறிவுடையோர் ஊகிக்கவேண்டும்.

மஹாபாரதம் பலஅரியவிஷயங்கள் அடங்கியதாததலாலும், தர்மார்த்தகாமமோக்ஷம் என்னும் நான்குபுருஷார்த்தங்களையும் நன்குதெரிவிப்பதாகையாலும் ஐந்தாம்வேதமென்று எல்லா

ராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருத்தலாலும் படித்தல்கேட்டல் களால் மஹாபாதகங்களையும் போக்கவல்லதென்று பல மஹரிஷி களாலும் பலபுராணங்களாலும் பெரிதும் புகழப்படுதலாலும், 'ஶ்ரூஷதாம் ஶ்ருணுத விஷ்ணோ: ஸதாம் ஹ்ருதயே யதே' என்கிறபடியே பகவத்சரித்திரங்களே முழுதும் நிரம்பியிருத்தலாலும் இதனை ஸகல ஜனங்களும் கேட்கவேண்டுமென்பதற்காக நமது தேசத்துப் பண்டைக்கால அரசர்கள் இதனைப்படித்துப் பிரசங்கிப்பவர் களுக்கு மானியங்கள் கொடுத்திருக்கிறார்களென்பது சிலாசாஸனங்களால் விளங்குகின்றது. இந்த விவரமும் மஹாபாரதத்தைப் பற்றிய மற்றும் பல விவரங்களும், [1] 'மஹாபாரதமும் திராவிட பாஷைகளும்' என்னும் புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீவேதவியாஸர் மஹாபாரதத்தை எழுதும்படி விநாயகரைக் கேட்டுக்கொண்டபோது, விநாயகர், 'எனது எழுத்தாணி தடைப்படாமல் வேகமாகச் சொல்லவேண்டும். தடைப்பட்டால் எழுத்தாணியைக் கீழே வைத்துவிடுவேன்' என்று சொன்னதாகவும், வியாஸர், 'அப்படியானால், தாங்கள் சுலோகங்களின் அர்த்தத்தை மனத்தில் வாங்கிக்கொண்டு எழுதவேண்டும்' என்று கேட்டுக்கொண்டதாகவும், விநாயகரும், 'அப்படியே செய்வேன்' என்று சொல்ல வியாஸர் சொல்லத் தொடங்கியதாகவும், அவர் சொல்லும்போது இடையிடையே விநாயகர் ஆலோசிக்கும்படி கடின சுலோகங்களைச் சொல்லிக்கொண்டுபோனதாகவும் ஒருகதை மஹாபாரதத்திலேயே வழங்குகிறது. இந்தக்கதையின் உண்மை எப்படியானாலும், '8800 சுலோகங்களை நான் அறிவேன்; சுகர் அறிவர்; ஸஞ்சயன் அறிந்தாலும் அறியலாம்' என்று வியாஸரே சொல்லியிருக்கிற ஒருஸ்லோகத்தினால் மஹாபாரதத்தில்கடினமான சுலோகங்கள் பலஉண்டு என்பதுநிச்சயம். அவைகளுக்கு, 'முடிச்சுக்கள் அல்லது வியாஸகூட்டு' என்று பெயர்வழங்குகிறது. இப்படிப்பட்ட கடினமான கிரந்தத்திற்கு விளக்கமான வியாக்யானம் இல்லை. ஆதலால், இதில் சிலஸ்லோகங்கள் சிறந்த பண்டிதர் களுக்கு அன்றி மற்றவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கு

[1] இந்தப் புஸ்தகம், சென்னை ஸர்வகலா சங்கத்தார் விருப்பத்தின் படி, நான் சென்னைப் பச்சையப்பன் காலேஜில் 1930ஆம் பிப்ரவரி 27, 28உ களிலும் மார்ச்சு முதல் தேதியிலும் செய்த மூன்று உபந்நியாஸங்கள் அடங்கியது. அது அச்சில் இருக்கிறது; விரைவில் வெளிவரும்.

வதில்லை. "வேதமானது குறைந்த கல்விகேள்வியுள்ளவனைக் கண்டு 'இவன் நம்மை மோசம்செய்துவிடுவான்' என்று பயப்படுகிறது" என்று ஒருபுராண சுலோகம் கூறுகிறது. அப்படியே, இந்த மஹாபாரதமும் குறைந்த படிப்புள்ளவர்களைக் கண்டால் பயப்படுகிறது. அவர்களும் இந்த மஹாபாரதத்தைக்கண்டால் பயப்படுகிறார்கள். குறைந்த படிப்பும் அல்பபுத்தியுமுடைய போலிப்பண்டிதர்கள் தங்களுடைய அறியாமையை மறைப்பதற்காக 'மஹா பாரதத்தைப் படிக்கலாகாது' என்பது முதலிய சில அபவாதங்களைக் கட்டிவிட்டார்கள். நல்லசெய்திகள் பரவுவதைக் காட்டிலும் தீய செய்திகள் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கமடைந்து பரவுவது இயற்கையாதலாலும், நம்மவர்கள் பிறர் சொல்லுவனவற்றை ஆராயாமலே எளிதில் நம்பும் தன்மையுடையவர்களாதலாலும், இந்த அபவாதம் வழங்கலாயிற்று.

ஸ்ரீ மஹாபாரதத்தை மற்றக் காரியங்களுக்கு இடையே சில சில நேரம் படித்து வந்தால் முழுதும் படித்து முடிப்பதற்குப் பல வருஷங்கள் செல்லும். அதற்குள் ஏதாவது ஓர் அஸௌகர்யம் நேர்ந்தால், அதற்கு மஹாபாரதம் காரணம் என்னலாமா? இராமாயணம் படித்தால் ராஜ்யத்தை இழந்து காட்டிற்குப் போக வேண்டுமென்றும் பின்னும் பல துக்கங்களை அனுபவிக்கவேண்டுமென்றும் சொல்லலாமா?

ஸ்ரீமத் ராமாயணத்தை மொழிபெயர்த்து வெளியிட்டும் பிரஸங்கம் செய்தும் உலகத்தில் மிக்க புகழ்படைத்திருக்கிற சிலர் சிரமத்தை அடைந்திருப்பதை நாம் நேரில் பார்க்கவில்லையா? கேட்டதில்லையா? பலவருஷங்களுக்குமுன், நான் மஹாபாரதத்தை மொழிபெயர்த்து வெளியிடத்தொடங்கியபோது, ராமாயண மூதலிய கிரந்தங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதென்று சில தக்கவர்கள் தொடங்கிச் சிலஸஞ்சிகை வெளிவந்தவுடன், அவர்களுக்குள் கலகம் ஏற்பட்டுப் பிரிந்துபோய்ப் பிறகு சேராமலே இருக்கவில்லையா? சில இடங்களில் சில தக்கவர்கள் சேர்ந்து ஸ்ரீராமாயணத்தைத் தமிழில்மொழிபெயர்த்து வெளியிடத்தொடங்கிச் சிலபாகம்நடந்துவந்து பிறகுநடைபெறுமல்நின்றுபோகவில்லையா? தென்னாட்டில் தமிழ்க் கவிகளுள் கம்பர் கவிச்சக்ரவர்த்தி என்று கொண்டாடப்படுவதுபோல வடநாட்டில் ஹிந்தி பாஷைக் கவிகளுள் துளஸிதாஸ் என்பவர் கவிச்சக்ரவர்த்தி என்றும் தெய்வி

கம் வாய்ந்தவர் என்றும் கொண்டாடப்படுபவர். அவர் செய்த இராமாயணம் துளஸீதாஸ் ராமாயணமென்று மிக்க பிரஸித்தி பெற்றது. கும்பகோணம் மத்வவிலாஸ புஸ்தகசாலைத் தலைவர், ஸ்ரீமான் T. R. கிருஷ்ணாசாரியரவர்கள், மாத்வஸம்பிரதாயக் கிரந்தங்கள் பலவற்றையும் ராமாயண பாரத பாகவதங்களையும் பல வியாக்யானங்களுடனும் பல அரிய குறிப்புக்களுடனும் அச்சிட்டு வெளியிட்டவர்கள். அவர்கள் துளஸீதாஸ் ராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடத் தொடங்கினார்கள். அதில் ஒரு ஸஞ்சிகை வெளிவந்தது. பிறகு, நின்றே போயிற்று. இவற்றிற்கெல்லாம் இராமாயணம் காரணம் என்னலாமா?

புண்யஶ்லோகொ நலொராஜா புண்யஶ்லோகொ யுதி ஷ்டிரஃ|| புண்யஶ்லோகாச வைதெஹீ புண்யஶ்லோகொ ஜநா ர்தநஃ என்கிறபடி நளன் யுதிஷ்டிரர் ஜானகி ஜனார்த்தனர் ஆகிய இவர்கள் புண்ய ஶ்லோகர்கள் என்று பிரஸித்தர்கள். இவர்களுடையபெயரைச் சொல்லுவதனாலும் சரித்திரங்களைப் படித்தல் கேட்டல்களாலும் பாவங்கள் நீங்கிப் புண்யமுண்டாகுமென்பது பெரியோர் கொள்கை. அவர்களுடைய சரித்திரங்களையும் ஹரிச்சந்திரன் முதலிய சக்கரவர்த்திகளுடைய சரித்திரங்களையும் ப்ரஹ்லாதன் த்ருவன் முதலிய பக்தர்களின் சரித்திரங்களையும் படிக்கும்போது அவர்கள் கஷ்டம் அடைந்ததையும் பிறகு நன்மை அடைந்ததையுமே படிக்கிறோம். அதனால், அவர்கள் அடைந்த கஷ்டங்களையெல்லாம் நாமும் அடைவோம் என்று சொல்லலாமா? அவர்கள் அடைந்த துன்பங்களை அடையோம் என்பதையன்றோ பயனாகக் கூறுகிறார்கள்.

(2) மேல்நோக்காகப் பார்ப்பவர்களுக்கு மஹாபாரதத்தில் ஒற்றுமைக்குறைவு இருப்பதுபோலத் தோன்றினும் நுணுகிப் பார்த்தால், அஃது ஒற்றுமையை வளர்ப்பதென்பது நன்கு விளங்கும். பாண்டவர்கள் ஒருவரோடுஒருவர் கலகப்படுவதற்குப் பல காரணங்களிருந்தும் எவ்வளவோ கஷ்டங்கள் நேர்ந்தும் மிக ஒற்றுமையாக இருந்தார்கள்; ஸஹோதர வாத்ஸல்யத்தை மிக உறுதியாகக் கொண்டிருந்தார்கள். துரியோதனாதியர்கள் தீய செய்கையுள்ளவர்களாயிருந்தும் அவர்களும் தங்களுள் அந்த வழியில் மிக்க ஒற்றுமையுடையவர்களாக இருந்தார்கள். கோஷயாத்திரையில் துரியோதனனைக் கந்தர்வன் கட்டிப்போன

பொழுது, தர்மபுத்திரர், 'அன்னியர்கள் வரும்பொழுது நாம் நூற்றைவரும் ஸகோதரர்கள்' என்று சொல்லித் துரியோதனனுடைய கட்டைஅவிழ்த்துவிடச் செய்தார்.

மஹாபாரதத்தைத் தமிழில் காவியமாக விருத்தக்கவியில் இயற்றிய வில்லிபுத்தூராழ்வாருடையபெருமை உலகம் அறிந்தது. தமிழ்ப் புலவர்களில் அவர் கவித்திறத்தைப் பாராட்டாதவர்கள் இல்லை. தமிழ்படித்தவர்களில் அவர்பெருமையை அறியாதவர் அறியாதவரே. அவர் மஹாபாரதம் பாடியதற்கு ஒரு காரணம் கூறுவது உண்டு. அதாவது :-"வில்லிபுத்தூராழ்வாருக்கும் அவருடைய தம்பிக்கும் தாயபாக விஷயமாகக் கலகமுண்டாயிற்று. அவர்அதனை அரசனிடம்தெரிவித்துக்கொண்டார். அவன் கேட்டு, 'கல்விக்கடலைக் கடந்த இத்துணைப் பெரியார்க்கும் காமக்குரோதங்கள் நீங்கவில்லையே. பாக விஷயமாகச் சகோதரனுடன் கலகம் விளைக்கிறாரே! இவருக்கு யார் சொல்லுவது? இவர் தாமாகவே உணரும்படி செய்யவேண்டும்' என்று தனக்குள் நிச்சயித்து, அவரை நோக்கி, அவருடைய கவிபாடும் திறமையைப் புகழ்ந்து, 'நீர் மஹாபாரதத்தைத் தமிழில் பாடிக்கொணர்ந்தால் உமது வழக்கைக் கேட்டு முடிவுசெய்வேன்' என்று கூறினான். அவர் அப்படியே பாடத்தொடங்கி யுதிஷ்டிர பட்டாபிஷேகம்வரையில் பாடிமுடித்தனர். அவ்வளவில் மஹாபாரத யுத்தத்துக்குத் தாயபாகமே காரணமாக இருந்ததென்னும் உண்மை மனத்திற்பட, அவர் கலகம்நீங்கித் தம்தம்பியுடன் ஸமாதானமாகி அன்பு பாராட்டிச் சேர்ந்து வாழ்ந்தார்" என்பது.

இவைகளால், ஸ்ரீ மஹாபாரதம் ஒற்றுமையை உண்டுபண்ணுவதென்றே விளங்குகிறது. ஒற்றுமைக்குறைவை உண்டு பண்ணக் கூடியதென்று சொல்வதற்குக் காரணமே இல்லை. ஆதலால், ஒற்றுமைக்குறைவை உண்டுபண்ணுமென்று சொல்வது சோம்பேறிகள் சொல்லுகிற ஆதாரமற்ற வார்த்தை என்பது உறுதியாகிறது.

(3) ஸ்ரீமஹாபாரதம் வீட்டிலிருப்பதே பரமக்ஷேமத்திற்குக் காரணமென்பது, 'ஹாரதம் ஹவநெ யஸ்ய தஸ்ய ஹஸ்தமதொ ஜயஃ' என்பதனால் நன்குவிளங்கும். மஹாபாரத புஸ்தகம் வீட்டிலிருப்பதே பல நன்மைகளுக்குக் காரணமாகுமென்றால் அதனைப் படித்தல் கேட்டல்களால் உண்டாகும் நன்மைகளைச் சொல்லவும் வேண்டுமோ? மஹாபாரதத்தைப் படித்துப் பொருள்

சொல்வதானால் பலவருஷங்கள் செல்லும். நம்தேசத்தில் பெரும் பாலும் நடந்துவருகிற வழக்கப்படி ஒருவர் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து சொல்லுவதானால், நீடித்த பலவருஷங்களில் அந்த வீட்டினருக்கு அயலூருக்குப் போக நேரலாம்; ஆசௌசம் முத லிய அஸௌகர்யம் நேரலாம்; அவைகளால் மஹாபாரதப் பிர ஸங்கத்துக்குத் தடை ஏற்படலாம்; பல வருஷங்கள் தொடர்ச்சி யாக இதனை வைத்து நடத்துவது ஒருகுடும்பத்துக்கு ச்ரமமா யிருக்கலாம்; சில வீடுகளுக்குச் சிலர் மனஸ்தாபம் முதலிய கார ணங்களால் வரக்கூடாமலிருக்கலாம்; ஒருவர் வீட்டுத் திண்ணை யில் வைத்து நடத்துவதில் சிலருக்கு ஆக்ஷேபமிருக்கலாம். ஆத லால், ஒரு பொதுஇடத்தில் வைத்து நடத்தினால் எல்லாரும் வந்து கேட்பதற்கு எவ்விதத்தடையும் இராதென்பதுபற்றியும் எவ்விதஅஸௌகர்யத்தாலும் இந்த ஸத்கதாப்பிரஸங்கம் தடைப் படாமல் நடக்குமென்பதுபற்றியும் இதனைக் கோயில் முதலிய பொதுஇடங்களில் படித்து வந்திருக்கலாம்.

(4) கும்பகோணம், மஹாவித்வான் மத்வசாஸ்திர ஸம்பூர் ணர் பாரதஹ்ருதயம் ப்ரம்மஸ்ரீ கா. பெ. ராமசந்த்ராசார்யாரவர்க ளுடைய பெருமையைப்பற்றியும் அவர்கள் இந்த மஹாபாரத விஷயமாக எனக்குச் செய்திருக்கிற பேருதவிகளைப்பற்றியும் ஆதி பர்வ மேதிகபர்வம் வனபர்வ இரண்டாம்பாகம் உத்யோகபர்வம் ஆகிய இவற்றின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். மஹாபார தத்தைப் படிக்கவேண்டிய முறை எப்படியென்று அவர்களைக் கேட்டபோது, அவர்கள், 'முதலிலிருந்து கடைசிவரை தொடர்ச்சி யாகப் படிப்பதுதான் பரம்பரையான வழக்கம்; நானும் அப்படியேதான் செய்துவருகிறேன்.' என்று சொன்னார்கள். ஸ்ரீ பாகவதத்தை 'ஸப்தாஹம்' என்று ஏழுநாளில் படிப் பதுபோலவும், ஸ்ரீமத் ராமாயணத்தை 'நவாஹம்' என்று ஒன் பதுநாளிலும் 'புனர்வஸு பட்டாபிஷேகம்' என்று இருபத் தேழுநாளிலும் படிப்பதுபோலவும், மஹாபாரதத்தை நாற்பது தினங்களில் படிக்கும் ஒரு முறை உண்டென்றும் சொன்னார்கள்.

இவர்கள் மஹாபாரதம்முழுதும் தம் வீட்டில் பலமுறை படித்திருக்கிறார்கள். மற்றும் பலவீடுகளில் பலமுறை படித்துப் பொருள் சொல்லியிருக்கிறார்கள். மஹாபாரதப் பிரசாரத்தினா லேயே இவர்கள் பெருமையையும் புகழையும் பொருளையும் பெற்றிருக்கிறார்கள். இவர்களுடைய மூத்தகுமாரர் ஸ்ரீமான்,

Dr. R. நாகராஜ சர்மா அவர்கள் ஆங்கில பாஷையிலும் ஸம்ஸ்கிருத பாஷையிலும் மிக்க புலமைவாய்ந்தவர்கள். இளைய குமாரர் ஸ்ரீமான், சுதர்சனசர்மா அவர்கள் ஸம்ஸ்கிருத பாஷையில் மிக்க பாண்டித்தியம் உடையவர்கள்; ஸாஹித்யசிரோமணி பரீக்ஷையில் தேறினவர்கள். இந்த இரண்டு குமாரர்களும் தக்கவர்களால் மிக நன்கு மதிக்கப்பெற்றவர்கள். பிதாவும் புத்ரர்களும்,

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்னும் திருக்குறள்களுக்கு இலக்கியமாக விளங்குகிறார்கள்.

ஐரோப்பாக்கண்டத்திலுள்ள கீழ்த்திசைப் பாஷா நிபுணர்கள் பலர், மஹாபாரதத்தை எழுத்துஎண்ணிப்படித்து ஆராய்ச்சி செய்து அதிலிருந்து பல அரியவிஷயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்; மஹாபாரதத்தின் பெருமையைப் பலபடப் புகழ்ந்து எழுதுகிறார்கள். இதன்விவரத்தையும் 'மஹாபாரதமும் திராவிட பாஷைகளும்' என்னும் புஸ்தகத்தில் பரக்கக்காணலாம்.

இங்ஙனம் பலவகையாலும் சிறப்புவாய்ந்ததும் ஐந்தாம் வேதமென்று கொண்டாடப்படுவதுமான மஹாபாரதத்தைத் தூஷிக்கிறவர்களைப்பற்றி நான் என்ன சொல்வது? அவர்கள், அதனால் ப்ரதிபாதிக்கப்படுகிறவனும், 'ஹாரதாத்ரோ ஹரிஃஸ்வயம்' என்கிறபடி அதனின்றும் வேறாகாதவனுமான பகவானையே தூஷிப்பவர்களாவார்கள். அவர்களுக்கு நல்ல அறிவை அளித்தருளும்படி எல்லாம்வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

என்னிடத்துள்ள குற்றங்குறைகளுக்கு அளவே இல்லை. அவைகளை யாரேனும் சொல்லுவார்களானால் அவர்கள் உண்மை சொன்னார்களென்று நினைத்துப் பொறுத்துக்கொண்டு அவைகளை நீக்கிக்கொள்ளுதற்கு இயன்றவரை முயலுவேன். சிலர் மஹாபாரதத்தையும் சிலர் சாந்திபர்வத்தை மொழிபெயர்த்து உதவிய பெரியோர்களையும் நிந்தித்தார்களென்று கேட்டமையாலும் அவர்களுக்கு ஸமாதானம் கூறுவது என் கடமையென்று தோன்றினமையாலும் இவ்வளவு எழுத நேர்ந்தது. பொறுத்தருளும் வண்ணம் பெரியோர்களை ப்ரார்த்திக்கிறேன்.

நான் அடையும் நன்மைகள்.

மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிடத்தொடங்கியதில் நான் அடைந்த நன்மைகள் பல. அது, ஒன்றுக்கும்பற்றுத என்னை உலகம் அறியச்செய்தது; உலகமுள்ளவரையில் என்றும் அழியாத பெரும்புகழை எனக்கு அளித்தது. இந்தக்காரியம் பூர்த்தியான பிறகு என்மனம் ஆனந்தவெள்ளத்தில் திளைத்தாடுகின்றது. 'இதனைச் செய்யத்தொடங்கியதில் நீ மிக்க ச்ரமங்களை அடையவில்லையா?' என்று என்னைச் சிலர் கேட்கக்கூடும். தாங்கமுடியாத ச்ரமமே இருந்ததென்பதும் இப்பொழுதும் இருக்கிறதென்பதும் உண்மையே. ஸாதாரணமாக எந்தப் பெருங்காரியத்தைச் செய்வதும் ச்ரமம்தான். பல தக்க பண்டிதர்களையும் உதவிக்காக மற்றும் பலரையும் வைத்துக்கொண்டு பலவருஷங்களில் செய்யக்கூடிய பெருங்காரியமாதலாலும், அதிகமான பொருளுதவி வேண்டினமையாலும், கிடைத்த உதவி போதாமையாலும் ச்ரமம் அதிகமாகவே இருந்தது. நமது நாட்டார் தாம் செய்யவேண்டிய உதவியைச் செய்யக்கூடிய அளவு செய்திருப்பார்களானால் எனக்கு இவ்வளவு ச்ரமம் நேர்ந்திராது. பிந்திக்கிடைத்த உதவிகள் முந்திக்கிடைத்திருந்தாலும் இவ்வளவு ச்ரமம் இருந்திராது. வனபர்வ இரண்டாம்பாக முகவுரையிலும் மற்றும் பலபர்வங்களின் முகவுரைகளிலும் நான் தெரிவித்திருக்கிற சில பரோபகாரிகள் மனமுவந்து உதவிபுரிய முன்வந்திராவிட்டால் இந்த அரியபெரியநற்காரியம் இம்மட்டிலாவது பூர்த்தி அடைந்திராது. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிதலை இங்கும் தெரிவிக்கிறேன். அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் மேலும் மேலும் அளித்தருளும்படி எல்லாம்வல்ல கடவுளை ப்ரார்த்தித்துக்கொண்டே யிருக்கிறேன்.

காரியம் நடைபெறுங்காலத்தில் அளவில்லாத ச்ரமத்தை அடைந்ததல்லாமல் காரியம் பூர்த்தியான பிறகும் கவலைப்படும்படியாகச் செல்லும்வகைகள் இருந்தாலும், பல லட்சங்கள் பொருள்தேடிக் குவித்துவைத்திருந்தால் அடையக்கூடுமென்று எதிர்பார்க்கும் திருப்தியைக்காட்டிலும் பலமடங்கு அதிகமான திருப்தியை இந்தக்காரியம் பூர்த்தியானதில் நான் அடைகிறேன். என் குடும்பத்தாரும் அப்படியே நினைக்கிறார்கள். ஸ்ரீமஹாபாரத புஸ்தகத்தில் இன்னும் 200 பிரதிகள் செல

வாகுமாஞல் எனக்கு இருக்கிற கவலேமுழுதும் நீங்கிவிடும். தமிழ் நாட்டிலும் வேறுதேசங்களிலும் இதர தீவுகளிலுமுள்ள தமிழ் மக்களின் பெருந்தொகைக்கு இந்தச் சிறுதொகை மேருவுக்கும் ஓரணுவுக்கும் அல்லது கடல்நீருக்கும் ஒரு திவலேக்குமுள்ள அளவு கூட ஒப்புச்சொல்லமுடியாது. இதுவரை நடத்தி நிறைவேற்றி யருளிய கடவுள் மிச்சமுள்ள சிறுகவலேயையும் விரைவில் நீக்கி அருள்வானென்றே நம்பிக்கொண்டிருக்கிறேன்.

'கடவுள் ஒருவன் உண்டு. அவனே உலகமனைத்தையும் காக்கிறான். அவன் என்னையும் கைவிடான்' என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. அவன் என்னைக் கைவிடாமல் காக்கிறனென்பதற்குரிய அடையாளங்களே நான் அப்போதப்போது காண்கிறேன். முன்னம் அறியாத இடங்களிலிருந்து, நான்பாராமலும் கேளாமலும், உதவிகிடைத்துவருகிறது. அப்படிப்பட்ட உதவிகள் பல ஸமயங்களில் நேர்ந்தஉண்டு. அதற்குக் கடவுளுடைய திருவருள்தவிர வேறு காரணம் இருப்பதாக நான் நினைக்கவில்லே.

தற்காலம் கிடைத்துவருகிற ஒரு பேருதவியை என்னவென்று சொல்லுவேன்! கடவுள் தோன்றுத் துணேயாயிருந்து காப்பாற்றுகிறனென்பதற்கு இதுவே தக்க நிதர்சனமாம். தேசாந்தரத்திலுள்ள ஒரு பரமோபகாரி எனக்குச் சில மாதங்களாக உபகாரச் சம்பளம் அளித்து வருகிறார்கள். நான் அவர்களேப் பார்த்ததுமில்லே; கேட்டதுமில்லே. நம்மவர்களில் இப்படி உபகாரம் செய்யக்கூடியவர்கள் இருப்பார்களென்று நான் எதிர் பார்த்ததுமில்லே. சென்ற மேமீ 3வ காலேயில், நான் ஒரு நண்பரோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தேன். அப்போது, நான் அடைந்த பல ஸ்ரமங்களேயும் சொல்லிவிட்டு, 'கிடைத்ததைக் கொண்டு ஜீவனம் செய்துகொண்டும் நல்ல காவியங்களேப் படித்துக்கொண்டும் இனிது பொழுதுபோக்கிவந்த என்னேக் கடவுள் இந்தப் பெரிய காரியத்தில் இழுத்துவிட்டுப் பலபல துன்பங்களுக்கு உள்ளாக்கிவிட்டார்' என்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஒரு கடிதம் வந்தது. அதில், மஹாபாரதத்தில் 6 பிரதிகள் அனுப்பும்படி ரூ. 300-க்கு ஒருசெக்கு (Cheque) வந்தது. அதைத் தவிர, பின்வரும் விஷயமும் எழுதியிருந்தது:

'* * * * * * *

23rd April, 1932.

DEAR MR. RAMANUJACHARIAR,

* * * * * * * *

I offer you my hearty congratulations on the completion of the Mahabharata. Your difficulties, anxieties and troubles must have been very very great and now you may enjoy your well deserved rest. In order that you may be free from financial worries and that you may be kept above physical wants, I have instructed my bankers to remit you Rs. 25 p.m. on the 1st of every month for your life time commencing from the 1st May, 1932. I pray that God may bless you with a long life.

Yours very sincerely,

* * *

P.S.—I like to remain incognito and would request you not to publish my name in print.'

அதைப் பார்த்தவுடன், நான் அடைந்த தன்மையை உடனிருந்த நண்பரும் ஸர்வஸாக்ஷியான கடவுளுமே அறிவர். நான் கடவுளை நொந்துகொண்டிருந்தபோது இந்த நற்செய்தி வந்தமையால், கடவுளே நேரில் வந்து, 'நான் இருக்கிறேன். உன்னைக் கைவிடமாட்டேன்' என்று உறுதிகூறியதாக நினைத்தேன். கடவுளுக்குப் பல்லாண்டு கூறினேன். அந்தக் கடிதத்தைக் கண்ணில் ஒற்றிச் சிரமேல் வைத்துக்கொண்டேன். இந்த உபகாரத்தை நான் எதற்கு ஒப்புச்சொல்வேன்? இந்த மஹாபுருஷருக்கு என்மீதுள்ள அவ்யாஜமான அன்பும் ஸ்ரீமஹாபாரதத்திலுள்ள அபிமானமும் பின்வரும் கடிதங்களாலும் நன்கு விளங்கும்.

* * * *

'* * * * *18—10—32*

MY DEAR SIR,

I trust you are receiving the monthly remittances from Messrs. Thomas Cook & Sons regularly. I shall be glad to be informed at any time when there is any delay so that I may set things right, if need be.

Yours most affectionately,

* * * *

* * * *

* * * 14—11—32.

MY DEAR SIR,

I am enclosing herewith a copy of a photo of mine. I had no photos of mine at all and yesterday a friend took one for you.

Kindly send me per V.P.P. one complete set of the Tamil Mahabharatha. This is required for a friend of mine * * *

Yours most affectionately,

* * * *,

இந்த மஹோபகாரியினுடைய பேருதவிக்கு எதை ஒப்பிடுவ தென்று எனக்குத் தெரியவில்லை. கற்பக விருக்ஷம் கேட்டதைக் கொடுக்கும்; சிந்தாமணி நினைத்ததைக் கொடுக்கும். கேளாமலும் நினையாமலும் கொடுக்கும் ஒன்றை என்னவென்று சொல்வது! இப்படிப்பட்ட குணநிதியை உலகம் அறியும்படி செய்வது எனது கடமையாகும். நான் இவர்களைத் தக்க இடத்தில் வைத்து இவர்களுடைய புகழ் உலகுள்ள வரையில் நிற்கும்படி செய்ய எல்லாம்வல்ல இறைவன் இனிது அருள்புரியவேண்டும்.

ஸ்ரீ மஹாபாரத ஸம்பந்தமாக எனக்குக் கிடைத்திருக்கிற நற்சாக்ஷிப் பத்திரங்களாலும் ஸமாசார பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிற மதிப்புரைகளாலும் மற்றும் சில விவரங்கள் வெளியாகலாம். இந்தப் பெருமைகளெல்லாம் எனக்குக் கிடைத்தது ஸ்ரீமஹாபாரதத்தினாலன்றே! இந்த மஹாபாரதப் பதிப்பே பல தக்கவர்களுடைய பழக்கங்களையும் பல நன்மைகளையும் நான் அடையக்காரணம் ஆயிற்று. அவைகளை நானே தெரிவிப்பது முறையன்றுதலால் இம்மட்டோடே நிறுத்துகிறேன்.

மஹா பாரதத்தினால் நன்மை அடைந்தவர்களுள் நானும் ஒருவனுதலாலும், அந்த முறையில் எனது சொந்த அனுபவத்தைத் தெரிவித்தல் அவசியமாதலாலும், உண்மை பேசுதல் குற்றமாகாதென்னும் துணிபினாலும், இங்ஙனம் என்னைப்பற்றியும் தெரிவிக்கலானேன். பொறுத்தருளும்படி பெரியோர்களை மிகவும் ப்ரார்த்திக்கிறேன்.

சில பொருத்தங்கள்.

ஸ்ரீ மஹாபாரதத்திற்கு, ஸகல ஞானத்தையும் தருதலால் ஐந்தாம்வேதமென்றும் ஜயத்தைத் தரத்தக்கதாதலால் 'ஜயம்' என்றும் பெயர்கள் வந்திருக்கின்றன. 'ஜ' முதலெழுத்தாகவும் 'ய' கடையெழுத்தாகவும் அமைந்ததும், பதினெட்டு எழுத்துக்களாலானதுமான (1) ஒரு மஹாமந்திரத்தினுடைய விவரணம் மஹாபாரதமென்றும், அதன் முதல் எழுத்தையும் கடையெழுத்தையும் சேர்த்து (2) 'ஜய' என்று இதற்குப் பெயர் அமைக்கப்பட்டதென்றும் பெரியோர் கூறுவர். இந்த, 'ஜய' என்பதற்கும் கணிதசாஸ்திரத்திற் சொல்லிய கடபயாதி முறைப்படி பதினெட்டு என்பதுபொருள். (3) பதினெட்டுப் பர்வங்களையுடையதும் (4) பதினெட்டு அக்ஷௌஹிணி சேனைகளுக்கு நடந்த (5) பதினெட்டு நாள் போரைத் தெரிவிப்பதும் (6) பதினெட்டு அத்யாயங்களையுடைய பகவத்கீதையைத் தன்னகத்துக் கொண்டதுமான இந்த மஹாபாரதத்திற்கு மூலமந்திரம் பதினெட்டு எழுத்துக்களுள்ளதாயிருப்பதும் பதினெட்டு என்று பொருள் தரும் படியான 'ஜய' என்பது பெயராக அமைந்திருப்பதும் அறிவுடையோர் நுணுகி ஆராய்ந்து வியக்கத்தக்கவை.

இவையல்லாமல், நமது மொழிபெயர்ப்பின் கடைசிஸஞ்சிகையாகிய 45-வது ஸஞ்சிகை 1932ஆம் பிப்ரவரிமீ 17உ வெளிவருமென்று ஹிந்து பத்திரிகையில் 15, 17, 19 ஆகிய மூன்று தினங்களில் பிரசுரித்திருக்கிறது. அந்த 17-ம் தேதியில் வெளியிடக்கூடாமல் 18உ தான் அந்த ஸஞ்சிகை அச்சுக்கூடத்திலிருந்து என்னிடம் வந்துசேர்ந்தது. ஆதலால், பிப்ரவரிமீ (7) 18உ கடைசிஸஞ்சிகை வெளிவந்தது. ஸ்ரீ மஹாபாரதம் பூர்த்தியானதற்காக, கும்பகோணம் போர்ட் டவுன் ஹாலில் நடந்த ஸந்தோஷக்கொண்டாட்டத்தை முதலில் மார்ச்சுமீ 12உயிலும், பிறகு 14உயிலும் நடத்த நினைத்தார்கள். அப்படி நடத்தப்படாமல் 18உயே நடைபெறும்படி தெய்வாதீனமாக நேர்ந்தது. ஒரு கேஸ் ஸம்பந்தமாகக் கும்பகோணம் ஸப்கோர்ட்டில் 18உ விசாரணைக்குத் தேதி குறிப்பிட்டிருந்ததாலும், அதற்காக, சென்னையிலிருந்து ஸ்ரீமான், V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களும் ஸ்ரீமான், K. V. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்களும் வருவதாயிருந்ததாலும், இரண்டு கனவான்களும் இந்த மஹா

பாரதப்பதிப்புவிஷயத்தில் மிக்க அபிமானமுடையவர்களாதலாலும், அந்த ஸமயம் வைத்துக்கொள்ளலாமென்று நிச்சயித்தார்கள். அந்தப்படியேஅது (8) 18ஆ நடைபெற்றது. சென்னை ஸம்ஸ்கிருதஸேவாஸமிதியார் மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ்தோட்டத்தில் மஹாபாரத மொழிபெயர்ப்புப் பூர்த்தியானதற்காக நடத்திய ஸந்தோஷக்கொண்டாட்டத்திற்கும் ஒருவாறு பதினெட்டின் ஸம்பந்தம் இல்லாமற்போகவில்லை. அது நடந்ததினம் இங்கிலீஷ் ஏப்ரல்மாதம் 15ஆயும் தமிழ்ச் சித்திரை மாதம் 3ஆயும் சேர்ந்தது. அந்த இரண்டும் சேர்ந்து (9) பதினெட்டாகும். அன்று ஸ்ரீராமநவமியும் ஆயில்ய நக்ஷத்திரமும் சேர்ந்த தினமுமாம். நமது தேசத்தில் திதியினாலும் நக்ஷத்திரத்தினாலும் நாட்களைக் கணக்கிடுவது வழக்கமாயிருப்பதற்கேற்ப இங்கே திதியும் நக்ஷத்ரமும் சேர்ந்து பதினெட்டைக் குறிக்கும். நவமியானது திதியில்ஒன்பதாவது; ஆயில்யம் நக்ஷத்ரத்தில் ஒன்பதாவது. இரண்டும் சேர்ந்து (10) பதினெட்டு ஆகும். அக்கழகத்தார் எனக்கு உபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்துப் பட்டமளித்தது ஹிந்துபத்திரிகையில் ஏப்ரல் மாதம்(11)18ஆதான் வெளிவந்தது.

மேலும், நான் மஹாபாரதமொழிபெயர்ப்பைத் தொடங்கிய பொழுது வேலைபார்த்தது, கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலில். அதில், 1893 - ம்ஆ முதல் 1910 - ம் வருஷம் முடிய (12) பதினெட்டு வருஷம் இருந்தேன். மஹாபாரத வேலையைத் தொடங்கி நடத்துவதற்கு ஆதாரமாக இருந்த வீடு, கும்பகோணத்தில், மஹாவித்வான் பரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய, தாக்ஷிண்ணத்யகலாநிதி, டாக்டர், வே. சாமிநாத ஐயரவர்களுடையது. அதில், 1904-ம் ஆ முதல் 1921-ம் வருஷம் முடிய (13) பதினெட்டு வருஷம் குடியிருந்தேன். 1908-ம் ஆ முதல் 1932-ம்வருஷம் வரையில் 24 வருஷங்களில் ஸ்ரீ மஹாபாரதப் பதிப்பு முடிவுஅடைந்ததானாலும், ஐரோப்பியயுத்தம் காரணமாக 6 வருஷம் தடைப்பட்டு ஸஞ்சிகை வெளிவந்தகாலம் (14) பதினெட்டு வருஷமே ஆகும். ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்பைச் செய்யலாமென்று சில ஈண்பர்கள் சொல்ல, அந்தப்படி நிச்சயித்து, முன்னதாகச் செய்யக்கூடிய வேலையைச்செய்ய முதலில் 1905-ம் வருஷம் தொடங்கினேன். அதுமுதல் நடந்துவந்து, 1932-ம் வருஷத்தில் பூர்த்தியாயிற்று. இவற்றுக்கு இடையில் 27 வருஷங்களாயின. இருபத்தேழு வருஷங்களுக்கும் 324 மாதங்

களாகின்றன. ஆகவே, பதினெட்டுப் பர்வங்களும் 324 மாதங்களில் நிறைவேறின. இம்முறையில் அவை ஸாஸரி (15) பதினெட்டு மாதங்களுக்கு ஒருபருவம்வீதம் பூர்த்தியாகியிருக்கின்றன.

என் முழுப்பெயரை, 'மணலூர் வீரவல்லி இராமானுஜாசாரியன்' என்று எழுதுவது வழக்கம். அதில் அடங்கிய எழுத்துக்கள் (16) பதினெட்டு. என்னுடைய பெயரின் முதலெழுத்து இங்கிலீஷில் 'R' என்பது. அது அந்த அக்ஷரவரிசையில் (17) பதினெட்டாவது. இவையல்லாமல், இன்னும் ஒரு ரகசியமும் வெளியிடுவேன். எம்பெருமான் இந்த மஹாபாரதத்தை வெளியிட வியாஜமாகக் கொண்ட என்னுடைய ஜன்மநக்ஷத்ரம் கேட்டை. அது (18) பதினெட்டாவது நக்ஷத்ரமாகும்.

மேற்கூறியவை பதினெட்டின் ஸம்பந்த மூடையனவாக இருக்கவேண்டுமென்று ஒருவரும் கருதிச் செய்தவையல்ல; தாமாகவே அமைந்தவை. இன்னும் நுணுகி ஆராய்ந்தால் பின்னும் சில பதினெட்டுக்கள் கிடைக்கலாம். ஆனாலும், மஹாபாரதத்திற்குப் பதினெட்டு ஏற்ற எண்ணுதலால் பொருத்தங்களும் பதினெட்டே போதுமென இவ்வளவோடு நிறுத்துகிறேன். இப்படிப்பலவிதத்திலும் பதினெட்டின் பொருத்தம் அமைவது தெய்விகம் என்றே நினைக்கிறேன்.

மஹாபாரதத்தில் தமிழ்ச் சொல்லாக வழங்குவனவற்றுள் முக்கியமானது, 'மணலூர்' என்பது. அந்தப்பெயரையுடைய ஊரிலும் மஹாபாரதத்திற்குப் பொருந்திய எண்ணை பதினெட்டாவது நக்ஷத்ரமாகிய கேட்டையிலும் அடியேனைப்பிறப்பித்ததனால், மஹாபாரதத் தமிழ்மொழிபெயர்ப்பை அடியேனைக் கொண்டே நிறைவேற்றுவதென்பது எல்லாம்வல்ல எம்பெருமானுடைய திருவுள்ளம் போலும். அடியேன் செய்யக் கருதியிருக்கும் மற்ற நற்பணிகளையும் இனிது நிறைவேற்றியருளும் வண்ணம் அவனது திருவடித்தாமரைகளைச் சிந்தித்து வணங்குகிறேன்.

மேலே கூறியவற்றுள் பெரும்பாலன ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியானபிறகே நிச்சயிக்கக்கூடியவையாதலாலும் கடைசிப் புஸ்தகம் பூர்த்தியாகி வெளிவந்தபிறகு இந்தப் பர்வமே புதிய பதிப்பாக வெளிவந்து முகவுரை எழுதப்படுவதாலும் இவை இங்கே வெளியிடப்பெற்றன.

மறைந்துபோன திவ்யப்ரபந்தமாகிய தமிழ்வேதம் இவ்வூரில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ ஆராவமுதப் பெருமானால் வெளி வந்ததென்றும், அதனால் அவருக்கு, 'ஆராவமுதஆழ்வான்' என்று திருநாமம் வழங்கலாயிற்று என்றும் சொல்லுவர். ஐந் தாம் வேதமாகிய இந்த மஹாபாரதம் தமிழில் வெளிவரத் தொடங்கியதும் இவ்வூரிலேயே. நான் இடையில் பலவிடங்களுக் குச் சென்றிருந்தும் திரும்ப இவ்வூரிலேயே வந்து இந்த மஹா பாரதம் பூர்த்தியானது, அந்த ஆராவமுத ஆழ்வானுடைய பரம கிருபையாலே என்பது நன்கு விளங்குகிறது.

ஆரா வமுதே! அடியே னுடலம் நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய உருக்கு கின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்! கண்டேன் எம்மானே!

ஓராயிரமாய் உலகேழளிக்கும்
பேராயிரங் கொண்டது ஓர்பீடுடையன்
காராயின காளநன்மேனியினன்
நாராயணன் நங்கள் பிரானவனே.

(திருவாய்மொழி)

இங்ஙனம்,

கும்பகோணம்,
1-1-1933.

ம. வீ. இராமானுஜாசாரியன்.

குறிப்பு.—Justice Telang அவர்கள், ஸ்ரீ மஹாபாரதத்துக்கு வ்யாக்யானம் செய்திருக்கிற நீலகண்டரைப்பற்றி, "Whatever his merits as an exegete, and even these are marred by a persistent effort to read his own foregone conclusions into the text he comments on." (P. 203 of The Sacred Books of the East, Edited by Max Muller, Vol. VIII) என்று எழுதியிருப்பது, மஹா வித்வான் ப்ரம்மஸ்ரீ, வேதாந்த கேஸரி, மஹா மஹோபாத்யாய, பைங்காநாடு கணபதி சாஸ்த்ரிகளவர்களுடைய அபிப்பிராயத்தை நன்கு வற்புறுத் தும். இதன் 7-வது பக்கம் மூன்றுவது வரியில் பார்க்க.

ஸ்ரீ :

மூன்றும் பதிப்பின் முகவுரை.

ஸ்ரீராமாயணத்தில் ஸுந்தரகாண்டம்போல, ஸ்ரீமஹாபாரதத்தில் மிக முக்கியமானது, இந்த விராடபர்வமாகும். மஹாபாரதத்தை ஒரு விருக்ஷமாக உருவகம்செய்து, அதற்கேற்ப, பல பர்வங்களையும் அம்மரத்தின் பல உறுப்புகளாகக் கூறுமிடத்து, இந்த விராடபர்வத்தை அதன் * ஸாரமாகக் கூறியிருத்தலே, இதன் சிறப்பை நன்குவிளக்கும். பெரியோர்கள் தமது இஷ்டஸித்திக்காக இந்தப்பர்வத்தைப் பாராயணம் செய்வதுண்டு. மற்றக்காலங்களைக் காட்டிலும், மழையில்லாதகாலத்தில் இதனையே படித்து வருகிறார்கள். பாண்டவர்களுக்கு ஒருவருக் கொருவரிடமுள்ள அன்புடைமையும், நன்னம்பிக்கையும், அவர்களுடைய நன்றியறிதலும், யுதிஷ்டிரர் குறிப்பை அறிந்து மற்றப் பாண்டவர்கள் நடத்தலும், த்ரௌபதியின் கற்புடைமையும், யாரும் தேசகாலங்களுக்கு ஒத்துநடக்க வேண்டுமென்பதும், அடாது செய்தவர் படாது படுவர் என்பதும், பொறுத்தார் அரசாள்வர் என்பதும் முதலிய பலவிஷயங்கள் இந்தப்பர்வத்தில் நன்கு விளங்கும். இதில், தௌம்யர் பாண்டவர்களுக்கு நற்புத்திக் கூறுமிடம் படிப்பவர் மனத்தைக் கவரத்தக்கது.

இத்தனைச் சிறப்புவாய்ந்த இந்த விராடபர்வம் முதன்முறை 1912-ம் வருஷத் தொடக்கத்தில் வெளியிடப்பட்டது. அது ஸம்பந்தமானயாவும் இதன் பின்னுள்ள அதன் முகவுரையால் நன்கு விளங்கும். இதன் இரண்டாம் பதிப்பு 1918-ம் வருஷத் தொடக்கத்தில் வெளிவந்தது. ஸ்ரீமஹாபாரதத்தை மொழிபெயர்த்துப் பதிப்பித்தலாகிய பெருங்கார்யத்திற்குத் தக்கபடி ஸௌகர்யங்களை முன்னதாக அமைத்துக்கொண்டு தொடங்காமையால், எல்லாப் பர்வங்களிலும், அப்போதப்போது ஸௌகர்யத்திற்குத் தக்கபடி சிலசில பிரதிகளே அச்சிடப்பட்டமையாலும், இந்தப் பதிப்புவேலையைத் தொடங்கிப் பதினேழு வருஷங்களுக்கு மேலானமையாலும் இடையிடையே பல ஸஞ்சிகைகள் குறைவுபட்டன. பிரகடனபத்திரிகையில், 'இதுவரையில் பதினேருபர்வங்கள் பூர்த்தியாகி விலைக்குக் கிடைக்கும்' என்று கூறப்பட்டிருப்பினும், எல்லாப் பர்வங்களையும் சேர்த்துக் கொடுப்பதற்கு ஒருபோதும் நேரவில்லை. ஒருஸமயம் இருந்த புஸ்தகம் ஒருஸமயம் இருந்ததில்லை. சிலர், ஒரே புஸ்தகத்திற்குப் பலமுறை எழுதியதுண்டு. படிப்பவர்களுக்கு வேண்டும்போது புஸ்தகம் கிடைக்கவில்லையென்றால் அவர்

---

* ஸ்ரீமஹாபாரதம், ஆதிபர்வம் 11-ம் பக்கம் பார்க்க.

'விராடோத்யோக ஸாரவாந்' என்று வடமொழி மஹாபாரதம் கூறுகிறது.

களுக்குள்ள ஊக்கம் பெரிதும் குறைகிறது. ஆகையால், கையிலில் லாத பழைய ஸஞ்சிகைகளே அச்சிட்டுக் கொடுத்தலும், புதிய ஸஞ் சிகையை வெளியிடுவதுபோலவே, அவசியமாயிற்று. புதிய ஸஞ் சிகை வேலையோடு பழைய ஸஞ்சிகையின் இரண்டாம் பதிப்பு வேலையையும் சேர்த்து நடத்த இயலாமையால், நான் மனத் தளர்ச்சியுற்று வேலையை நடத்தாமலிருந்ததை அறிந்து, பரம ஆப் தர்களும் லோகோபகாரமான இந்த உத்தம கைங்கரியத்தைத் தலைக்கட்டிவைப்பதில் மிக்க ஊக்கங்கொண்டிருப்பவர்களுமான ஸ்ரீமான் ராவ்பகதூர் V. T. கிருஷ்ணமாசாரியரவர்கள், C. I. E., பல நண்பர்களுடன் கலந்து ஆலோசித்து, இந்த மஹா பாரதப் பதிப்பைப் பூர்த்தி செய்தற்கு இன்றியமையாத ஸௌகர் யங்களைச் செய்துவருகிறார்கள். அவர்கள் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பை வடமொழி மஹாபாரதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து மிக்க ஸ்ரத்தையுடன் படித்து வருபவர்களாதலால், இதனை விரைவில் அச்சிட்டுப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் அவர்களுக்கு மிகுதியாயிருக்கிறது. ஸ்ரீமஹாபாரத சம்பந்தமான பதிப்புவேலை முழுமையும் சில மாதங்களில் பூர்த்திசெய்துவிட வேண்டுமென்று தாங்களாகவும் தங்களுடைய நண்பர்கள் மூல மாகவும் அவர்கள் என்னை அடிக்கடி தூண்டி எனக்கு ஊக்கம் அளித்து வருகிறார்கள். இந்தத் தருமசீலர்கள் ஸ்ரீமஹாபாரத கைங்கர்யத்தை ஆதரித்து நடத்திவருகிற முறையைப் பின்னர் விவரமாகத் தெரிவிப்பேன்.

இந்தப் பரமோபகாரிகள் மனமுவந்து செய்துவருகிற பேரு தவியினாலேயே, பழைய ஸஞ்சிகைகளில் பல இரண்டாமுறை பதிப்பிக்கப்பெற்றன; அந்த முறையில் இந்த விராடபர்வமும் இப் பொழுது பூர்த்தியாயிற்று. புதிய ஸஞ்சிகை வேலையும் விரைவாக நடந்துவருகிறது. அவர்களுடைய பேருதவியால், பல வருஷங்க ளாக நடந்துவருகிற இந்த அரியபெரிய நற்கார்யம் சில மாதங்க ளில் பூர்த்தியாகுமென்றே நம்புகிறேன். எல்லாம் வல்ல ஸர்வேஸ் வரன் தோன்றுத்துணையாக நின்று நிறைவேற்றியருளுக.

இந்த மஹாபாரதப் பதிப்புவிஷயத்தில், இவ்வளவு ஸ்ரத்தை எடுத்துக்கொண்டிருக்கிற இந்தப் பரமோபகாரிகளுக்கு மஹா பாரத ப்ரதிபாத்யனை ஸ்ரீகண்ணபிரான் எல்லா நன்மைகளையும் அளித்தருளுக. இங்ஙனம் பிரார்த்தித்தலன்றி நான் அவர்களுக் குச் செய்யும் கைம்மாறு யாதுளது? உலகுள்ளளவும் அவர்கள் புகழ் நின்று நிலவுக.

மணலூர்,
நரசிங்கன்பேட்டை, S. I. R.
2—3—1926

இங்ஙனம்,
ம. வீ. இராமானுஜாசார்யன்.

ஸ்ரீ:

முதற்பதிப்பின் முகவுரை.

பல அரியவிஷயங்களைத் தன்னிடத்துக்கொண்டிருக்கிற இந்தப் பெருநூலை வடமொழிக்கு ஸரியாக மொழிபெயர்த்து வெளியிடுவதிலுள்ள ஸ்ரமம், அறிவுடையோர்களுக்குத் தெரிந்ததே யாதலால், நான் இங்கு அதனை அதிகமாக விவரிக்கவில்லை. இவ்விஷயத்தில் எனக்கு உண்டான கவலை எல்லையில்லாமலிருந்தது. அது ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவருளால் ஒருவாறு நீங்கித் தைர்யம் அடைகிறேனென்பதைக்கேட்கிற ஆஸ்திகஸஜ்ஜனர்கள் த்ருப்தியடைவார்கள். மொழிபெயர்ப்பு அனேகமாய்ப் பூர்த்தியாயிற்றென்றே சொல்லலாம். உலகத்தில் வழங்கும் பல பாஷைகளிலுமுள்ள நூல்களுள்ளும் இவ்வளவு பெரியதும் அரியதும் ஹிந்துமதஸம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிவிப்பதுமான நூல் வேறில்லை என்பது எழுத்தாலும் சொல்லாலும் எல்லாரும் ஒப்புக்கொண்டது. எதிர்பாராத பல அஸௌகர்யங்களால் சிலசில ஸமயங்களில் ஸஞ்சிகைகள் காலத்தில் வெளிவராமற் போயின. பெரியோர்கள், கார்யத்தின் ஸ்ரமத்தையும் பெருமையையும் உத்தேசித்து க்ஷமிப்பார்களென்று நம்புகிறேன். இனி, ஸஞ்சிகைகளைக் காலத்தில் வெளியிடவேண்டுமென்று மிக முயற்சிசெய்து வருகிறேன்.

இந்த மஹாபாரதம் பூர்த்தியானபிறகு, விரிவான முகவுரையொன்று எழுதப்பெறுமாகையால், இந்தப் பெருங் கார்யத்துக்கு வேண்டிய உதவிகளைச்செய்து ஆதரித்துவருகிற வித்வான்கள் பிரபுக்கள் முதலியவர்களின் பெயர்களைப் பின்பு வெளியிடுவேன். அவசியம் தெரிவிக்கவேண்டிய சில விஷயங்களைமாத்ரம் இங்கே தெரிவிக்கிறேன்.

தேசாபிமானமும் பாஷாபிமானமுமுள்ள கனவான்கள் கையொப்பம்செய்து உத்தமோத்தமமான இந்த ஸத்கார்யத்தில் என்னை உத்ஸாஹப்படுத்தி வருவதற்கு நான் அவர்கள் விஷயத்தில் மிக்க நன்றியறிவுள்ளவனாக இருக்கிறேன்.

முகவுரை.

திருப்பனந்தாள் ஆதீனம், மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ. காசிவாஸி, சோமசுந்தரத்தம்பிரானவர்கள், நான் இதனைத் தொடங்கியதுமுதல், அடிக்கடி விசாரித்து ஆதரித்து, எனக்கு மனத்தளர்ச்சி உண்டாகாமல் ஊக்கமளித்துவருவதோடு மஹாபாரதத்துள் * ஸாரமான விராடபர்வத்தை விரைவில் வெளியிட வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லி, அதற்குவேண்டும் பொருளுதவியும் செய்தார்கள். அவர்கள் செய்த இப் பெருநன்றியை நான் எந்நாளும் மறவேன்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

என்றபடி, அவர்கள் செய்யும் பேருதவிக்கு யான் செய்யும் கைம்மாறு யாதுளது?

இந்நூலின் பெருமையையும் எனது சிறுமையையும்பார்த்து, என்னவிதமான குற்றங்களிருப்பினும்க்ஷமித்து, தெரிவிக்கவேண்டியவைகளைத் தெரிவித்து, என்னைத்திருத்தி ஆதரித்து, இக்கார்யம் பூர்த்தியாகும்படி செய்யவேண்டுமென்று பெரியோர்களை நிரம்பவேண்டுகிறேன்.

இடையூறு சிறிதுமின்றி, இஃது, இனிது நிறைவேறும்படி செய்வித்தருளவேண்டுமென்று எல்லாம்வல்ல ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறேன்.

மணலூர்,
13—3—1912.

இங்ஙனம்,
ம. வீ. இராமாநுஜாசார்யன்.

---

* 'விராடோத்யோகஸாரவாந்' என்பது மஹாபாரதத்திலுள்ள வாக்யம்.

Reprint. THE KUPPUSWAMY SASTRI RESEARCH INSTITUTE. 32183

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்

உத்யோகபர்வம்.

மஹா வித்வான், ப்ரம்மஸ்ரீ,
வேதாந்த விபூஷணம், மஹோபதேசகர், சாஸ்திர ரத்நாகரம்,
மஹாமஹோபாத்யாய,
கருங்குளம், கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால்
மொழிபெயர்க்கப்பெற்று,

கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர்
பாஷாபாரத துரந்தர, மஹாமஹோபாத்யாய
ம. வீ. இராமானுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றது.

PRINTED AT THE KESARI PRINTING WORKS,
MADRAS.

விலை ரூபா ச—0—0. தபாற்கூலி வேறு.

1937

(*All Rights Reserved*)

ஸ்ரீ :

முகவுரை.

ஐந்தாவது வேதமென்று சிறப்பித்துக் கூறப்படுகிற ஸ்ரீ மஹாபாரதத்தில் ஐந்தாவது பர்வமாகிய உத்தியோகபர்வம், ஸ்ரீ கண்ணபிரானுடைய திருவருளால், பூர்த்தியாகி வெளிவந்ததைப் பெருமகிழ்ச்சியுடன் மகாபாரதாபிமானிகளுக்குத் தெரிவிக்கிறேன். இதில், அவர்களுக்கு என்னிலும் பலமடங்கு அதிகமான மகிழ்ச்சி உண்டாகுமென்பது நிச்சயம். 'ஸ்ரீ மஹாபாரதத்தால் தூதுபோன வன் ஏற்றம் சொல்லுகிறது' என்று பூர்வாசாரியர்கள் சொல்லுதற்கேற்ப, அவனுடைய அரியதிருவிளையாடல்களே மிகுதியும் நிரம்பித் தனிச்சிறப்பு வாய்ந்தது இந்த உத்தியோகபர்வம். எல்லாவற்றையும் தன் வசத்திலுடையவனும் ஸர்வேச்வரனும் ஆதியந்தமற்றவனும் ஸ்வதந்திரனுமானபகவான் தான் அடியார்களுக்குவசப்பட்டவனென்பதைத் தூதுசென்றும் அனுஷ்டித்துக் காட்டியது இந்தப் பர்வத்திலேதான். 'ஸ்ரீ மஹாபாரதமாகிய மரத்திற்கு விராடபர்வமும் உத்யோகபர்வமும் ஸாரம்' என்று ஸௌதபுராணிகரே கூறியிருந்தாலும், இந்தப் பர்வத்தின் சிறப்புக் கூறவேண்டாவன்றே ?

இந்தப் பர்வத்தில் பல அரியவிஷயங்கள் அடங்கியுள்ளன. திக்விஜயமென்னும் விருத்தாந்தம், வித்துரப்ரஜாகாமம், ஸநத்ஸுஜாதீயம், கிருஷ்ணன்தூது, தம்போத்பவன் கதை, மாதலி தன்பெண்ணுக்கு வரன்தேடியது, மாதவியின்கதை, விதுலோபாக்கியானம், அம்போபாக்கியானமுதலிய பல கதைகள் படிப்பவர்மனத்தைக் கவரும் தன்மையன. இந்தப் பர்வத்திலடங்கிய விஷயங்களின் சுருக்கத்தை ஆதிபர்வத்திலுள்ள ஸௌதபாரதமென்னும் பர்வஸங்கிரஹ அத்யாயத்தில் காண்க.

சென்னை மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபல், வேதாந்த விபூஷணம், மஹோபதேசகர், சாஸ்திர ரத்நாகரம், *மஹாமஹோபாத்யாய, ப்ரம்மஸ்ரீ, கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள், சாந்திபர்வ மோக்ஷதர்மத்தை மொழிபெயர்த்து உதவியது

* இது இப்பால் அளிக்கப்பட்டது.

போலவே இந்த உத்தியோகபர்வத்தையும் மொழிபெயர்த்து உதவினர்கள். வேதாந்த விஷயங்களும் தர்மங்களும் நீதிகளும் நிரம்பிய வையும் மிக்க கடினமுமான பாகங்களே இவர்களால் மொழிபெயர்க்கப்பட்டன. இவைகளே மொழிபெயர்ப்பதில் இவர்களுடைய புத்திக்கு மிக்க ஸ்ரமமுண்டாயிருக்கவேண்டும். ஆனாலும், இவர்களுடைய ஞானமும் சாஸ்திர பரிச்ரமமும் உலகுள்ள அளவும் நின்று பயன் அளிக்கும்படி இந்தப் பர்வங்கள் பூர்த்தியாகிப் புஸ்தகரூபமாக வெளிவந்ததில் இவர்களுக்குப் பரம திருப்தியுண்டாகுமென்பது நிச்சயம். தாம் ஒப்புக்கொண்ட பாகத்தைப் பரம திருப்தியோடு ஒழுங்காகச் செய்துகொடுத்த இந்தப் பெரியார்விஷயத்தில் நானும் தமிழுலகமும் என்றும் நன்றிபாராட்டும் கடப்பாடுடையோம்.

சில வருஷங்களுக்குமுன், நான் கும்பகோணம் காலேஜ் வேலையி லிருந்து பென்ஷன்பெற்றுக்கொண்டு விலகியவுடன், ஸ்ரீ மஹாபாரத கைங்கர்யத்தை விரைவில்பூர்த்திசெய்யும்விருப்பத்தோடு சில காலம் சென்னையில் வந்து வஸித்ததும், பிறகு, சொந்த ஊராகிய மணலூருக்குப் போய் வஸித்ததும் நான் அப்போதப்போது வெளியிட்டிருக்கிற பிரகடனபத்திரிகைகளாலும் முன்வெளிவந்த பர்வங்களின் முகவுரைகளாலும் நன்கு விளங்கும். நான் மணலூரில்போய் வஸித்த காலைவருஷங்களில் அந்தியபஞ்சகமென்னும் ஐந்து சிறு பர்வங்களடங்கிய மூன்றரை ஸஞ்சிகைகள்கொண்ட ஒரு புஸ்தகமே வெளிவந்தது. அவ்வூர் இப்பொழுதிருக்கும் நிலைமை, அங்கு வஸித்தால் இந்த நற்காரியம் இனிது நடைபெறுதோ, அல்லது, நின்றேபோகுமோஎன்று கவலைப்படும்படியிருந்தது. பல வருஷங்களாக ஸஞ்சிகைகள் காலத்தில் வெளிவராமல் செலவுமாத்திரம் நடந்துகொண்டேவந்தமையால், ஸ்ரமம் அதிகரித்தது. ஆனாலும், நான் செய்கிற இந்தக்காரியம் கடவுள் திருவுளத்திற்கு உவப்பாயிருக்குமானால், 'அவன் எப்படியும் நிறைவேறச்செய்வான்' என்ற எண்ணம் மனத்தில் உறுதியாயிருந்தது. மேற்கொண்ட நற்காரியத்தை எப்படியாவது பூர்த்திசெய்யவேண்டுமென்னும் விருப்பம் மிகுதியாயிருந்ததே அல்லாமல் அதற்கு வேண்டிய வழி ஒன்றும் தோன்றவில்லை. இதற்குமுன் வெளிவந்த பர்வங்கள் வெளிவருதற்கு உதவிசெய்த பரமோபகாரிகளையே திரும்பவும் உதவி செய்யும்படி கேட்பதற்கு மனம் துணியவில்லை. இந்த நிலைமையில், திரும்பச் சென்னைக்கே வருகிறதென்று நிச்சயித்து இங்கே வந்து விட்டேன். இங்குவந்து சில வாரங்களும் சென்றன. 'பாண்டவர்

ஸ்காயனை ஸ்ரீபார்த்தஸாரதிப்பெருமான், 'இந்த மஹாபாரத கைங்கர்யம் தன் ஸங்நிதியில் பூர்த்தியாகவேண்டும்' என்று திருவுள்ளமாகி இங்கே வருவித்துக்கொண்டான்போலும்' என்று அவனுடைய திருவடிகளையே தியானித்துக்கொண்டிருந்தேன்.

இப்படியிருக்கையில், ஸ்ரீமஹாபாரத கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்விப்பதில் மிக்க ஊக்கமுள்ளவர்களும் இப்பொழுது பரோடா ஸம்ஸ்தானத்தில் திவானுக இருப்பவர்களுமான ஸ்ரீமான், ராவ் பகதூர், * Sir V. T. கிருஷ்ணமாசாரியர். K. C. I. E. அவர்கள், நான் வேலையை நடத்த இயலாமல் தளர்ச்சியடைந்திருக்கிறேன் என்பதைக் குறிப்பால் அறிந்து, இதனை நடத்துதற்கு வேண்டும் உதவி விஷயமாக எனக்குச் சில லிகிதங்கள் எழுதினர்கள். அவற்றுள் முக்கியமான சில லிகிதங்களை ஸ்ரீ மஹாபாரத ஸம்பந்தமாக நான் பதிப்பித்திருக்கிற அபிப்பிராய பத்திரிகைகளில் தெரிவித்திருக்கிறேன். அந்த லிகிதங்களால் இப்பெருந்தகையாளருக்கு ஸ்ரீமஹாபாரத கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்விப்பதிலுள்ள ஊக்கம் நன்கு விளங்கும். 1923-ம் வருஷத்தில் நான் இந்தக் கைங்கர்யத்தை நடத்த இயலாமல் தளர்ச்சியுற்று இதனை நிறுத்திவிட நிச்சயித்தபொழுது, இவர்கள் எனக்குத் தைரியம் சொல்லி ஊக்கமளித்து அதுமுதல் நொடர்ச்சியாக ஆதரித்து வருகிறார்கள். கலியின் ஆட்சிமிக்கு நல்லது கெட்டது பாகுபாடறியாமல் உலகம் தலைதடுமாறி நிற்கும் இந்தக் கொடிய காலத்தில், இப்படித் தாமே முன்வந்து விசாரித்து வேண்டிய உதவிகளைப்புரிந்து ஆதரித்துவருகிற இந்த மஹா புருஷர்களுடைய பெருந்தகைமையை நான் என்னவென்று பாராட்டுவேன்! இவர்கள் ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய பெருமையையே உள்ளீடாகக்கொண்ட ஸ்ரீமஹாபாரதகைங்கர்யத்தை உண்மையாக ஆதரித்துவருகிற பெரும்புண்யமே, ஸ்ரீகண்ணபிரானுடைய ராஜதானியான துவாரகையைத் தன்னகத்துக்கொண்ட பரோடாஸம்ஸ்தானத்தின் மந்திரிஸ்தானத்தை இவர்களுக்கு அளித்ததென்பது உண்மையேயாகும்; பூனூல்துரையாகாது. அடியார்களுக்கு அருள்சுரப்பவனான ஸ்ரீகண்ணபிரான் இந்தப்பரமோபகாரிகளுக்கு எல்லாநன்மைகளையும் மேன்மேலும் பொழிந்தருளுக.

இன்னும் இந்த மஹாபாரத விஷயமாக ஆதரித்துவருபவர்களான ஸ்ரீமான், ராஸ்ஸாகிப் Sir, M.C.T. முத்தையசெட்டியாரவர்கள் முதலான மஹோபகாரிகளின் பேருதவிகளை முன்வெளிவந்த பர்வங்

* இது இப்பால் அளிக்கப்பட்டது.

களின் முகவுரைகளில் அப்போதப்போது தெரிவித்திருக்கிறேன். வனபர்வமும் வெளிவந்து ஸ்ரீமஹாபாரதமும் பூர்த்தியாகும்போது எழுதும் முகவுரையில் எல்லாவற்றையும் சேர்த்து விவரமாகத் தெரிவித்துக்கொள்வேன்.

ஸ்ரீமஹாபாரதத்தில் மிக முக்கியமானதும் அற்புதமான அனேக ஸ்லோக்கதைகளையுடையதுமான ஆரண்யபர்வம் தொடங்கப்பெற்று வேலைநடந்துவருகிறது. இது வரையில் அது பெரும்பாலும் வெளிவந்திருக்கவேண்டும். நான் இவ்வூருக்கு வந்தவுடன் சிலகாலம் மஹாபாரதவேலை நடைபெறாமலிருந்தபொழுது, பல வருஷங்களுக்குமுன் லித்தம் செய்து வைத்திருந்ததும் பல ஆப்தர்கள் பலவருஷங்களாக விரும்பிக் கேட்டுக்கொண்டிருந்ததுமான ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்ய மொழிபெயர்ப்பைப் பதிப்பிக்கத் தொடங்கினேன். இது தொடங்கிய சில நாள்களுக்குள், ஸ்ரீமஹாபாரத வேலையை நடத்துதற்கு வேண்டும் ஸௌகர்யத்தை அமைத்துக்கொடுத்திருப்பதாக ஸ்ரீமான், Sir, V. T. கிருஷ்ணமாசாரியார் K. C. I. E. அவர்களிடமிருந்து நற்செய்தி கிடைத்தது. அப்பொழுது எனக்கு உண்டான மகிழ்ச்சியை என்னவென்று கூறுவேன்! அசோக வனத்திலிருந்த பிராட்டி, பெருமாளுடைய மோதிரத்தைக் கண்டபோது அடைந்த தன்மையை அடைந்தேன். தக்க காலத்தில் இப்பேருதவி கிடைத்ததை, ஸ்ரீகண்ணபிரான் நேரிலிருந்து கேட்டருளிய விஷ்ணுஸஹஸ்ரநாம ஆராய்ச்சியின் பயனென்றே நினைத்து அவனுடைய திருவடிகளைத் தியானம்செய்துகொண்டு ஸ்ரீமஹாபாரத வேலையையும் தொடங்கிவிட்டேன். தொடங்கிய வேலையை நிறுத்தக் கூடாமையால், ஸ்ரீமஹாபாரத வேலையோடு, ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமபாஷ்யப் பதிப்பையும் சேர்த்து நடத்திவந்ததால் ஆரண்ய பர்வஸஞ்சிகை எதிர்பார்த்தகாலத்தில் வெளிவராமல் சிறிது தாமதித்து வெளிவந்தது. இப்பொழுது உத்யோகபர்வமும் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமபாஷ்யமும் பூர்த்தியாகிவிட்டமையாலும், ஆரண்ய பர்வம் ஒன்றே நடக்கிறபடியாலும், ஆரண்யபர்வம் சில மாதங்களில் பூர்த்தியாகுமென்று உறுதியாக நம்புகிறேன்; எல்லாம் வல்ல ஸர்வேஸ்வரனுடைய பரமகிருபையாலும் பெரியோர்களுடைய பரமானுக்ரகத்தாலும் விரைவில் பூர்த்தியாகவேண்டும்.

ஆருடம் சொல்லுவதில் மிக்கபிரவித்திபெற்றிருந்த குப்பகோணம்தாலுகா வலங்கைமான் கோவிந்தசெட்டியாரைப் பலரும் அறிவார். அவருடைய திறமையைக்கேட்டு ஐரோப்பா அமெரிக்காமுத

ிய இடங்களிலிருந்தும் பலர் அவரைப் பார்க்க வந்ததுண்டு. அவர் ஒருஸமயம் என்னிடம் வந்திருந்தபோது, 'ஸ்ரீமஹாபாரதவேலை பூர்த்தியாகுங்கால், சிலநிகழ்ச்சிகள் உண்டாகும்' என்று ஒரு காகிதத்தில் எழுதி என்னிடம் கொடுத்திருக்கிறார். அதில் எழுதியிருப்பது, அவருக்கும் எனக்கும் ஸர்வஸாக்ஷியான கடவுளுக்குமே தெரியும். அதனை, அவருக்கு எதிரிலேயே ஒரு காகிதஉறையில்வைத்து அக்குமுத்திரையிட்டு ஜாக்ரதையாக வைத்திருக்கிறேன். அந்தக் காகிதஉறையில் அக்குமுத்திரைவைத்தவர், என்னுடன் பலவருஷங்களாகக் கூடவே இருப்பவரும் இந்த ஸ்ரீமஹாபாரதப்பதிப்புவேலையில் எனக்குப் பல உதவியையும் செய்துவருபவரும் இப்பொழுது மாயிலாப்பூர் ராமகிருஷ்ண தெஸிடென்ஷியல்ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராயிருப்பவருமான மகா-ள-ள-ஸ்ரீ C. N. துரைசாமி ஐயரவர்கள். இப்படி ஒரு காகிதம் வைக்கப்பட்டிருக்கிறதென்பது, எனக்குப் பரமஆப்தர்களும் இந்த மஹாபாரதம் பூர்த்தியாகிப் பார்ப்பதில் மிக்க ஆவல்கொண்டு அதற்காக எப்பொழுதும் *கடவுளே ப்ரார்த்தித்துக்கொண்டுவருபவர்களும் ஸதாசாரஸம்பன்னர்களும் ஸத்கர்ம பரிபாலகர்களுமான ப்ரம்மஸ்ரீ Prof K. சுந்தரராமஐயரவர்களுக்கும், அவர்களுக்கும் எனக்கும் மிக்க நண்பர்களான குடவாயில் ஸ்ரீமான், V. ரங்கசாமி ஐயங்கார் அவர்களுக்கும் தெரியும். இந்த மஹாபாரதப்பதிப்புவேலை முற்றுப்பெறுமோ பெறாதோ என்று எனக்கே ஸந்தேகமாயிருந்தமையால், இதைப்பற்றிமுன்னமே வெளியிடாமலிருந்தேன். இப்பொழுது, கடவுளருளால் பூர்த்தியாகுமென்று நம்பிக்கையுண்டானமையால், இந்த விஷயத்தை வெளியிடத் துணிந்தேன். ஆரண்யபர்வம் பூர்த்தி

---

* இவர்கள் இதுவிஷயமாகப் பலலிகிதங்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். இப்பொழுது, சிலநாள்முன் எழுதிய ஒருலிகிதத்தில், 'வனபர்வம் மாதம் ஒன்றுக்கு ஒரு ஸஞ்சிகையாவது வெளிவரும்படி அருள் செய்ய வேண்டுமென்று தினமும் த்ரிகாலங்களிலும் என்னால் செய்யப்படும் ஜபமானது முடிந்தவுடன், ஸ்ரீலஸ்ரீ நிருஸிம்மமூர்த்தியை ப்ரார்த்தித்து வருகிறேன்' என்று எழுதியிருக்கிறார்கள். இவர்கள், ஒரு ஸமயம், சரீர ஆரோக்கியமில்லாமல் படுத்துக்கொண்டிருந்தபொழுது, இவர்களோடு நெருங்கிப் பழகுபவர்களான ஒரு நண்பரிடம், 'ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியாகப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் மிகுதியாயிருக்கிறது' என்று சொன்னார்களாம். இவைகளால், இவர்களுக்கு இந்தமஹாபாரதவிஷயத்திலிருக்கிற மிக்க ஆவல் நன்குவிளங்கும். இவர்கள் செய்துவருகிற பொருளுதவி மிகஅதிகம். அதனைப் பின்னர் விவரமாகத் தெரிவிப்பேன்.

யாகும்போது, அந்தக்கடிதத்தை ஆப்தர்கள் பலர்முன்னிலையில் திறந்து அதிலுள்ள விஷயத்தை அந்தப்பர்வத்தின் முகவுரையில் வெளியிடுவேன். மஹாபாரதாபிமானிகள் பலருக்கும் அந்தக்கடிதத்திலுள்ள விஷயத்தைத் தெரிந்துகொள்ளுதலில் மிக்க விருப்பமுண்டாகுமென்பது நிச்சயம். எல்லாம்வல்ல கடவுள், அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி அருள்க.

நன்கொடையளித்தும், கையொப்பஞ்செய்தும்,கையொப்பங்கள் சேர்த்துக்கொடுத்தும், இந்த அரிய பெரிய நற்காரியத்தை இதுவரையில் ஆதரித்துவருகிற ஆப்தர்கள், தயைகூர்ந்து, மற்றப்பகுதியும் விரைவில் பூர்த்தியாகும்வண்ணம் தம்மாலியன்ற உதவிகளைச்செய்து ஆதரிக்கவேண்டுமென்று அவர்களை நிரம்பப் பிரார்த்திக்கிறேன். லோகோபகாரமான இந்த ஸத்காரியத்தை எல்லாம்வல்ல ஸர்வேஸ்வரன், பரமக்ருபையால், இனிது நிறைவேற்றியருள வேண்டும்.

மயிலாப்பூர்,சென்னை.
10-12-1928

இங்ஙனம்,
ம. வீ. இராமானுஜாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

பீஷ்ம பர்வம்.

திருச்சிராபுரம்

செண்ட் ஜோஸப் காலேஜ் ஸம்ஸ்கிருத தலைமைப்பண்டிதர்,

மஹாவித்வான், ஸாரஸ்வத ஸார்வபௌமர், கவிஸிகாமணி,

ஸ்ரீ - உ - வே - T. V. ஸ்ரீநிவாஸாசார்யர்

அவர்களால்

மொழிபெயர்க்கப்பெற்று,

தஞ்சாவூர் காலேஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமான்

ம. வீ. ஸ்ரீராமானுஜாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

விலை ரூபா 2. தபால்சார்ஜ் அணா 4.

1929

(*All Rights Reserved*)

ஸ்ரீ:

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

இத்தப் பீஷ்மபர்வத்தின் பெருமையை இதன் முதற்பதிப் பின் முகவுரையில் ஒருவாறு தெரிவித்திருத்தலால், அதனை இங்கே விவரிக்கவில்லை. இதன் முதற்பதிப்பு, 1919 ஆவ ஏப்ரல்மீ 1ஆ வெளிவந்தது அப்பொழுது, ஐரோப்பியயுத்தம் காரணமாக நல்ல காகிதம் கிடைக்கவில்லை. மட்டமான காகிதமும் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிற்று ஆகையால், சில பிரதிகளே அச்சிடப்பட்டன. இரண்டு அல்லது மூன்று வருஷகாலமாகக் கேட்பவர்களுக்குப் பீஷ்மபர்வம கொடுக்கபபடவில்லை. வனபர் வத்தை வெளியிட்டபிறகே வேறு வேலைகளைச் செய்வதென்னும உறுதியுடனிருந்தேன். இருந்தும், சிலர் அடிக்கடி எழுதிக்கேட் டுக்கொண்டிருந்தமையாலும, அவாகளுக்கு அடிக்கடி ஸமாதானம் எழுதுவது சிரமமாயிருந்தமையாலும, சிலா தாங்கள் புத்தகம் வாங்கிக் கொள்ளாமைக்கு இந்தப் பாவமில்லாமையைக் காரண மாகச் சொன்னமையாலும,எப்படியும் செய்யவேண்டிய காரியமே யாதலாலும் இதன் இரண்டாம் பதிப்பை வெளியிடலானேன். இந்த வேலை வனபர்வவேலை தாமதிப்பதற்குச சிறிது காரணமாஞ லும இதுவும் ஸ்ரீமஹாபாரத ஸம்பந்தமான வேலையேயாதலால், ஸ்ரீமஹாபாரத அபிமானிகள் க்ஷமிப்பாகளென்று நம்புகிறேன்.

ஸ்ரீபகவத்கீதை முதலிய இடங்களில் சில மாறுதல் செய்வது அவஸ்யமாயிருந்தும், அவகாசக் குறைவால் அவை இப்பொழுது செய்யப்படவில்லை. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைப்போலவே ஸ்ரீபகவத்கீதையையும தனியே அச்சிட்டுத்தரவேண்டுமென்று பலர் விரும்புதலால், அதனைத் தனியே அசசிட்டு வெளியிட எண்ணி யிருக்கிறேன். அந்தப் பதிப்பில் சேர்க்கவேண்டியவற்றைச் சேர்த் தும் மாற்றவேண்டியவற்றை மாற்றியும் வெளியிடுவேன்.

மஹாபாரதத்தில் எஞ்சியுள்ள வனபர்வத்தையும் நான் இன்னும் செய்யக்கருதியிருக்கிற மற்ற நற்காரியங்களையும் இனிது நிறைவேற்றுமாறு எல்லாம் வல்ல ஸர்வேஸ்வரனை ப்ரார்த்திக்கி றேன்.

11, கேசவப் பெருமாள்ஸ்ட்ரீட். மய்லாப்பூர். 30—7—29.

இங்ஙனம்

ம. வீ. இராமானுஜாசாரியன்.

முதற்பதிப்பின் முகவுரை.

ஸ்ரீமஹாபாரதத்துள் சிறந்த பாகமாகிய பீஷ்மபர்வம் பூர்த்தியான விஷயம நமது ஆபதர்களுககெல்லாம் பெருமகிழ்ச சியை விளைவிக்குமென்பதில் சந்தேகமிலலை. மொழிபெயாபபு முழுதும சில வருஷங்களுக்கு முன் பூாததியாகி விததமாக இருந தமையால், இது முன்னரே வெளிவநதிருகக வேண்டுமாயினும ஐரோப்பிய மஹாயுத்த நிகழ்ச்சி காரணமாக நோநத பல அசௌக கரியங்களால் அபபோதே வெளிபபடுதத முடியாமல் நின்றது. தொடங்கிய நற்காரியத்திலுள்ள ஊக்கமும அது நடைபெறவில் லையே என்கிற ஏக்கமும என்மனததில் வேருன்றி நாளுசகுநாள் வளாந்துகொண்டே வநதன. எப்படியும நறகாலம வாய்ககு மென்று எல்லாம வல்ல ஸாவேஸ்வரனது திருவடிகளையே பற்று கக் கொண்டு கவலைக்கடலில நீநதிகொண்டிருந்தேன். அவ னுடைய பரம கருணையால் இநதப பீஷ்மபாவம் பூர்த்தியாகி வெளிவந்ததில் எனக்குண்டாயிருக்கிற பெருங்களிபபுககு ஓர அளவின்று.

இந்தப் பீஷ்மபாவம் ஸ்ரீமஹாபாரதத்திலுள மிக்க பெரு மை வாய்நதது இது, வேதத்துக்கு உபநிஷத்துக்கள் போல மஹா பாரதமாகிய ஐநதாம் வேதத்துக்கு ஸ்ரீ பகவதகீதையாகிய உபநிஷத்தைத் தன்னகத்துடையது. பகவதகீதையின் பெருமை உலகமெலலாம் பரவி நிலவுகிறது. அதன் சொற்பொருட் சிறப புகளைப் பாத்துப் பார்த்து எததேசததினரும எசசமயததின ரும் வியப்படைகின்றனர அதற்கு உலகததிலுள்ள பற்பல பாஷைகளிலும் பற்பல மொழிபெயாப்புக்கள் இருநதலே அதன் பெருமையை நன்கு விளக்கும. மூற்றறிவனன ஸாவேஸ்வரனது திருவாக்கினல் பரம ஆப்தனன அர்ஜுனனுக்குப பெருங்கருணை யுடன் சொலலப்பட்டதென்றல், இதன் பெருமையைச் சொல்ல வும் வேண்டுமா? பாண்டவ கௌரவாகளுக்குப் பிதாமஹரும் பாரதர்களுக்கு நடுநாயகமணிபோன்றவரும் பேரறிவாளரும தெய்வத்தன்மையுள்ளவரும் யாராலும் செய்தற்கரிய பெரிய விர தத்தை மேற்கொண்டு முற்றுப்பெறச செய்தவருமான பீஷ்மரது ப்ரபாவத்தை முக்கியமாகக்கொண்டதென்பதிலும் வேறு சிறபபு என்ன இருக்கிறது? பக்தபராதீனனன பகவான், 'நான் செய்த ப்ரதிஜ்ஞை தவறினும அடியார் செய்த பிரதிஜ்ஞை தவறலாகாது'

என்று ஆஶ்ரித வாத்ஸல்யத்தை அனுஷ்டித்துக்காட்டி, 'அச்சு தன்' என்னும தன் திருநாமத்தை நிலைநிறுத்திக்கொண்டதும இநதப பருவத்திலன்றோ?

திரிசிரபுரம ஸெண்ட் ஜோஸப காலெஜ ஸம்ஸகிருத தலைமைப் பண்டிதா மஹாவிதவான் கவிசிகாமணி ஸாரஸவதஸாரஜ்ஞர் ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் இநதப பீஷ்மபாவத்தையும் மற்ற யுத்த பாவங்களையும், என் வேண்டுகோளுக்கிணஙகி மொழிபெயாத்துதவினாகள். இவாகளுடைய பாஷாஞானமும சாஸதிர பரிஶரமமும யாவராலும கொண்டாடத்தக்கன. இவாகளுடைய உழைபபின பயனாக வெளிவந்த ஹம்ஸீஸந்தேச முதலிய அரிய நூலகளால் இவாகளுடைய கவிததிறமையும இமமொழிபெயாபபால கலவிவன்மையும நன்கு விளங்கும. ஸ்ரீ அகோபில மடத்தில், ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் மஹாவிதவானகள பலா கூடிய மஹாஸதஸில இநத ஸவாமியினுடைய கலவி வனமையையுங கவிததிறமையையும பாராட்டிக கவிசிகாமணி யென்னும பட்டததை அளிததாகளென்றால், இவர்களுடைய பெருமையைச சொலலவும வேண்டுமோ? மஹாபாரத மொழிபெயாபபு வேலையை எடுததுககொண்டதுமுதல் இவர்கள சிறிதும ஶரமம பாராட்டாமல் விரைவில மிகக ஊககத்துடன நிறைவேறறிததநத உதவியை நான் என்றும மறவேன்.

இத்துணைச் சிறப்பு வாய்நத இநதப பருவம அசசிட்டு வெளியிடுதறகு வேண்டிய பொருளுதவி செய்து ஆதரிதத பரமோபகாரிகள, ஆண்டிபபட்டி ஜமீன்தாரும மதுரைத தமிழ்ச்சங்கத்து உப அககிராசனாதிபதியுமாகிய ஸ்ரீமான், S. Rm. M. Ct. பெத்தாச்சி செட்டியாா M. R. A. S. அவாகள. இவவளளற் பெருந்தகையாருடைய கொடைச சிறபபை என்ன வெனறு புகழ்வது! இவர்கள உபகரித்தமாதிரி மிகப் பாராட்டற்பாலது. முந்திய பழக்க மில்லாமலும இன்னது செயய வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேளாமலும பிறருடைய நிாபபநதஙக ளில்லாமலும் வேறு பயனை எதிாபாராமலும அவாகள் காலததிற் செய்த பேருதவி புனைநதுரைககும அளவினதன்று. யாசிககும துன்பத்தை நான் அடையாமல் இவாகள கொடுதததன் சிறபபை நினைக்குங்கால் என் மனம் மிக இன்புறுகிறது.

"கரப்பிலா நெஞசிற் கடனறிவார் முன்னின்று,
இரப்புமோா ஏஎ ருடைதது"

என்னும் பொய்யாமொழியிலே பொருளே இவர்களிடத்து உண்மையாகக் கண்டேன். கல்வி வளர்சியில் பேருக்கம் கொண்டவர்களும புலவர்களுககு எப்பினில் வைபபுமாகிய ஸ்ரீமான் செட்டியார்வர்களுக்கு ஆயுள் ஆரோக்கிய முதலிய எல்லா நன்மைகளேயும மேன்மேலும பொழிநதருளுமபடி எல்லாம வல்ல இறைவனே எபபொழுதும பிராததிதத லன்றி யான் செய்யும கைமாறு யாதுளது?

ஸ்ரீ பகவத கீதையை மதத்ரய பாஷ்யங்களுடன் மொழிபெயர்தது வெளியிடுவதாக நிசசயித்திருநதேன். பகவத்கீதைக்கு அநத அந்த மதசசாரபாக அநேக மொழிபெயரபுகளிருதத லாலும வேறு சில காரணங்களாலும் அதனை இப்பொழுது செய்யாமல நிறுத்திக்கொண்டேன். கீதையின் மொழிபெயரபு, மஹாபாரதத்தின் மற்றப பகுதிகளேப போலவே, ஒரு மதச சாரபாக இராமல் பொதுவாக இருக்க வேண்டுமெனபதே எனது விருபபம. ஆயினும, வேதாநத பாகங்கள் வருமபொழுது அங்ஙனம் செய்தல் சாத்தியப்படவில்லை. மொழிபெயரபபவாகள எநத மதத்தைச சாநதவர்களோ அநத மதத்தின் சாரபாகத்தான் மொழிபெயரப்பு அமைகிறது. இதனை, பகவதகீதையில் மாத்திரமே யன்றி மற்றப பருவங்களிலும வேதாநதபபகுதிகள் வருமிடந்தோறும் காணலாம. இந்தமாதிரியான இடங்களில் தங்கள் மதக்கொள்கைகளுக்கு முரணுயிருபபதாக நினைபபவாகள் தங்கள் தங்கள் சமயநூல்களில் வல்ல பண்டிதர்களிடம கேட்டுத் தெரிந்துகொள்க.

இநதப பருவத்தில் ஆயுதப்பெயாகளும் வாகதியப்பெயர்களும் பல வநதுளளன. அவைகளுள சிலவற்றுகுத தமிழ்ப் பெயர் கிடைக்காமையாலும சிலவற்றுக்கு ஒவ்வொருவர் ஒவவொரு விதமாகப பொருள் கூறுதலாலும அவற்றையும மறறுமுள்ள யுத்த பர்வங்களில் காணப்படும் அவவிதச சொற்களையும் தொகுத்துப் பொருளெழுதி அகராதியாக அசசிட நினைதிருக்கிறேன்.

இனி மற்றப் பர்வங்களேயும் அச்சிட்டு வெளியிடுவதற்கான எலலா வித ஆற்றலையும எனக்கு அளித்தருளும்படி எல்லாமவலல ஸர்வேஸ்வரனை பிராத்திக்கிறேன்.

இங்ஙனம்,

15-4-1919

ம. வீ. இராமானுஜாசாரியன்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்

கர்ண பர்வம்

திரிசிரபுரம்
ஸெயின்ட் ஜோஸப் காலேஜ் ரிடயர்ட் ஸம்ஸ்கிருத
தகைமைப் பண்டிதர்,
மஹாவித்வான், ஸாரஸ்வதஸாரஜ்ஞர், கவிசிகாமணி,
மஹாமஹோபாத்யாய
ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸன
அவர்களால் மொழிபெயர்த்துப்பெற்று,

கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்த் தகைமைப் பண்டிதர்
மணலூர் – வீரவல்லி,
இராமானுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ்
கும்பகோணம்

All Rights Reserved]

[விலை ரூ. 4—8—0

ஸ்ரீஃ

முதற் பதிப்பின்

முகவுரை

ஸ்ரீ மஹாபாரதத்தில், யுத்தபர்வங்களுள் மிகச் சிறிதான கர்ண பர்வம் இப்போது பூர்த்தியானதைப் பெருமகிழ்ச்சியுடன் அன்பர்களுக்குத் தெரிவிக்கலானேன். சில மாதங்களுக்கு முன்னமேயே வெளிவந்திருக்கவேண்டிய இந்தப் பர்வம், போதுமான ஸௌகர்யங்களில்லாமையால் வெளிவராமல், இப்போதாவது வெளிவந்தது ஸ்ரீகண்ணபிரானுடைய பூர்ணகிருபையினாலேயே.

கர்ணனுக்கு முன்னும் பின்னும் படைத்தலைமை வஹித்தவர்கள், க்ஷத்ரிய தர்மத்தில் சிறிதுந் தவறாமல் போர்செய்திருந்தாலும், பாண்டவர்கள்பக்கம் நியாயமிருந்ததால் அவர்களிடத்து அன்புடையவர்களாகி, அவர்களோடு நட்புக்கொள்ளும்படி துரியோதனனுக்குப் பலமுறை நற்புத்தி கூறினவர்கள். கர்ணனோ, பாண்டவர்களிடத்து ஆழ்ந்த பகைமை கொண்டவனும் அவர்களிடத்துத் துரியோதனனுக்குப் பகைமை மேன்மேலும் வளர்ச்சி அடைவதற்கு முக்ய காரணமாயிருந்தவனுமாவான். ஆதலின், அவன் படைத்தலைமை வகித்து நடத்திய யுத்தம் எவ்வளவு கடுமையாக இருந்திருக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.

[1] அனுக்ரமணிகாத்யாயத்தில், ஸ்ரீ மஹாபாரதத்தை ஒரு விருக்ஷமாக உருவகப்படுத்தியவிடத்து இந்தக் கர்ண பர்வம் அதன் புஷ்பமாகக் கூறப்பட்டிருத்தலே இதன் பெருமையை நன்கு விளக்கும்.

பர்வஸங்கிரகாத்யாயத்தில், [2] 'இதில் புத்திசாலியான சல்யனை ஸாரதியாக நியமித்ததும், புராதன சரித்திரமாயுள்ள திரிபுரஸம்ஹாரமும், யுத்தப் பிரயாணத்தில் கர்ணனுக்கும் சல்யனுக்கும் நடந்த குரூரமான ஸம்வாதமும், தாஷணமடங்கிய ஹம்ஸகாகீயமென்னும் கதையும், பாண்டியன் மஹாத்மாவான அஸ்வத்தாமாவினால் கொல்லப்பட்டதும், [3]தண்டஸேனன் தண்டன் இவர்களுடைய வதமும், தர்மராஜாவாகிய யுதிஷ்டிரரும்

[1] ஆதி பர்வம் 11 ம் பக்கம். [2] ஆதி பர்வம் 49-ம் பக்கம்.

[3] இவனுடைய பெயர் தண்டதாரனென்றே மற்ற இடங்களில் காணப்படுகிறது.

கர்ணனும் இரண்டு தேராளிகளாகச் சண்டைசெய்தபோது வில்லாளிகள் யாவரும் பார்த்திருக்கையில் கர்ணனுல் யுதிஷ்டிரருக்கு பிராணஸந்தேகம் உண்டாக்கப்பட்டதும், யுதிஷ்டிரருக்கும் அர்ஜுனனுக்கும் பரஸ்பரம் கோபமுண்டானதும், அந்தச் சமயத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனைச் சமாதானப்படுத்தியதும், பீமஸேனன் பிரதிஜ்ஞை செய்து யுத்தத்தில் துச்சாஸனன் மார்பைப் பிளந்து ரத்தத்தைக் குடித்ததும், கர்ணனும் அர்ஜுனனும் இரண்டு தேராளிகளாகச் செய்த சண்டையில் மகாரதனுகிய கர்ணனை அர்ஜுனன் கொன்றதும் சொல்லப் பட்டன' என்று இதன் கதைச் சுருக்கம் கூறப்பட்டுள்ளது. நன்னட்பின் லக்ஷணங்களையும் பலவகையான தர்மங்களையும் நீதிகளையும் இந்தப் பர்வத்தில் நன்முக அறிந்துகொள்ளலாம்.

இந்தப் பர்வத்தை நான் பரிசோதித்துவருகையில், 84-வது அத்தியாயத்தின் இறுதியில் [1] அர்ஜுனன் திருதராஷ்டிர குமாரர்களில் பதின்மரைக் கொன்றதாக இருந்தது. அங்ஙனம் பொருள் கொள்வது, திருதராஷ்டிர குமாரர்கள் நூற்றுவரையும் தானே கொல்லுவதாகப் பீமஸேனன் செய்த பிரதிஜ்ஞைக்கு விரோதமாவதுபற்றி, என் மனத்தில் பெருங் கவலையை உண்டாக்கிற்று. இந்தச் சந்தேகத்தைக் குறித்துப் பல பண்டிதர்களிடம் விசாரித்து வருகையில், சென்னை பிரெஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்கிருத போதகாசிரியராகிய ***Mahamahopadyaya, Vidyavacaspathi*** பிரம்ம ஸ்ரீ ***Prof. S.*** குப்புஸ்வாமி சாஸ்திரிகள், **M. A., I. E S.** அவர்களிடம் தெரிவித்தபோது, அவர்கள், 'புனுவில் ***Bhandarkar Oriental Research Institute*** என்று டாக்டர் பந்தர்க்கார் பெயரால் அமைக்கப்பட்டுள்ள கீழ்நாட்டுப் பாஷா ஆராய்ச்சிக் கழகத்தார் ஸ்ரீ மஹாபாரதத்தை ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். இதுவிஷயமாக அவர்கள் ஒரு நிச்சயம் செய்திருப்பார்கள். அவர்களுக்கு எழுதினுல் உண்மை விளங்கும்' என்று சொன்னுர்கள். அங்ஙனமே அவர்களுக்கு எழுதலாமென்றெண்ணி, என்னிடமுள்ள வடமொழி மஹாபாரதப் பிரதிகளையெல்லாம் வைத்து ஒப்புநோக்கினேன். என் மொழிபெயர்ப்பிற்கு மூலமாயுள்ள கும்பகோணம் பதிப்பில் 'அந்யே மூடாஃ' (அன்ய மூடாஃ) என்ற பாடம் காணப்பட்டது. அப்போது,

[1] இதன் விவரத்தைக் கர்ண பர்வம் 377-ம் பக்கத்தில் காண்க.

'இதற்கு வேறு பொருள் செய்யலாமே' என்ற ஆலோசனை தற்செயலாக என் மனத்தில் தோன்றிற்று. பிறகு, முன் பின் சுலோகங்களைப் பலமுறை படித்துப்பார்த்ததில் எனக்குத்தோற றிய அர்த்தமே சரியானதென்று எனக்கு ஓர் உறுதியுண்டா யிற்று. இதனை ஸ்ரீமான் **Prof.** குப்புஸ்வாமி சாஸ்திரிகளவர்களி டம் திரும்பவும் தெரிவித்தபோது, அவர்கள், இந்தப் பொருளே சரியானதென்றும் பொருத்தமானதென்றும் சந்தோஷித்துக் கூறி, அப்படியே பதிப்பித்துவிடலாமென்று மிகவும் வற்புறுத் திச் சொன்னார்கள். அவ்விதமே பதிப்பித்திருக்கிறேன். புனவி லுள்ள ஷே கழகத்தாருக்கு இதைப்பற்றி எழுதியதில், அவர் கள், 'இந்த இடம் இன்னும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை' என்றும், 'இப்பொழுது அவகாசமில்லாமையால் இதைப்பற்றிப் பின்பு தெரிவிப்போம்' என்றும் பதிலெழுதிவிட்டார்கள். நீலகண்டீய வ்யாக்யான பாடத்திற்கும் பிரதாபசந்திர ராய், **C.I.E.**, மன்மதநாத தத்தர் இவர்களுடைய ஆங்கில மொழி பெயர்ப்புக்கும், நான் கொண்ட பொருள் மாறுபடுத்தலால், உண்மை எதுவாயிருக்குமோவென்று மனம் அஞ்சுகிறது.

யுத்த பர்வங்கள் ஐந்தினையும் மொழிபெயர்த்துக் கொடுத்து எனக்குப் பேருதவிசெய்த திரிசிரபுரம், ஸெயின்ட் ஜோஸப் காலேஜ், ஸம்ஸ்கிருத தலைமைப் பண்டிதர், மஹாவித்வான், மஹாமஹோபாத்யாய, கவிசிகாமணி, ஸாரஸ்வத ஸாரஜ்ஞர், ஸ்ரீ. உ. வே. **T. V.** ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிகளவர்கள் இவ் விஷயமாக எடுத்துக்கொண்ட பரிஶ்ரமத்திற்கு நான் என்றும் நன்றிபாராட்டக் கடமையுற்றிருக்கிறேன்.

ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்பை மிகவும் ஆதரித்து எனக்கு ஊக்கமளித்துவந்த திருப்பனந்தாள் ஆதீனகர்த்தரவர்க ளாகிய மகாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாஸி சோமசுந்தரத் தம்பிரானவர்கள் காலஞ்சென்ற பிறகு, அந்த ஸ்தானத்திற்கு வந்த மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாஸி சொக்கலிங்கத் தம்பிரானவர்களோடு ஒரு ஸமயம் நான் ஸல்லாபம் செய்து கொண்டிருந்தபோது, அவர்கள், 'கர்ண பர்வத்திற்கு வேண்டிய செலவை நாமே பொறுத்துக்கொள்வோம்' என்று பரமதிருப்தி யோடு கூறி, வேண்டிய பொருளுதவியும் உடனே செய்தார்கள். அல்லாமலும், எனக்கு முட்டுப்பாடு உண்டாகுங்காலத்திலெல் லாம் குறிப்பறிந்து, வேண்டிய உதவிகளைச் செய்து அவர்கள்

என்னை ஆதரித்துவந்தார்கள். அங்ஙனம் உதவிபுரிந்த அந்தப் பெருந்தகையாளர்களை நான் கர்ணனென்றே நினைத்தேன். அவர்களுக்குப்பின், இப்போது அந்த ஸ்தானத்தில் வீற்றிருக்கும் மகாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ. காசிவாஸி சொக்கலிங்கத் தம்பிரானவர்களும், அவர்களுடைய இளவரசான மகாகனம் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ. காசிவாஸி சாமிநாதத் தம்பிரானவர்களும் இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயத்தில் எனக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து ஆதரித்துவருகிறார்கள். இவர்களுடைய பெருமைகளை முன்பு துரோணபர்வ முகவுரையில் தெரிவித்திருக்கிறேன். இந்த ஆதீனத்திலிருந்து நான் அடைகிற உதவிகள் மிகப் பல. இந்த ஆதீனம் நீடுழி தழைத்தோங்கவேண்டுமென்று நெஞ்சாரநினைத்தலும் வாயார வாழ்த்தலுமன்றி யான் செய்யக்கூடிய கைம்மாறு யாதுளது!

இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயத்தில் நான் அடைந்துள்ள பலவகையான சிரமங்களைச் சுருக்கமாகவாவது இங்கே கூறுமலிருக்க முடியவில்லை. நான் மஹாபாரத கைங்கர்யத்தைத் தொடங்கியபோது, பதிப்புவேலை நடந்தமாதிரி நடந்துவந்தால் பல வருஷங்களுக்கு முன்னமே இந்த மஹாபாரதம் பூர்த்தியாகியிருக்கும். இதப் பதிப்பு வேலையை நான் தொடங்கியபொழுது, இதற்கு வேண்டிய ஸகாயங்களெல்லாம் செய்வதாக வாக்களித்து எனக்கு ஊக்கமுண்டாக்கிப் பிறகு ஏனென்று கேளாமையோடு தாம் மற்ற சந்தாதாரர்கள்போல ஸஞ்சிகைகள் வாங்கிவந்ததையும் நிறுத்திவிட்ட கனவான்கள் சிலர். சொல்லளவில் மிகத் தாராளமாகக் கூறி எனக்கு நம்பிக்கையை உண்டாக்கிப் பலமுறை என்னை அலையச்செய்து என் காலத்தை வீணுக்கி என் மனத்தைப் புண்ணுக்கியவர் சிலர். இந்த வேலையை நிறுத்திவிடலாம் என்று நற்புத்தி கூறின பெருஞ்செல்வர் சிலர். பல வருஷங்கள் புத்தகத்தை விரும்பி வாங்கி வந்து பணம் கேட்டபொழுது ராமாயண பாரதங்களை இழித்துக் கூறி, என் மனத்திற்கு மிக்க வருத்தத்தை உண்டுபண்ணின கனவான்கள் சிலர். இவர்களுடைய பழக்கங்களால் என் மனத்திலுண்டான புண் ஆறுவதற்கு, இளமை தொடங்கி என்னிடத்தில் மிக்க அன்புடையவர்களும் இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயமாக அடிக்கடி என்னைத் தூண்டியும் பலமுறை லிகிதங்கள் எழுதியும் பொருள் உதவி

செய்தும் என் மனத்திற்கு மிக்க ஊக்கத்தை அளித்துவருபவர் களும் ஸதாசாரஸம்பன்னர்களும் ஸத்தர்மபரிபாலகர்களுமான குமபகோணம் பிரம்மஶ்ரீ Prof. K. சுந்தரராமையர், M. A. அவர்களும், வித்வஜ்ஜன போஷகர்களும் பரோபகார சீலர்களு மாகிய சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் ஶ்ரீமான் V. V. ஶ்ரீநிவாஸ ஐயங்கார், B A., B.L. அவர்களும் போன்ற சில உத்தம புருஷர் களுடைய இன்சொல்லும் நன்முற்றலும் ஸல்லாபமுமே நன்மருந்தாக உள்ளன.

'கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித் — தம்மாலியலுதவி தாம்செய்வர்' என்றபடி, சில நண்பர்கள் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்தல் முதலிய பல உதவி களை இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயமாகச் செய்துவருகின் றனர். ஶ்ரீ கண்ணபிரான் திருவருளால் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகுக!

இந்த நற்காரியம், தக்க உதவியில்லாமையால், நான் எண் ணியபடி விரைவில் நடைபெறுமலிருப்பதைப்பற்றிப் பலமுறை தெரிவித்துக்கொண்டிருக்கிறேன். ஆதிதொடங்கி இந்த மஹா பாரதத்தைச் சிரத்தையுடன் வாங்கிப் படித்துவரும் சந்தாதாரர் களான ஆப்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கையொப்பமா வது சேர்த்துக்கொடுத்து இந்த மஹாபாரத கைங்கரியத்தைப் பூர்த்திசெய்வித்து, அதனால் வரும் புகழ்புண்ணியங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களை மீண்டும் பிரார்த்திக்கிறேன்.

இனி வெளிவரவேண்டிய பர்வங்களை விரைவில் வெளிவரச் செய்யவும், ஶ்ரீமஹாபாரத சம்பந்தமாக நான் வெளியிடஎண்ணி யிருக்கிற ஆராய்ச்சிக்குறிப்பு அபிதான விளக்கம்முதலியவற்றை இனிது நிறைவேற்றவும் வேண்டிய எல்லாவித ஆற்றல்களையும் எனக்கு அளித்தருளும்படி பாண்டவ ஸஹாயனை ஶ்ரீபார்த்த ஸாரதிப் பெருமானுடைய திருவடித் தாமரைகளை எப்பொழு தும் வணங்குகிறேன்.

மயிலாப்பூர்,
5—1—1923.

இங்ஙனம்,
மு. வீ. இராமானுஜாசார்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

சல்ய வைளப்திக ஸ்த்ரீபர்வங்கள்.

திருச்சிராபுரம்

ஸெண்ட் ஜோஸப் காலேஜ் ரிடயர்ட் ஸம்ஸ்கிருத

தலைமைப் பண்டிதர்,

மஹாவித்வான், ஸாரஸ்வதஸார்ஜ்ஞர், கவிசிகாமணி,

மஹாமஹோபாத்யாய

ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யர்

அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

தும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்த் தலைமைப் பண்டிதர்

மணலூர் - வீரவல்லி,

இராமானுஜாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

சென்னை

கேசரி அச்சுக்கூடம்.

விலை ரூபா 3 : தபால் சார்ஜ் வேறு.

1933.

(*All Rights Reserved.*)

ஸ்ரீ:

முதற்பதிப்பின் முகவுரை

ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்பில், சலயபர்வமும் ஸௌப்திக பாவமும ஸதரீபாவமும சேர்ந்து வெளிவநதது, அன்பர்களுககுப பெருமகிழ்ச்சியைத தரும. இநதப்புஸதகம சிலமாதஙகளின் முன்னமே வெளிவநதிருககவேண்டும அங்ஙனம வெளிவராமைககுக காரணம, நான் முனபு பலமுறை தெரிவிததிருக்கிறபடி, போதிய அளவு பொருளுதவி கிடைககாமையே, அதனோடு, என் வாஸததை மயிலாபபூரைவிடடு இவ்வூருக்கு மாற்றியதில இஙகே வேண்டிய ஸௌகாயஙகளை அமைததுக்கொள்ள நேர்நததும மற்றொரு காரணமாகும. இநத ஸதகைஙகர்யம் இம்மட்டில் சிறிது காலதாமதத்தோடாவது நடைபெற்றுவருவது, ஸர்வசகதனான ஸாவேஶ்வரனுடைய பரமகிருபையினாலேயே.

ஸ்ரீமஹாபாரதததில் ஒவவொரு பர்வததிலும தனித்தனியான கவை நிரமபியிருக்கும. சததுருநாசமே முழுவெற்றியுமாதலாலும், பாரதயுதததுக்கே முககிய காரணமான துர்யோதன வதம இந்தப்பர்வஙகளில் சொலலபபடுவதாலும், இந்தப் பர்வஙகள சிறபபுடையன. ஸ்ரீமஹாபாரதத்திற்கு, 'ஜயம்' என்று ஒரு சிறபபுபபெயர் உண்டு. அநதப்பெயரை அதற்கு உறுதிப்படுததுவன இநதப் பர்வங்களே. மஹாபாரதத்தை ஒரு விருக்ஷமாக உருவகம செயத இடததில * சல்யபர்வத்தை அந்த விருக்ஷததிலுள்ள மலரின் மணமென்றும ஸதரீபர்வத்தையும் ஐஷீகபர்வததையும் அம்மரததின் நிழலென்றும வர்ணித்திருப்பதே இநதப் பர்வங்களின் சிறப்பை நன்கு விளக்கும. இந்தப் பர்வங்களிலடங்கிய கதைச்சுருக்கததை ஆதிபர்வம் † பர்வஸங்க்ரஹ அத்யாயத்தில காண்க. இநதப் பர்வஙகளில், அஶ்வத்தாமா துாயோதனனிடத்தும் வாஸுதேவா பாண்டவர்களிடத்தும் காட்டிய நட்பும் பாணடவபக்ஷத்தார் திருதராஷ்டிரனுக்கும காந்தாரிக்கும் கூறிய ஸமாதானங்களும் காந்தாரி கிருஷ்ணனுக்கு யுத்தபூமியைக்காட்டிக கூறியவைகளும மிகப்பாராட்டற்பாலன.

ஸ்ரீமஹாபாரத கைங்கர்யத்தைத் தொடங்கிப் பலவருஷங்கள் ஆயினமையால், அதனை விரைவில் பூர்த்திசெய்யும் விருப்பத்

---

* ஆதிபர்வம, பககம். கக. † ஆதிபர்வம், பக்கம். ௫0.

துடன் நான் சென்னைக்குப்போனது முதலிய விவரங்களைக் கர்ண பர்வ முகவுரையில் தெரிவித்திருக்கிறேன். சென்னையில் 2-வருஷ காலம் வஹித்ததில் புதிய ஸஞ்சிகைகளிற் சிலவும இரண்டாம முறை பதிப்பிக்கபபடவேண்டிய பழைய ஸஞ்சிகைகளிற் சிலவும அச்சிட்டுமுடிந்தன. புதியஸஞ்சிகைகளை வெளியிடுவதோடு பழைய ஸஞ்சிகைகள் பலவற்றை இரண்டாமுறை பதிபபிகக நோந தமையால், பதிபபுவேலையை நிாவகித்து நடததுவது மிகசசிர மமாயிருந்தது. வேலையை நடத்தமுடியாமையால், மேல் இன்னது செய்வதென்று தோன்றுமல் என்மனம மிகத்தளர்ச்சியுற்றது. வேலையை முழுதும நிறுததிவிடலாமா அலலது யாரேனும ஒப் புக்கொண்டால் அவாகளிடம் கொடுத்துவிடலாமா என்றுகூடச சில ஸமயங்களில ஆலோசிததேன். இநத மஹாபாரதமொழி பெயாப்பை ஆதிதொடங்கி ஆதரிததுவருபவர்களும இந்த மொழி பெயாப்பை மூலததோடு ஒபபிட்டுப் பாாதது இதில் பரமதருபதி அடைபவாகளும் இது விரைவில் பூர்த்தியாகவேண்டுமென்னும விருப்பம் மிக உடையவர்களுமான ஸ்ரீமான திவான்பகதூர, G. கிருஷ்ணமாசாரியரவர்கள், ஸ்ரீமான Sir M. C T. முதலிய செட்டியாரவாகள், Kt., ஸ்ரீமான் R. நாராயண ஐயரவாகள, M. A., Bar-at-Law, I. C. S. ஸ்ரீமான் ராவ்பகதூர, V T கிருஷ் ணமாசாரியரவர்கள, ஸ்ரீமான் ராவ்பகதூர, N. கோபாலஸ்வாமி ஐயங்காரவாகள் முதலான சில கனவானகள் மஹாபாரதப் பதிபபு வேலை விரைவில் நடைபெறுமலிருபபதையும அதற்குக் காரணத் தையும் அறிநது சென்னையிலுள்ள தனகள் ஸ்நேகிதர்களுடன் கலந்து ஆலோசித்துத் தனகளுக்குள் கையொபபம் செய்து சில தொகை சேகரித்து என்னிடம் கொடுத்து, வேண்டிய உதவிகள தாமே வருமென்றும சிறிதும மனத்தளர்ச்சியின்றி ஸஞ்சிகை களை வெளியிடவேண்டுமென்றும் சொல்லி எனக்கு மிக்க மன ஊக்கத்தை அளித்தார்கள். மிக்க தளர்ச்சியுற்று நின்றுபோ கும் தருணத்திலிருநத ஸ்ரீமஹாபாரதப் பதிப்பு திரும்ப நடை பெறத்தொடங்கியது இநதப பரமோபகாரிகளினுடைய ஆதரவி னலேயே. இநத ஸமயத்தில் அவாகள் செய்த பேருதவியானது, வாடிய பயிருக்கு மழைபெய்ததுபோல இருந்தது. அப்பொழுது கையொப்பம் செய்து உதவிபுரிநத பரமோபகாரிகளினுடைய பெயர்களை மிக்க நன்றியறிதலுடன் இதனடியில் குறித்திருக் கிறேன்.

ரூ.

ஸ்ரீமான் திவான்பகதூர் G. கிருஷ்ணமாசாரியரவர்கள்,
Secretary, Legal Department, ஹைதராபாத் 500

		ரூ.
ஸ்ரீமான்	ராவ்ஸாகிப் Sir. M. C. T. முத்தைய செட்டியார் அவர்கள் Kt சென்னை	500
,,	R. நாராயண ஐயரவர்கள் M.A., Bar-at-Law I. C. S. District judge, சிற்றூர்.... .	50
,,	ராவ்பகதூர் V. T. கிருஷ்ணமாசாரியா அவாகள டிஸ்ட்ரிக்ட் கலெக்டா, ராமநாதபுரம	50
,,	ராவ்பகதூர் N கோபாலஸ்வாமி ஐயங்காரவாகள B.A.B L ,Registrar General of Panchayats, சென்னை	50
,,	K. கோவிந்தாசாரியரவாகள் (Messrs Best & Co) சென்னை	250
,,	ராவ்பகதூர் C. V. விஸ்வநாத சாஸ்திரிகளவாகள B.A.B L., District Judge, தஞ்சை	25
,,	ராவ்பகதூர T. A. ராமலிங்க செட்டியாரவர்கள், கோயமபுத்தூர்	50
,,	C. V. வேங்கடரமண ஐயங்காரவர்கள B A B L, கோயம்புததூர்	50
,,	T. நரஹிம்ம ஐயங்காரவாகள் B.A B L, High Court Vakil, சென்னை	50

இவர்களெல்லாம் முன்னமே கையொப்பஞசெய்து புஸ்தகம் வாங்கிக்கொண்டு வருபவர்கள்.

இந்தப் பரமோபகாரிகளுக்குக் கண்ணபிரானுடைய திருவருளால் எல்லா நன்மைகளும் உண்டாகுக. அவர்களுடைய புகழ் உலகுள்ளளவும் தழைத்தோங்குக. இப்படிப்பட்ட பெருந்தகையாளர்களுடைய அபிமானததைப் பெற்றிருத்தலால், ஸ்ரீ மஹாபாரத கைங்கர்யம விரைவில பூர்த்தியாகிவிடுமென்பது நிச்சயம். அடுத்த புஸதகம் 'ஸ்ரீமஹாபாரதம் முற்றிற்று' என்று போடப்பெற்று வெளிவருவதே அதற்குத் தக்க ஸாக்ஷியாகும். பல வருஷங்களாயினமையாலும, பிராயமுதிர்ச்சியும் தேகத்தளர்ச்சியும் அதிகரிதது வருதலாலும, மேற்கொண்ட இப் பெருங்கார்யம் பூர்த்தியாகவேண்டுமே என்னும பெருங்கவலையோடிருக்கிற எனக்கு மஹாபாரதம் சீக்கிரம பூர்தியாகுமென்னும் உறுதிஉண்டாகும்போது என்மனத்தில் உண்டாகும் உவகைக்கு ஓர் அளவில்லை. எல்லாம்வல்ல ஸர்வேச்வரனது விருப்பத்தை இனிது நிறைவேற்றியருளுக.

பீஷ்மபர்வமுதல் ஸ்த்ரீபர்வம் வரையிலுள்ள ஆறுபர்வங்களையும் மொழிபெயர்த்து உதவிய திரிசிரபுரம் ஸெண்ட்ஜோ,

RAO LIB

ஸெப்ஸ காலேஜ் ஸம்ஸ்கிருத தலைமைப் பண்டிதர், மஹாவித்வான், ஸாரஸவத ஸாரஜ்ஞர், கவிசிகாமணி, ஸ்ரீ. உ வே. T. V. ஸ்ரீநிவாஸாசாரியா ஸவாமியினுடைய பரமோபகாரததை நான் எநநாளும மறவேன். அவர்கள ஒபபுககொண்ட பர்வங்களைப் பல வருஷஙகளின் முனனமே மொழிபெயாத்துக் கொடுதது க்ருதகருதயாகளாகப் பரம ஸநதோஷததோடு இருக்கிறார்கள். அவர்கள மொழிபெயாததுஉதவிய ஆறுபர்வஙகளும அசசிட்டு வெளிவநது உலகததுக்குப பயனளிதது வருதலைப பாரககும் போது, அவாகளுககுப பரமதிருபதியாயிருககும இன்னும் இநதமாதிரி நலல காரயங்களைச செயயுமபடி நீண்ட ஆயுளையும் ஆரோகயததையும மனவூககத்தையும அவாகளுக்கு ஸாவேஶ்வரன் அளிததருள்க

மேலே தெரிவிததபடி, இநத மஹாபாரத கைங்காயத்தைப் பூர்ததிசெய்தறகாகவே, நான் சென்னையில் போய் வஸிததேன். சென்னைவாஸம புஸ்தகப்பதிப்புக்கு மிகக ஸௌகர்யமுளளதானாலும, அஙகு வஸிபபதில செலவு அதிகமாதலாலும அதற்குத் தக்கபடி உதவிகள கிடைககாமையாலும ரொநத ஊராகிய இஙகு வநது வஸிக்கிறேன. இவவூா புஸதகபபதிபபு வேலைக்கு அவ்வளவு ஏறறதனறு. ஆனாலும, லோகோபகாரமான இநத ஸத்காரயததை விரைவில பூரததிசெய்தற்கு எனனால் இயனற அளவு முயலுவேன எலலாமவலல ஸாவேஶவரன் பரமகருபையால் நிறைவேறறியருளவேண்டும நன்கொடை அளிததும், கையொப்பம்செய்தும,கையொபபங்கள் சேர்ததுககொடுததும,இநத அரிய பெரிய காரயததை இதுவரையில் ஆதரிததுவருகிற ஆப்தாகள், தயைசெய்து, மற்றப பகுதியும பூரததியாகும் வண்ணம், தமமாலியன்ற உதவிகளைச செயது ஆதரிககவேணடுமென்று அவர்களை நிரமப பராரததிக்கிறேன்.

மஹாபாரத ஸஞசிகைகளை வெளியிடுவதற்கு வேண்டிய உதவிகளைச செய்து எனக்கு ஊக்கமளித்து வருகிற ஆப்தர்களுக்கு இநத ஸதகாரயத்திலுளள அபிமானம் மேன்மேலும் வளரசசெய்யவும அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் அளித்தருளவும், எல்லாம வல்ல இறைவனது திருவடித்தாமரைகளை எப்பொழுதும தியானித்துக்கொண்டிருக்கிறேன்.

மணலூா,
நரசிஙகன்பேட்டை P. O,
1—11—1923.

இங்ஙனம்,
ம. வீ. இராமானுஜாசாரியன்.

6352

ஸ்ரீ:

ஸ்ரீமஹாபாரதம்

சாந்திபர்வம்.

(மோக்ஷதர்மம்.)

தும்பீகோணம், அத்வைத ஸபாபண்டிதர்கள், மஹாவித்வான்,
ப்ரம்மஶ்ரீ, வேதாந்தகேஸரி, மஹாமஹோபாத்யாயர்,
பைங்காநாடு,

கணபதிசாஸ்திரிகள்

அவர்களாலும்,

மஹாவித்வான், ப்ரம்மஶ்ரீ,
கருங்குளம்,

கிருஷ்ணசாஸ்திரிகள்

அவர்களாலும்

மொழிபெயர்க்கப்பெற்றீ,

தும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம. வீ. இராமானுஜாசார்யரால்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா - 4 தபால்சார்ஜ் அணா - 8

Madras:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
32, MOUNT ROAD.

1915

(All Rights Reserved.)

MAHAMAHOPADHYAYA
D. V. SWAMINATHAIYER LIBRARY
THIRUVANMIYUR, MADRAS.

ஸ்ரீ:

முகவுரை.

ஸ்ரீமஹாபாரதத்தின் * 'பெரும்பலம்' என்று ஸ்ரீ வேதவியாஸபகவானே கூறியிருக்கிற சாந்திபர்வத்தின் தமிழ்மொழிபெயர்ப்பானது பூர்த்தியாகி வெளியான விஷயம் யாவருக்கும் பெருமகிழ்ச்சியை விளைக்குமென்பதில் ஸந்தேகமில்லை. மிகப்பெரியதும் கடினமுமான இப்பர்வத்தில் எளிதிற் பொருள்விளங்காத சுலோகங்கள் மற்றப்பர்வங்களைக் காட்டிலும் அதிகமாகவுள்ளன. ராஜதர்மமும், ஆபத்தர்மமும், மோக்ஷதர்மமுமாகிய பரமதர்மங்களைச் சொல்லுகிற பாகமானதால் இதில் விஷயமும் மிக்ககடினமானது. பிரஸித்திபெற்ற பெரியபண்டிதர்களே மோக்ஷதர்மத்தில் அநேகவிடங்களில் உண்மைப் பொருள் விளங்கவில்லையென்று கூறுவார்களானால் இதைப் பற்றி நான் சொல்லவும்வேண்டுமோ? மஹாபாரதத்தை மொழிபெயர்த்து வெளியிட உத்தேசித்து, என்விருப்பத்தை முதலில் சிலபெரியோர்களிடத்தில் விஜ்ஞாபித்தபோது, அவர்கள், 'சாந்திபர்வத்தை மொழிபெயர்ப்பது ஸ்ரமமானகாரியம்; அதனுள்ளும் மோக்ஷதர்ம மொழிபெயர்ப்பு அதிக ஸ்ரமமாயிருக்கும். ஆதலால், அதுதவிர மற்றவேறினல்தான் மஹாபாரதமொழிபெயர்ப்பு நிறைவேறினதாக நம்பலாம்' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதின் உண்மை அனுபவத்தில் எனக்கு நன்கு விளங்கிற்று. இப்பர்வத்தின் வேலையினும் என்புத்திக்கும் சரீரத்துக்கும் உண்டான ஸ்ரமமும், ஏற்பட்ட பொருட்செலவும் மற்றப்பர்வங்கள் எல்லாவற்றின் வேலையினும் உள்ளவற்றினும் குறைந்தவையல்ல. இப்பர்வத்தைச் சீக்ரம் பூர்த்தி செய்யவேண்டியதைப்பற்றிப் பல பெரியோர்கள் அடிக்கடி கடிதங்கள் எழுதியும் விசாரித்தும் என் மனத்திற்கு மிக்க ஊக்கத்தை அளித்துவந்தார்கள். பாரதம் முழுவதுமே மொழிபெயர்த்தானதோடு கடினமான பர்வங்களும் அச்சிட்டு வெளியாகிவிட்டபடியால், வெளிவராத மற்றப்பர்வங்களும் ஸர்வேஸ்வரனுடைய திருவருளாலும் பெரியோர்களுடைய அனுக்ரஹத்தாலும் இனி விரைவில் வெளிவருமென்று உறுதியாகச் சொல்லலாம்.

* ஆதிபர்வம் பக்கம் கக, வரி க

முகவிரை.

இப்பர்வத்தின் பொருட்சிறப்புக்கேற்ப, தக்கபண்டிதாகளைக் கொண்டு இதனை மொழிபெயர்க்க விரும்பி, கும்பகோணம அத்வைத ஸபா பண்டிதராகவிருந்த மஹாவித்வான் ப்ரம்மஸ்ரீ, வேதாந்த கேஸரி மஹாமஹோபாத்யாயர் பைங்காநாடு கணபதி சாஸ்திரிகளவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்கள் பெரிதும் மனமுவந்து மொழிபெயர்க்கத்தொடங்கி 240 - ஆவது அத்தியாயம்வரையில் மொழிபெயர்த்து உதவினார்கள்.

சிலகாலஞ்சென்றபிறகு அவர்கள் துறவறம்பூண்டு ஸித்தியடைந்தமையால் எஞ்சிநின்றதும் மிக்க கடினமுமானபாகததை யாரைக் கொண்டு மொழிபெயர்ப்பதெனப் பெருங்கவலையுற்றுச் சாந்திபர்வ வேலையைப் பலநாள் நிறுத்திவைக்கவும் நேர்ந்தது.

இந்நிலைமையில், ஷை அத்வைத ஸபாபண்டிதராக இப்பொழுது விளங்கும் மஹாவித்வான் ப்ரம்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் என வேண்டுகோளுக்கிணங்கி, காலதாமதத்தால் எனக்கு மிகுந்த பொருள் நஷ்டமும் பலவிதமான ஸ்ரமங்களும் உண்டானதை உணர்ந்து இரவும் பகலும் ஓய்வின்றி உழைத்து 240-ஆவது அத்தியாயத்துக்கு மேலுள்ள பாகத்தை அதிவிரைவில் மொழிபெயர்த்துக்கொடுத்து என்கவலையை நீக்கினார்கள். அவர்களுடைய பெருங்கருணையினாலேயே, சாந்திபர்வத்தை முற்றிலும் வெளியிட நான் சக்தனானேன்.

மஹாபாரத மொழிபெயர்ப்பானது பல சிறந்த பண்டிதர்களையும் உதவிக்காக மற்றும்பலரையும் வைத்துக்கொண்டு பலவருடங்கள் செய்யவேண்டிய பெருங்காரியமென்பதையும், அதற்குத் தக்கபடிபொருளுதவியில்லாமல் நான் மிகவும் ஸ்ரமப்பட்டுக்கொண்டிருந்ததையும் அறிந்து கும்பகோணம் பிரம்மஸ்ரீ Professor K. சுந்தரராமையரவர்கள் M. A. ரூபா 200-ம் ப்ரமமஸ்ரீ ஆனரபிள் திவான் பகதூர் ஜஸ்டிஸ் T. சதாசிவையரவர்கள் ரூபா 100-ம் நன்கொடையளித்து உதவினார்கள்.

இப்பெருங்காரியததை மேல்நடதத இயலாமல் 1914-ஆம் ௵ ஜனவரி மாஸத்தில், ஸமாசாரப்பத்திரிகைகள் மூலமாக நான் ஒரு விண்ணப்பஞ்செய்திருந்தேன். அதனைப்பார்த்தபிறகு சென்னை எக்ஸிக்யூடிவ் கௌன்ஸில மெம்பர் மஹாகனம் பொருந்திய Hon'ble Mr P. S. சிவஸ்வாமி ஐயரவர்கள், C. I. E., C. S. I. ரூபா 100-ம்

கொழும்பிலுள்ள Hon'ble Mr. P. இராமநாத முதலியாரவர்களீ ரூபா 200-ம் உதவிபுரிந்து ஊக்கமளித்தார்கள்.

ஆண்டிபட்டி ஜமீன்தாரவர்களாகிய ஸ்ரீமான், S. RM. M. CT. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், M. R. A. S. பிஷ்மீபர் வத்தை அச்சிட்டு வெளியிடச்செல்லும் ரூபா 1000உம் தாங்களே கொடுத்து உதவுவதாக வாக்களித்து முன்னதாக நல்லமையத்தில் ரூபா 500 அனுப்பி என் மனக்கவலையை அகற்றிப் பெரும்புண் ணியத்தைக் கைக்கொண்டார்கள்.

இதற்குமுன் எனக்கு முட்டுப்பாடுகள் நேர்ந்த ஸமயங்களில் கைம்மாறுகருதாது வேண்டிய திரவிய ஸஹாயஞ்செய்து உத்ஸாகப் படுத்திய பிரபுசிகாமணிகளைப்பற்றி யான் அவ்வப்போது உரிய இடங்களில் கூறியிருப்பதை யாவரும் பார்த்திருக்கலாம்.

மேற்கூறிய தமிழ்நாட்டினரையன்றி அயல் நாட்டாராகிய ஐரோப்பிய கனவான்கள் சிலரும் என்னுடைய அஸௌகரியங்களை யறிந்து மனமிரங்கி ஆதரித்து வருகிறார்கள்

இத்தப்பரோபகாரிகளுடையபேருதவியினாலேயே இத்தமஹா இதிஹாஸமானது தமிழுலகிற்குப் பயனுள்ளதாக ஆகிறபடியால் நம தமிழ் நாட்டாரனைவரும் இவர்களிடத்து நன்றிபாராட்டக் கடமை யுற்றிருக்கிறார்கள்.

தேசாபிமானமும் பாஷாபிமானமும் உள்ள பல கனவான்கள் தங்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வதாக வாக்களித்திருக்கி றார்கள். அவர்கள் பெயரையும் செய்யும் உதவியையும் பின்னா வெளி யிடுவேன். இப்பெருங்காரியத்தில் தங்கள் தங்களால் இயன்ற உதவிக ளைசெய்து எனக்குஊக்கமளித்துத் தமிழுலகிற்குப் பேருதவிபுரிந்து ஓயாத இடுக்கண்களுக்கும் கைபொப்பக்காரர்களுக்கும் என் மனப்பூர்வ மான நன்றியைச் செலுத்துகிறேன்.

இங்ஙனம்:

ம. வீ. இராமானுஜாசாரியன்.

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MYLAPORE, CHENNAI-4
3வ873

ஸ்ரீ மஹாபாரத

ஆஸ்வமேதிக ஆஸ்ரமவா
மௌஸல மஹாப்ரஸ்த
ஸ்வர்க்காரோஹண
பர்வங்கள்.

சிறந்த பல ஸம்ஸ்கிருத பண்டிதர்களால்
மொழிபெயர்க்கப்பெற்று,

தஞ்சாவூர் காலேஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர்
மணலூர். வீரவல்லி - இராமானுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றன.

PRINTED AT
THE TATA PRESS,
MADRAS.

விலை ரூபா 3—8—. சார்ஜ் வேறு.

1926.

(*All Rights Reserved.*)

*இவற்றுள் ஆஸ்வமேதிகபர்வம், சென்னை இந்தியா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

மஹாபாரதம், உபநிஷத்துக்கள், இராமாயணம், பாகவதம் கேள்விப்பட்டு நான் ஒருபோதும் இருந்திருந்தேன். இதற்கு முன்னால் மஹாபாரதத்தில் ஏதோ சில சில இடங்களைப் படித்திருக்கிறேனே தவிர முழுப்புஸ்தகத்தையும் படிக்கவில்லை. பலர் கௌரவர்களைத் தின் சரித்திரத்தையே அது தெரிவிப்பதென்றும், படிக்கச்செய்யும் விஸ்தாரமான வர்ணனைகள் அதில் அடங்கியிருக்கின்றன்றும் நான் தவறான அபிப்பிராயங்கொண்டிருந்தமையால், எனக்கு அந்நூலில் வெறுப்பும் இருந்ததுண்டு. நெருக்கமாக அச்சிட்டுள்ள 1000 பக்கங்கள் கொண்ட அந்தப் பெரிய நூலை அணுகுவதென்றால எனக்குப் பயமாயிருந்தது. ஆனாலும், அதைப்படிக்கத் தொடங்கினேன், ஆரம்பித்தபின், எப்படியாவது அதை முழுதும் படித்துவிடவேண்டுமென்ற பேராவல் உண்டாயிற்று. சில பாகங்கள் தவிர, நூல்முழுவதுமே எனக்கு மிக்க ஆனந்தத்தைக் கொடுத்தது. 4-மாதங்களில் அதைப் படித்து முடித்தேன். தோண்டத் தோண்ட அதிக விலை பெற்ற ரத்னங்களைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும் ஒரு சுரங்கத்துக்கு அதனை ஒப்பிடலாமேயல்லாமல், விலையிலும் அளவிலும் அடங்கிய பளபளப்புள்ள ரத்னங்களையுடைய ஒரு கஜானாப் பெட்டிக்கு பிட எனக்கு மனமில்லை. மஹாபாரதத்தை ஒரு சரித்திர புஸ்தகமாக நான் கருதவில்லை. நிலையான தத்வங்களெல்லாம் கதைகளாக அதில் விளக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிரந்தமானது, நன்மை ஜீவன்-ஜடம், தேவன்-அஸுரன், இவைகளுக்குள் பரஸ் பிருக்கக்கூடிய விரோதத்தைப்பற்றித் தெரிவிப்ப வன் ஆசிரியர், தமது அபிப்பிராயத்துக்கு ஏற்ற ந்தமான மனிதர்களையும் விஷயங்களையும் எடுத்துக்கொ பர்களாகவோ அஸுரர்களாகவோ மாற்றியிருக்கிறார். ஒடிக்கொ ருக்கையில், பல உபகதைகளையும் சில கலங்கலான சிறு நதிகளையும் மார்க்கத்தில் தன்னோடு சேர்த்துக் கொள்ளும் ஒரு மகாநதிபோன்றது இம்மஹாபாரதம். எல்லாம் ஒரு மஹா புத்திமானது அரியசெய்கை. இந்தப் புஸ்தகத்தின் முடிவு மிகவும் சிறப்பாயிருக்கிறது.

rom the "Young India"

in the "Hindu" Sep. 10, 1924. Page 15.

Mahatmaji's Jail Experiences"

His Jail Library, XI.

That which I would not have missed was the "Maha-
:ata" and the "Upanishads"; the "Ramayana" and
"Bhagavat" * * * * * The "Mahabharata" I
: never read before except in scraps. I was even pre-
:ed against it, believing (falsely as it has now turned
that it was nothing but a record of bloodshed and
:ssible long descriptions which would send me to sleep.
aded to approach the bulky volumes covering over
ly printed 6000-pages. But having once commenced
eading, I was impatient to finish it, so entrancing it
id to be except in parts. I compared it, as I finished
t months, not to a Treasure Chest in which you find
ng but polished gems limited as to quantity and
y but to an inexhaustible mine which the deeper one
he more precious ar the finds. The Mahabharata
to me a histor ord * * but it deals with
l varieties ir al fashion. It takes up
cal personage nd transforms them into
or devils as it s se of the poet whose
is the eternal du od and evil, Spirit
atter, God and Sata is like a mighty river
in its progress absorbs many streams some even
. It is the conception of one brain. * * * The
of it is magnificent. * * * *

ஸ்ரீ:

முகவுரை.

—:o:—

அன்பர்களே! ஸ்ரீகண்ணபிரானுடைய பரமகிருபையால், 1ஐந்து பர்வங்களடங்கிய இந்தப் புஸ்தகம் பூர்த்தியாகி வெளிவந்ததை மிக்க களிப்புடன் தெரிவிக்கிறேன். மற்றப் புஸ்தகங்களை வெளியிட்ட போது உண்டானதைக்காட்டிலும், இந்தப் புஸ்தகத்தை வெளியிடுவதில் எனக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகிறது. 'ஸ்ரீ மஹாபாரதம் முற்றிற்று' என்று போட்டுப் பார்க்கவேண்டுமென்று பல வருஷங்களாக இருந்த என் விருப்பம், கடவுள் அருளால், இந்தப் புஸ்தகத்தில் நிறை வேறியதன்றோ? மஹாபாரத அபிமானிகள் பலருக்கும் இது பெருமகிழ்ச்சியை விளைவிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. தங்களுக்குப் பிராயம் அதிகரிக்கிறதென்றும் ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியாகிப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் தங்களுக்கு மிகுதியாயிருக்கிறதென்றும் அடிக்கடி எழுதி என்னைத் தூண்டிய பெரியோர்கள் பலருண்டு. அவர்களுள் முக்யமானவர்கள், பரம்மஸ்ரீ, Prof. K. சிதாராம ஐயர் அவர்கள், M. A.; கொழும்பு, Hon'ble Sir. P. Ramanatham அவர்கள் K.C.C.M.G., M L C.; Late Mr. H Le. Fanu. I. C. S. அவர்கள் முதலியவர்கள். நற்சாகூபிப் பத்திரங்களில் நான் பதிப்பித்திருக்கிற அவர்களுடைய லிகிதங்களில் இந்தக் கருத்தைப் பரக்கக் காணலாம். ஸ்ரீ மஹாபாரதம் முழுதும் பூர்த்தியாயிற்றென்ற பூர்ண திருப்தி உண்டாகவிட்டாலும், 'ஸ்ரீ மஹாபாரதம் முற்றிற்று' என்று போட்டுப் பார்க்கும் அளவில் ஒரு திருப்தி உண்டாகுமென்பது நிச்சயம். எஞ்சியுள்ள உத்யோகபர்வமும் ஆரண்யபர்வமுமாகிய [illegible]யும் சில மாதங்களில் பூர்த்தியடைவித்து, மஹாபாரத அபிமானிகளுக்குப் பூர்ணதிருப்தி உண்டாகும்படி எம்பெருமான் அருள்புரிவான்.

ஸ்ரீ மஹாபாரதத்தை ஒரு 2விருக்ஷமாக உருவகம் செய்தவிடத்தில், 'சாந்தி பர்வம் ஒரு பெரும் பழம்; ஆஸ்வமேதிக பர்வம் அமிருதத்

1. இவைகளுக்கு அந்திய பஞ்சகமென்ற பெயர். மற்றவை, ஆதிய பஞ்சகம், யுத்த பஞ்சகம், சாந்தி த்ரயம் என்பன.

2 ஆதிபர்வம் 11-ம் பக்கம் பார்க்க.

முகவுரை.

[illegible]ரஸம்; ஆஸ்ரமவாஸிக பர்வம் பறவைகளுக்கு ஆதா
னான இடம்; மௌஸலபர்வம் பறவைகளின் ஒலித்தொகுதி; சிஷ்
டர்கள் இம்மரம் காத்த பறவைகள்' என்று கூறப்பட்டுளது.
ஸ்ரீ வேதவியாஸ பகவானுடைய பெருமை ஸ்ரீமஹாபாரதம் முழு
தும் நிரம்பியிருந்தாலும், ஆஸ்ரமவாஸிகபர்வத்திலுள்ள புத்ர தரி
சன பர்வத்தால், அவருடைய மிக்க ஆச்சர்யகரமான திவ்ய சக்தி நன்கு
விளங்குகிறது. மஹாப்ரஸ்தானிக பர்வத்திலும் ஸ்வர்க்காரோஹண
பர்வத்திலும் அடங்கிய கதையால், பாரத வீரர்களுக்கு அவரவர்களு
டைய குணகர்மங்களுக்குத் தக்கபடி மறுமைப்பயன் கிடைத்ததும்,
கதாநாயகராகிய யுதிஷ்டிரருடைய எந்த நிலைமையிலும் கலங்காத மன
உறுதியும், அதனால் அவர் அடைந்த ஒப்புயர்வற்ற பெரும் பதவியும்
நன்கு விளக்கப்பட்டுள்ளன.

இத்தனைச் சிறப்புவாய்ந்த இந்தப் பர்வங்களைப் பலபண்டிதர்களைக்
கொண்டு மொழிபெயர்ப்பிக்க நேர்ந்தது. அப்படி மொழிபெயர்த்து
உதவியவர்களுள், கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ரிடயர்டு பிரதம
ஸம்ஸ்கிருத பண்டிதர், ப்ரம்மஸ்ரீ, பண்டித, R. சிவராம சாஸ்திரிகளவர்
களும், மஹாபாரத மொழிபெயர்ப்பில் பலபாகங்களை மூலத்தோடு ஒப்
பிட்டுத் தந்தவர்களும் காவ்ய சாஸ்திரங்களில் மிக்க பாண்டித்யமுள்ள
வர்களுமான ஸ்ரீ. உ. வே. குமார மங்கலம், நரசிம்மாசாரியரவர்களும்
முக்யமானவர்களாவார்கள். ஒருபண்டிதர்மொழிபெயர்த்ததை வேறொரு
பண்டிதர் ஒப்பிட்டுப்பார்த்து, அவர்களுக்குத் தோற்றுகிற கருத்து
வேறுபாடுகளைக் குறித்து முதலில் மொழிபெயர்த்தவர்களுக்கு அனுப்
புவதும், அவர்கள் பார்த்துத் தமக்கு உடன்பாடான விஷயங்களை
ஏற்றுக்கொள்வதும், தாம் கூறியபொருளை பொருத்தமுடையதென்று
தோன்றினால் அதற்குச் சமாதானம் சொல்வதும், பிறகு, நான் ஒப்பு
நோக்கித் திருத்திப் [illegible]ம், இந்த மஹாபாரத மொழிபெயர்ப்
பில் நான் அனுஷ்டித்[illegible] முறை. இம்முறையில், இந்தப் பர்வங்
களின் மொழிபெயர்ப்பைக் கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ்
ஸம்ஸ்கிருதபண்டிதர், மஹாவித்வான் ஸ்ரீ. உ. வே. அபிநவபட்டபாணர்,
R. V. கிருஷ்ணமாசாரியர்ஸ்வாமி மூலத்தோடு ஒப்பிட்டுக் கருத்து
வேறுபாடுகளை அங்கங்கே குறித்தனுப்பினார்கள். அவர்கள் செய்தி
ருந்த திருத்தங்கள், அவர்களுடைய காவ்யஜ்ஞானத்தையும் சாஸ்திர பரி
ச்ரமத்தையும் புத்தியின் துட்பத்தையும் நன்கு விளக்குகின்றன. அவர்
கள் காலேஜ்வேலை, வேறுமாணவர்களுக்குப் பாடம் சொல்லுதல், இரந்த

முகவுரை

ஆராய்ச்சி, கிரந்தங்கள் இயற்றுதல் முதலி
இத்தவேலையையும் சிறிதும்சலிப்பின்றிச்(
தக்கது. அவர்கள் என்னிடத்துள்ள அவ்யாஜமான அன்பு ஒன்
றையே காரணமாகக்கொண்டு கைம்மாறு கருதாமற்செய்த இத்தப்பேரு
தவியை நான் என்றும் மறவேன்.

இதுவரை வெளிவந்த பர்வங்களில் சாந்திபர்வத்தைப் பதிப்பித்த
தில் எனக்கு மிக்க சிரமம் உண்டாயிற்று. இந்த ஆரண்யகபர்வத்
திலும் பல இடங்களில் அப்படியே இருந்தது. இதில் 'அநுகீதை',
'வைஷ்ணவ தர்மம்' முதலியவற்றில் பல ஸ்லோகங்களுக்குப் பொருளும்
மற்றும் பல விஷயங்களும் நிச்சயிக்கக் கூடாமல் முட்டுப்பாடுண்டா
யிற்று. இத்தகைய பல அரிய விஷயங்களை, கும்பகோணம், மத்வ
சாஸ்திர ஸம்பூர்ணர், பாரதவல்லபம், காவே. ராமசந்திராசாரியரவர்கள்
எளிதில் விளங்கும்படி செய்தார்கள். எத்தக்காலத்தில் போனாலும்
அவர்கள் பரமதிருப்தியோடு விஷயங்களை ஐயந்திரிபின்றித் தெரிவித்து
வருகிறார்கள். இதிஹாஸ புராணங்களில் அவர்களுக்குள்ள பாண்டித்
யம் மிகப் பாராட்டத்தக்கது. அவர்கள், மஹாபாரதத்தில் ஐம்பது
வருஷங்களாக மிக ச்ரமப்பட்டு ஆராய்ச்சிசெய்து நிச்சயித்திருக்கிற
விஷயங்களை இந்த மொழிபெயர்ப்புக்கு உபயோகமாகும்படி செய்து
வருகிறார்கள். நான் இந்தமஹாபாரத கைங்கர்யத்தைத் தொடங்கிய
காலமுதல் அவர்கள் செய்துவருகிற பேருதவி எல்லையில்லாதது. நான்
நேரிலும் என் நண்பர்கள்மூலமாகவும் அவர்களுக்கு அடிக்கடி சிரமம்
கொடுப்பதைச் சிறிதும் நினையாதல், தாம் தெரிந்துகொண்டிருக்கிற
விஷயங்களை உபயோகிப்பதற்குத் தக்க ஸமயம் வாய்த்தது தமக்குப்
பரமலாபமென்று சொல்லுவார்களாதலால் அவர்களுடைய அருமைக்
குணத்தை என்னவென்று சொல்வது!

ஸம்ஸ்கிருதபண்டிதர்களுள்ளும் தமிழ்ப்பண்டிதர்களுள்ளும் இவர்
களைப்போல நூல்களை வரலாற்றுமுறையில் கற்றுத் தேர்ந்தவர்
கள் இக்காலத்தில் மிகச் சிலரே உள்ளனர். அவர்கள் அறிந்துகொண்ட
விஷயங்கள் என்றும் அழியாமல் நிற்கும்படி செய்துகொள்ளாமலிருப்
பது நமது தேசத்தார்களுடைய ஆலோசனையின்மையே. ஒரு தேசத
தின் பெருமையெல்லாம் அத்தேசத்திலுள்ள நூல்களால் வருபவை
என்பதைத் தேசாபிமானிகளென்று சொல்லிக்கொள்ளுகிற பெரியோர்
கள் சிந்திக்கவேண்டும். நமது முன்னோர்கள் அடைந்திருந்த மேலான
நிலைமையையும் அவர்களுடைய அறிவின் முதிர்ச்சியையும் அவர்களியற்
றிய நூல்களாலும் அவர்கள் செய்திருக்கிற சில்பம்முதலியவற்றாலு
மன்றி வேறு எவ்வகையால் நாம் அறிந்துகொள்ளக்கூடும்? அவைகளை
அழியாமல் காப்பதும், நம் நாட்டாரனைவரும் அவைகளை எளிதில் உண
ரும் உபாயம் தேடுவதும், நமது தேசாபிமானிகளுடைய கடமையாகும்.

இந்த மஹா பாரத கைங்கர்யத்தை மேற்கொண்டு பல வருஷங்
கள் நடத்திவந்து, மேல் நடத்த இயலாமல் மனத்தளர்ச்சியுற்று நிறுத்தி

ாழுது, இவ்வளவு நடத்திவந்து இடை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண் டுமென்னும் எனக்கு ஊக்கமுண்டாகும்படி சொல்லி, ஸ்ரீமான், ராவ் பகதூர். V. T. கிருஷ்ணமாசாரியர் அவர்கள், C.I.E. ஸ்ரீமான் R. நாரா யண ஐயர் அவர்கள், M. A. Bar-at-Law I.C.S. முதலிய பல ஆப்தர்கள் செய்துவருகிற பேருதவியைப்பற்றிச் சல்யபர்வ முக வுரையிலும் விராடபர்வம் மூன்றும்பதிப்பின் முகவுரையிலும் ஒரு சிறிது தெரிவித்திருக்கிறேன். மஹாபாரதப்பதிப்புவேலை முழுதும் சில மாதங்களில் பூர்த்தியாகுமாதலாலும், அப்பொழுது, நூல் முழுதுக் கும் ஒரு முகவுரை எழுதப்படுமாதலாலும், இதனை ஆதரித்துவருகிற பரமோபகாரிகளுடைய பேருதவிகளை அதில் விவரமாகத் தெரிவிப் பேன்.

திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர்களாகிய மஹாகனம் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்கள், இளமை தொட ங்கி என்னிடத்து மிக்க அன்புடையவர்களாகையாலும் இந்த ஸ்ரீமஹா பாரத மொழிபெயர்ப்பை ஆரம்பமுதல் மிக்க ப்ரத்தையுடன் படித்து வருபவர்களாகையாலும், இதற்கு வேண்டிய உதவிகளை, அந்த ஆதீனத் திலுள்ள வழக்கப்படி, அப்போதப்போது குறிப்பறிந்து செய்துவரு கிறார்கள். அவர்களுடைய அன்புடைமையை நான் என்றும் மற வேன். அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் அளித்தருளும்படி எல் லாம் வல்ல ஸர்வேச்வரனைப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமஹா பாரத கைங்கர்யத்தைத் தலைக்கட்டிவைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற பரம ஆப்தர்கள், கையெழுத்துப்பிரதியைப் பல அச்சுக்கூடங்களில் பிரித்துக்கொடுத்து வேலையை விரைவாக நடத்தி முடிக்கவேண்டுமென்று நேரிலும் லிகிதமூலமாகவும் அடிக் கடி என்னைத் தூண்டுகிறார்கள். அது எனக்குப் பேருக்கத்தை அளிக்கின்றது. நான் இதைத்தவிர வேறு ஒரு கார்யத்திலும் ஸம்பந்தம் வைத்துக்கொள்ளவில்லை. எனக்கு வேறு ஒன்றிலும் ஞாபகமுமில்லை. அப்படியிருந்தும், நான் தனியே செய்யக்கூடிய கார்யமாக இல்லாமையாலும், விஷயம் மிகக் கடினமாயிருத்தலாலும், பல ஸௌகர்யங்களை எதிர்பார்க்க வேண்டியிருத்தலாலும், நான் எவ் வளவு முயன்றும் இங்ஙனம் தீர்மதமாகிறது. இதனால், ஆப்தர்களுக்கு ஊக்கக் குறைவு உண்டாகாமலிருக்கவும், பல வருஷங்களாக மிக்க சிர மத்துடன் நடைபெற்றுவருகிற இந்த அரிய பெரிய நற்காரியம் சில மாதங்களில் பூர்த்தியடையவும், எல்லாம்வல்ல ஸர்வேச்வரன் அருள் புரிக.

மணலூர்,
நரசிங்கன்பேட்டை, S.I.R.
6—9—1926.

இங்ஙனம்.
ம. வீ. இராமானுஜாசாரியன்.